Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20.

# ஈழநாடு

சுதந்திர வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விகாரி, வைகாசி 16-ஆம் நாள். (30-5-59) சனிக்கிழமை இதழ் 17.

எல்லாவித மின்சார வேலைகளுக்கும் எங்களைக் கலந்து ஆலோசியுங்கள்

சிலோன் எலக்றிக்கல்ஸ்

180, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# தமிழரின் ஆதரவைப்பெற பிரதமரின் முயற்சி

## புதிய மந்திரி சபையில் தமிழரை நியமிக்கத் தயார்

### யாழ்ப்பாணத்துக்குப் பிரதமர் விரைவில் விஜயம்செய்வார்

### இருமாகாணங்களிலிருந்தும் இராணுவம் வெளியேறுமா?

— நமது அரசியல் நிருபர் —

**யாழ்ப்பாணத்துக்கு வெகுசீக்கிரத்திலே தமது மனைவியாருடன் பிரதமர் பண்டாரநாயக்கா விஜயம் செய்வாரென்று தெரிகிறது.**

**அதற்குமுன் வடமாகாணத்திலிருந்தும் கிழக்கு மாகாணத்திலிருந்தும் இராணுவத்தை 'வாபஸ்'பெறுவார்.**

**இப்போது அவர் திருத்தி அமைத்துவரும் மந்திரி சபையில் முடிந்தால் ஒன்று அல்லது இரண்டு தமிழரை நியமிக்கவும் தயாராகவுள்ளாராம்.**

**பார்லிமெண்டில் தமது கட்சிக்கு 'மெஜாரிட்டி' பலம் இல்லாததால், கூடுமானவரை தமிழரைத் திருப்திசெய்து அவர்களது ஆதரவைப் பெறவும், அது முடியாவிட்டால், அவர்களது எதிர்ப்பாவது இல்லாமற் தடுத்துக்கொள்ளவும் பிரதமர் இப்போது அதிக ஆவலுள்ளதாக அறிகிறேன்.**

திரு. பண்டாரநாயக்கா பிரதமராகி வருடங்கள் மூன்றாகியும் இதுவரை அவர் யாழ்ப்பாணத்துக்கோ, கிழக்கு மாகாணத்துக்கோ உத்தியோகமுறையில் விஜயம் செய்யமுடியவில்லை. இது அவருக்குப் பெரிய இழுக்கு. அவர் இதை நன்கு உணர்வார்.

யாழ்ப்பாண விஜயத்தை அவர் ஒத்திவைத்து வருவதற்கான காரணம் தமக்கு விளங்கவில்லையென்றும் அவர் அங்கு விஜயம் செய்யத் தீர்மானித்தால் அவருக்கு யாழ்ப்பாணம் நல்ல வரவேற்பு அளிக்கும் என்று தாம் உறுதியாக நம்புவதாயும்,' முன்னாள் வட்டுக்கோட்டைப் பிரதிநிதியும், ஆடிட்டர் ஜெனரலும், உதவி அமைச்சருமாக இருந்த யாழ்ப்பாணத்து முதுபெரும் கிழவரான கே. கனகரத்தினம், பகிரங்கமாக ஒரு கூட்டத்தில் தெரிவித்தார்.

இந்த உறுதிமொழி பிரதமருக்குப் புதிய நம்பிக்கையும், தைரியமும் அளித்துள்ளதாயும் தமிழரின் அபிமானத்தைப் பெற அவர் மிக ஆவலுள்ளதாகவும், ஆகவே அவர் கூடிய சீக்கிரத்தில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வாரென்றும் தெரிகிறது.

இதுவரை அவர் அப்பகுதிகளுக்கு விஜயம்செய்ய முடியாதுபோனதிற்குக் காரணம் என்ன? வடமாகாணத்தின் மீதும், கிழக்கு மாகாணத்தின் மீதும் அலட்சியமா? இல்லை இல்லை. தனிச்சிங்களச் சட்டத்தை நிறைவேற்றியதால், தமிழ்மக்கள் ஆத்திரமடைந்துள்ளதாகவும், அங்கு சென்றால் தமக்கு நல்ல வரவேற்புக் கிடைக்காதென்றும் எதிர்ப்புக் கிளர்ச்சிகள் கிளம்பி மரியாதை இழந்து திரும்பவேண்டியிருக்குமோ என்றும் அவருக்குப் பீதி. அவரது மனச்சாட்சியே குறுக்கே நின்றது. தமது மந்திரி சகாக்களில் சிலரது அனுபவமும் அவருக்கு எச்சரிக்கையாக இருந்துவந்தது.

**பண்டா—செல்வா ஒப்பந்தம்**

ஆனால் தனிச்சிங்களச் சட்டத்தை நிறைவேற்றியபின் அவர் சும்மா இருக்கவில்லை. தமிழரின் மனம் புண்பட்டிருப்பதை உணர்ந்து சமஷ்டிக் கட்சித் தலைவர் திரு. செல்வநாயகத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார். அதில் தமிழ்ப் பகுதிகளிலே தமிழை அரசாங்க நிர்வாகத்துக்குப் பயன்படுத்தவும், பிரதேச சபைகளை அமைத்து, மண்டல சுயாட்சிக்கு வழிசெய்யவும் ஒப்புக்கொண்டார். குடியேற்றத் திட்டங்களில் யாரைக் குடியேற்றுவதென்று நிர்ணயித்துக் கொள்ளவும் பிரதேச சபைக்கு உரிமையளிக்கவும் சம்மதித்தார். தமிழரைத் திருப்திசெய்யவேண்டும் என்ற

(9-ம் பக்கம் பார்க்க)

## வானவெளியில் அமெரிக்க வானரம்

அமெரிக்கா வான மண்டலத்திற்கு இரு குரங்குகளை 'ஜுப்பிட்டர்' ஏவுகருவியில் வைத்து வானவெளிக்குச் சென்ற வியாழக்கிழமை அனுப்பியது. அந்த இரண்டு குரங்குகளும் 1500 மைல் தூரம்வரை பிரயாணம் செய்துவிட்டுப் பூமிக்குத் திரும்பியுள்ளன. உயிருள்ள பிராணிகளை ஏவுகருவியில் வானவெளிக்கு அனுப்பிப் பின் உயிருடன் அவற்றைத் திருப்பப் பெற்றது, அமெரிக்காவில் இது தான் முதல் தடவையாகும்.

குரங்குகளை அனுப்பிய ஏவுகருவியில், மிக நுண்ணிய கருவிகள் அமைக்கப்பட்டிருந்தன. வான வெளியில் பிரயாணம் செய்த குரங்குகளில் ஏற்பட்ட மாறுதல்கள் முதலியன பற்றிய முக்கியமான தகவல்களை எல்லாம் இக்கருவிகளின் மூலம் அறிய முடியுமாம். குரங்குகள் சுகமாகத் திரும்பி வந்திருக்கின்றன. இந்த வெற்றிப் பிரயாணத்தின் மூலம் வானவெளியில் மனிதர் பிரயாணம் செய்வதற்கு ஏதுவான பல முக்கிய தகவல்களை அறியக்கூடிய வசதிகள் உண்டு என்று அமெரிக்க வட்டாரங்களில் நம்பப்படுகிறது.

ஒரு ரூபாவுக்கு மிகுதியான மைல்கள்

பிரிட்ஜ்ஸ்டோன் டையர்கள்

BRIDGESTONE TYRES

Distributors

TUCKERS AUTODROME

ஏகவிநியோகஸ்தர்கள்

ஓட்டோஸ் லிமிடெட்

யாழ்ப்பாணம்

போன்: 49 தந்தி: "ஓட்டோஸ்"

## ஆளிருக்க நிழலை அடித்தல் அர்த்தமற்ற ஒரு செயல்

அனுராதபுரம்

தமிழ்மக்களிடையே சமீபகாலமாக எழுந்துள்ள கிளர்ச்சிகளின் விளைவையும், அவை எம்முறையில் அமைந்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும் என்பதையும் அறியும் ஒரு வாய்ப்பு அனுராதபுரத்து மக்களுக்குக் கிடைத்தது.

வெஸாக் விழாவன்றே உலகம் புகழும் வள்ளுவர் பெருமான் திருநாள் வந்ததால், இங்குள்ள இரு பெரும் பாடசாலைகளில் 20-5-59 இல் வள்ளுவர் விழா கொண்டாடப்பட்டது. அர்ச். சூசையப்பர் கல்லூரித் தமிழ் மாணவர் சங்க ஆதரவில் நடைபெற்ற வள்ளுவர் விழாவில், கல்லூரி அதிபர் வண பிதா டி. எ. ஜே. மதுரநாயகம் சுவாமிகள் பேசுகையில், யாழ்ப்பாணப்பகுதியில் 'சிங்கள ஸ்ரீ' எதிர்ப்பு இயக்கம் தோன்றியிருப்பதை எடுத்துக் கூறி, தமிழுணர்ச்சியைக் காட்டும்முறை அதுவல்ல என்று விளக்கினார். அதுபற்றி அவர் பேசியதாவது:

"ஆளிருக்க நிழலை அடிப்பது அர்த்தமற்றது. அதேபோலத்தான் தமிழ் மாணவர்கள் தம் மொழியைச் சிறப்பாகக்கற்றுக் கொள்ளாமல், பிறமொழியைத் தூற்றுவதும் எதிர்ப்பதுமாகும்! சென்ற டிசெம்பர் மாதத்தில்பெரும்பான்மையானமாணவர்கள் சித்தியடையாமல் போனதன் காரணம், அவர்கள் தம் சொந்த மொழியிலேயே திருத்தமாக எழுதப்பயிலாததே! மாணவர்கள் கொச்சைத் தமிழைப் பேசுவதையும் எழுதுவதையும் உடனடியாக நிறுத்த வேண்டும். அதுவே திருவள்ளுவருக்குத் தமிழர்கள் செய்யும் பெரும் விழாவாகும்"

**விவேகானந்த வித்தியாலயத்தில்**

விவேகானந்தா வித்தியாலயத்தில் நடைபெற்ற விழாவில் ஆசிரியர் சீ. சிவப்பிரகாசம் பேசும்போது கூறியதாவது:

சைவம், பௌத்தம், சமணம், வைஷ்ணவம் ஆகிய மதங்கள் எல்லாம் தம்முடையது என்று உரிமை பாராட்டும் ஒரே நூல் திருக்குறள். முஸ்லிம்களின் கொள்கையும், கிறிஸ்துவின் கொள்கையும் இதில் இணைந்தே இருக்கின்றன. சைவப் புலவர் திரு. சி. அருளம்பலம், வடமத்தியமாகாண வித்தியாதரிசி திரு. ஆ. சிவகுரு ஆகியோரும் பேசினர். விவேகானந்த வித்தியாலயத் தலைமையாசிரியர் திரு. ந. நவரத்தினம் தலைமை தாங்கினர்.

**தமிழ்க் கழகம்**

அனுராதபுரத் தமிழ்க் கழகம் வள்ளுவர் விழாவை 30-5-59 சனிக்கிழமை கொண்டாடச் சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளது. பலாலி அரசினர் கல்லூரியைச் சேர்ந்த தமிழ்ப் பேராசிரியர் பண்டிதர் திரு. பொன். கிருஷ்ணபிள்ளையும், ஆசிரியர் பண்டிதர் வித்துவான் திரு.இ. திருநாவுக்கரசும் இவ் விழாவிற் பங்குபற்றி விரிவுரை ஆற்றுவார்கள். அனுராதபுர மாவட்ட நீதிபதி திரு. வி. கே. கந்தசாமி தலைமை தாங்குவார்.

## ஜனநாயக அடிப்படையில் மூளாய் ஆஸ்பத்திரியின் சாதனை

மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரியின் வளர்ச்சியில் சுகாதார மந்திரியாக விருந்தபொழுது பிரதமர் பண்டாரநாயக்கா மிகுந்த அக்கறை காட்டியுள்ளார். அவருடைய முயற்சியின் பயனாகவே, ஆஸ்பத்திரிக்கு ஒரு லட்சம் ரூபாய் கிடைத்தது. இதற்காக யாழ்ப்பாண மக்கள் நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளனர்.

இவ்வாறு மூளாய்க் கூட்டுறவு ஆஸ்பத்திரியில் புதிதாக நிறுவப்பட்டுள்ள நிர்வாகப்பகுதிக் கட்டடம் திறந்துவைக்கப்பட்டபின் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் முன்னாள் கணக்குப் பரிசோதகரும், எம். பி. யுமான திரு. கே. கனகரத்தினம் கூறினர். அவர் மேலும் பேசியதாவது:

பிரதமர் பண்டாரநாயக்காவும், சேர் ஒலிவர்குணதிலக்காவும் யாழ்ப்பாணத்துக்கு வராதிருப்பது வருத்தத்திற்குரியதே. சேர் ஒலிவரின் அரசியல் வாழ்விற்கு யாழ்ப்பாண மக்கள் துணைநின்றதுடன், இங்குள்ள பகுதிகளுக்கு அவர் செய்த சேவைக்கு நன்றியுள்ளவர்களாகவும் இருக்கின்றனர். யாழ்ப்பாணத்துக்கு வருமாறு பத்திரிகைகள் மூலம் நான் அவரை வேண்டுகின்றேன். அவர் இந்த அழைப்பை ஏற்றுக்கொள்வாரெனவும் நம்புகிறேன்.

உணவு, விவசாய மந்திரி சபையின் நிரந்தர காரியதரிசி திரு. கே. ஆழ்வாப்பிள்ளை புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார். மூளாய்க் கூட்டுறவு ஆஸ்பத்திரியின் தலைவரான முதலியார் பி. எம். சங்கரப்பிள்ளை கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் சனநாயக அடிப்படையில் மூழாய்க் கூட்டுறவுச்சங்கம், கூட்டுறவுக் கருத்துக்களைப் பரீட்சித்து வெற்றிபெற்றுள்ள ஓர் இயக்கமாகுமெனக் குறிப்பிட்டார்.

## இராணுவ வீரரின் காடைத்தனம்

**யா**ழ்ப்பாணத்திலும் மற்றும் பகுதிகளிலும் சமீபகாலத்தில் இராணுவத்தினர் செய்து வரும் அடாத செயல்கள் மக்களிடத்தே மிகுந்த பீதியை உண்டாக்கிவருகின்றன. சென்றவாரம் கொக்குவில் கலட்டி ரோட்டில் நடைபெற்ற அசம்பாவிதம் நாடு முழுவதிலும் பரபரப்பை உண்டாக்கியுள்ளது. இதுசம்பந்தமாக எழுதப்பட்டுள்ள ஆசிரியரின் குறிப்பை 8ஆம் பக்கத்திற் பார்க்கவும்.

# தத்தளிக்கும் உலகுக்கு வள்ளுவன் காட்டும்வழி

## மாசிலா வாழ்வே மாண்பு மிக்கது

### சுழிபுரம் திருக்குறள் மாநாட்டில் அறிஞர்கள் அறிவுரை

தமிழ்மொழியின் பரந்த தன்மைக்கும் அகன்று விரிந்த செழுமைக்கும் இலக்காகவுள்ள நூல்கள் பலவற்றினும் மிக மிக உயர்ந்த இடத்தைப் பெற்றிருப்பது திருக்குறள் ஒன்றேயாகும். அதன் நுணுகிய புலமை தெரிந்தே அகில உலகிலுமுள்ள பல மொழிகளும் தம்முள் அதனை இணைத்துக் கொண்டன.

இத்தகைய செம்மைசான்ற நூலுக்கு வருடாவருடம் விழா வெடுத்துச் சிறப்பித்துத் தமிழர் பலர் கொண்டாடி வருவது தமிழ்மொழிக்குச் செய்யும் மகத்தான சேவையாகும். இச் சேவையையே தமிழ் மறைக் கழகம் சென்ற ஏழு ஆண்டுகளாகச் செய்துவருகின்றது.

அகில இலங்கைத் தமிழ் மறைக்கழகத்தின் இவ்விழா கடந்த 22-5-59 வெள்ளிக் கிழமை சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியிற் கோலாகலத்துடன் ஆரம்பமாகியது. அன்று சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி விழாக்கோலம் பூண்டு, யாழ்ப்பாணத்தின் பலபகுதிகளிலுமுள்ள மக்களனைவரையும் தன்பால் இழுத்துக்கொள்ளும் பெற்றிவாய்ந்திருந்தது.

ஏட்டுச்சுவடி ஊர்வலம் ஒன்றை வள்ளுவர் உருவப் படத்துடன் நடாத்திய பின்னர் விழாவை ஆரம்பித்தமை வரவேற்கத்தக்கது.

கடந்த ஆண்டில் இவ்விழாவை நடத்தவேண்டி ஆவன செய்தும் வகுப்புக் கலவரத்தின் காரணமாகச் சோர்ந்திருந்த விக்டோறியாக் கல்லூரியைச் சார்ந்தவர்கள் தமது சோர்வை இம்முறை தீர்த்துக்கொண்டனர். கடந்த ஆண்டில் ஏற்பட்ட தோல்வியை எதிர்த்து வெற்றிகண்ட தன்மை வரவேற்புரை நிகழ்த்திய கல்லூரி அதிபர் திரு. ச. சுப்பிரமணியம் அவர்களினது பேச்சிலும், தலைமையுரை நடத்திய திரு. கா. பொ. இரத்தினம் அவர்களினது பேச்சிலும் விரவியிருந்தது. பலநாடுகளிலும் வாழும் தமிழர்கள், உலகெங்குமுள்ள தமிழர்கள் ஒன்றுபடல் வேண்டுமென்று இப்போது வெளிப்படையாகக் கூறுகிறார்கள். அரசியற்றுறை தவிர்ந்த ஏனைய துறைகளிலே உலகத்தமிழர் ஒன்றுபடுவதை உலகமக்கள் யாவருமே வரவேற்பரெனத் தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

முதல்நாள் விழாவில் அகில இலங்கைத் தமிழ்மறைக் கழகம் நடாத்திய கட்டுரைப் போட்டி, அகில இலங்கைத் தமிழ்மறைத் தெரிவுப் பரிசில்கள், சுதந்திரன் திருவள்ளுவர் திருநாள் வெண்பாப்போட்டி, வீரகேசரி இளங்கதிர் திருக்குறள் கட்டுரைப்போட்டி ஆதியனவற்றில் வெற்றியீட்டிய மாணவமாணவிகளுக்குப் பரிசில்களை வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கம் வழங்கினார். அவர் தமது பேச்சில் தமிழினம் வள்ளுவரின் அன்புநெறியிற் செல்லுமேயாயின், சுபிட்சம் நிச்சயமெனவும், நம்நாட்டு இளைஞர் வள்ளுவர் மொழிக்கேற்ப வாழமுயற்சிக்கவேண்டுமெனவும் உணர்ச்சியுடன் குறிப்பிட்டிருந்தார்.

"திருக்குறட் கட்டுரைகள்" எனும் நூல் பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் அவர்களால் வெளியிடப்பட்ட அம்சம். சிறப்பாக அமைந்திருந்தது. திரு. கா. பே. முத்தையா "அரசியலறிஞர் வள்ளுவர்" எனும் பொருள்பற்றிப் பேசினார். இன்றைய அரசியற் கண்ணோட்டத்துடன் வள்ளுவரின் ஆழ்ந்த அரசியல் ஞானத்தைச் சபையோருக்கு விளக்கி வைத்தார். திரு. பொன். முத்துக்குமாரன் அவர்கள் "திருக்குறள் மாண்பு" எனும் பொருள்பற்றிப் பேசினார். அவர்பேச்சு மிகத் தெளிவாக அமைந்ததுடன், உள்ளத்திலே பதியவும் செய்தது. அடிமைத்தளையிற் கட்டுண்டு வாழ்ந்த தமிழ்மக்களுக்கு விடுதலை உணர்ச்சியை ஊட்டினான் வீரகவி பாரதி. இதே விடுதலை உணர்ச்சியைத் தமிழ் மக்களுக்கு வள்ளுவன் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கூறிவிட்டானெனவீரமுழக்கம் செய்தார் வித்வான் முத்துக்குமாரன். பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் "குறள்கண்ட அறங்கள்" எனும் பொருள்பற்றி விளக்கம் தந்தார். அவர் வள்ளுவர் கண்ட அறம் ஒன்றே என்றும் அதுதான் வையத்து வாழ்வாங்கு வாழும் அறம் என்றும் கூறினார். அவர் பேச்சில் நகைச்சுவையும் கருத்தும் இணைந்து ஓடின. கங்கையும் காவேரியும் பாயும் ஊர்களில் உள்ளவர்கள், அவற்றின் நீரில் அதிகம் குளிப்பதில்லை. அதுபோலவே, தமிழர் வள்ளுவரைப்பற்றிக் கூட்டங்கள் கூடிப் பிதற்றுகின்றார்களேயன்றி, வள்ளுவனை உளத்திலிருத்தி அவன் கூறியவண்ணம் ஒழுகுவதில்லையெனப் பேராசிரியர் கூறிய உண்மை தமிழினத்தின் இன்றைய நிலையில் ஏற்றதொன்றாக இருந்ததெனச் சபையிலிருந்த அறிஞர்கள் பேசிக்கொண்டனர்.

#### இரண்டாம் நாள்

இரண்டாம்நாள் நிகழ்ச்சிகள் பேராசிரியர் க. ச. அருணந்தியின் தலைமையில் நடைபெற இருந்தபோதிலும், அவர் விழாவிற்கு வரமுடியாத காரணத்தினால் வட்டுக்கோட்டை திரு. அ. அமிர்தலிங்கம் தலைமை தாங்கவேண்டியதாயிற்று.

வேலையில்லையென்று கூச்சல் போடும் வாலிபர்களைப் பார்த்து நிலமகள் சிரிக்கின்றாளென வள்ளுவன் கூறுகின்றான். ஆகவே, நம் இளைஞர் வள்ளுவன் காட்டிய வழியைப் பின்பற்றி உழவுத்தொழிலை மேற்கொண்டு நமதுபொருளாதார நிலையைச் சீராக்கவேண்டும் என அவர் தமது உரையிற் கூறினார்.

இந்த இருபதாம் நூற்றாண்டிலே விஞ்ஞானம் அதிவிரைவாக முன்னேறிக்கொண்டு வருகிறது. ஆனால், மனிதனுக்கோ இன்னும் வாழும்வழி தெரியவில்லை. எங்குபார்த்தாலும் கலகமும், பூசலுமே காணப்படுகின்றன. உலகம் அறவழியில் நிற்கவிரும்பின், வள்ளுவன் வாய்மொழிபோல் அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் நான்கும் களைந்த வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமென வித்வான் க. கிருஷ்ணபிள்ளை, 'வள்ளுவர் காட்டும் அறவாழ்வு' பற்றிப் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

'உலகளந்த ஈரடிகள்' என்னும் பொருள்பற்றிப் பேசிய திரு. கே. வி. செல்வத்துரை வானமண்டலத்தில் விஞ்ஞானிகள் செயற்கைச் சந்திரன்களை மிதக்கவிட்டு உலகைப் பிரமிக்கச்செய்தபோதிலும், இந்த விஞ்ஞானிகளே கண்டுபிடிக்க முடியாத உண்மைகளை வள்ளுவன் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உலகுக்கு அளித்துவிட்டான் எனக்கூறி, மனத்துக்கண் மாசிலாத வாழ்வு வாழ்வதே அறவாழ்வு என்பதை விளக்கிவைத்தார்.

இவ்விழாவில் பெண் பேச்சாளர் ஒருவரும் இல்லையே என்ற குறையைத்தீர்த்துவைக்கும் முறையில், திருவாட்டி சத்தியதேவி துரைசிங்கம் மேடையில் தோன்றி, இனிய விரிவுரையாற்றினார். இன்று சமுதாயத்தில் தோன்றியுள்ள நோய் அரசியல் நோய் எனக் குறிப்பிட்ட திருவாட்டி துரைசிங்கம், இந்நோய் தோன்றுவதற்கான காரணங்கள்மனிதர்களிடையே ஏற்படும் போட்டியும், பூசலுமேயென எடுத்துரைத்தார். அரசியல் குரங்குகள் நம்மை ஆட்டிவைப்பதற்கு இவைதான் மூலகாரணமெனவும் குறிப்பிட்டார்.

பேராசிரியர் ஞானசம்பந்தன் "குறள் கண்ட இன்பம்" பற்றிப் பேசும்பொழுது, சபையில் புதியதோர் ஆர்வம் நிலவியது. அன்னாரின் பேச்சை அனைவரும் அமைதியாக இருந்து கேட்டு ரசித்தனர். உலக வாழ்க்கையையே காமத்துப் பாலுக்கு அடிப்படையாகக் கொண்டு, அதில் உணர்ச்சி வெள்ளத்தை ஓடவிடுகின்றான் வள்ளுவன். இன்பத்தின் அடிப்படை உடலன்று; உள்ளம் தான் என்பதை வள்ளுவன் வலியுறுத்திக் கூறுகின்றான். மேனாட்டு மனத்தத்துவ நிபுணரைப் போன்று வள்ளுவன் உடலிலிருந்து உள்ளத்தை ஆராயப் புகவில்லை; உள்ளத்திலிருந்தே உடலுக்குச் செல்கின்றான். இக்கூற்றே பேராசிரியரின் பேச்சில் விரவி நின்றது.

#### மூன்றாம் நாள்

மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள் வடபகுதிக் கல்விஅதிகாரி திரு. எஸ். யூ. சோமசேகரம் தலைமையில் நடைபெற்றன.

தலைவர் தமது உரையில், திருக்குறள் எல்லாச் சமயங்களுக்கும் உரிய உண்மைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றதெனக் குறிப்பிட்டார்.

தலைவருடைய பேச்சின்பின், கலாநிதி வ. பொன்னையா 'வள்ளுவன்கண்ட துறவு' என்னும் பொருள்பற்றிப் பேசினார். அவருடைய பேசசு புதுமைக் கருத்துக்களுடன் விளங்கியது.

'பிறநூல்களில் வள்ளுவர்' என்னும் பொருள்பற்றிப் பண்டித வித்துவான் திரு. க. கி. நடராசன் நிகழ்த்திய சொற்பொழிவு அறிஞர்களுக்கு அரியதொரு விருந்தாகஅமைந்தது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதன் மூலம் மனிதன் தெய்வமாகிவிட முடியும் என்பது வள்ளுவன் கூற்று. தெய்வத்தன்மை மனிதனுக்கு அப்பாற்பட்டதொன்றல்ல என்பதை மிக விளக்கமாக எடுத்துக் காட்டினார், 'குறள் கூறும் சமயம்' என்னும் பொருள்பற்றிப் பேசிய திருவாட்டி அமிர்தாம்பிகை சதாசிவம்.

'குறள் கண்ட அரசு' பற்றிப் பேராசிரியர் ஞானசம்பந்தன் கூறியதாவது: வள்ளுவன் கற்பனை செய்த நாடு தமிழ் நாடே

(15ஆம் பக்கம் பார்க்க)

# பொருளாதார விருத்தி

## இளைஞர்களுக்குச் சங்கத்தின் உதவி

யாழ்ப்பாணம்

'படித்துவிட்டு வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்கு இம்மாதிரியான சமூக பொருளாதார விருத்திச் சங்கம் உதவி அளிக்கின்றது. இத்தகைய சங்கம் யாழ்ப்பாணத்தில் இருப்பது எங்கள் அதிர்ஷ்டமேயாகும். இவ்வாறு சமூக பொருளாதார விருத்திச் சங்கம், கில்னர் பாடசாலையில் சென்ற திங்கட்கிழமை நடாத்திய ஆண்டு விழாவில், யாழ்ப்பாண அரசாங்க அதிபர் ஸ்ரீ காந்தா தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

அன்று அங்கு பயிலும் மாணவர்களால் செய்யப்பட்ட பல விதமான பொருள்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

ஐந்துவால்வுள்ள ரேடியோ, பற்றறியால் இயங்கும் பஸ், பனை ஓலையால் செய்யப்பட்ட பஸ் இவைகளெல்லாம் மின்சாரப் பகுதியிலும், புத்தகம் வைக்கும் அலுமாரி, மேசை, கதிரை, கட்டில், கண்ணடி பொருத்தப்பட்ட மேசை, அகப்பை முதலியன கைத்தொழிற் பகுதியிலும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

தையற் பகுதியில் வைக்கப்பட்டிருந்த சித்திரத் தையல் வேலைகள் மாணவிகளின் திறனை எடுத்துக் காட்டின.

திருமதி கிறீன், மாணவர்களுக்குத் தராதரப் பத்திரங்களை வழங்கினார்.

அசைஸ் கமிஷனர் டாக்டர் தம்பையா பேசியதாவது: போர்த்துக்கேயர் காலந்தொட்டு ஆங்கிலேயர் காலம்வரை மாணவர்கள் புத்தகப் படிப்பில் மட்டுமே பயிற்றப்பட்டார்கள். ஆனால் இன்று கைத்தொழிற் படிப்பும் தேவைப்படுகின்றது. இத்துறையில் சங்கம் செய்துவரும் முயற்சியைப் பாராட்டுகின்றேன். சாதி வேற்றுமைகள் கைத்தொழில் விருத்திக்குத் தடையாக இருக்கின்றன. இந்நிலை மாறி அனைவரும் சகல துறைகளிலும் ஈடுபடவேண்டும்.

ஆசிய உதவிநிதிச் சங்கத்தின் தலைவரான திரு. கிறீன் பேசுகையில் "கல்வி கற்றலே யாழ்ப்பாணத்து மகனின் தொழில், என்றும் யாழ்ப்பாண மாணவர்கள் எந்நேரமும் ஊக்கமுடன் உழைப்பதைக்காணத் தாம் பெருமகிழ்வு அடைவதாகக் கூறினார்.

சங்கத்தின் செயலாளரான திரு. சாமுவேல் தம்பையா அனைவருக்கும் நன்றி கூறிய போது, கொழும்பிலிருந்து வந்த கிறீன் தம்பதிகளுக்கு சங்கத்தின் சார்பில் நன்றி தெரிவித்தார். சங்கத்தின் வளர்ச்சிக்காக உழைத்த முன்னாள் செயலாளர்களுக்கும் ஏனைய தொண்டர்களுக்கும் பயிற்றும் ஆசிரியர்களுக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.


## வரி விளம்பரம்

சிறந்தமுறையில் "ரைப் பிறைற்றிங்" சொல்லிக்கொடுக்கப்படும். ஜோஸ் அன்ரூ, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

சுருக்கெழுத்தில் பட்டம் பெறுவதற்கு ஜோஸ்அன்ரூவை ஆலோசியுங்கள்—4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

உத்தரவாதத்துடனும், குறைந்த செலவிலும் சுருக்கெழுத்துப் படிப்பதற்கு, ஜோஸ் அன்ரூ, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

சிறந்த போட்டோக்களுக்கு பாரத் ஸ்ரூடியோ,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் .

### விற்பனைக்கு

உங்கள் வீட்டுக்குத் தேவையான எல்லாவித பொருள்களுக்கும் 286க்கு போன் செய்யுங்கள்.

உங்கள் வீட்டுக்குப் பொருள்கள் வினியோகம் செய்யப்பட வேண்டுமானால் "விநோதன்ஸ்" யாழ்ப்பாணம்.

தரத்தில் சிறந்தது—வீனஸ் சோப்—கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

உடைகள் வெண்மையாக வேண்டுமானால் வீனஸ் சோப்—கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

உங்களுக்குத் தேவையான எல்லாவித சாய்ப்புச் சாமான்களுக்கும் **கணேசன் ஸ்ரோர்ஸ்**, 78, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

திறமான றங்குப் பெட்டிகள், சூட்கேஸ்கள், சப்பாத்து வகைகளுக்கு **கணேசன் ஸ்ரோர்ஸ்**, 78, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

பட்டு,பருத்தி, புடைவைகள் தையல் வேலைகளுக்குத் தேவையான எல்லாவித பொருள்களுக்கும் - **கணேசன் ஸ்ரோர்ஸ்**, 78, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.


# திருவள்ளுவர் நினைவுநாள்

அருள்நெறித் திருக்கூட்டத்தின் மட்டக்களப்புக்கிளையினரால் நடாத்தப்பட்ட திருவள்ளுவர்தினப் போட்டிமுடிவுகள்.

**பேச்சுப் போட்டி**

1. செல்வன்: வீ. மகாலிங்கசிவம். (சிவானந்த வித்தியாலயம், கல்லடி, உப்போடை.)
2. செல்வி: க. மகேஸ்வரி. (இ. கி. ச. பெண்கள் பாடசாலை, கல்லடி உப்போடை.)
3. செல்வி: க. உமாதேவி. (அரசினர் கல்லூரி, மட்டக்களப்பு.)

* * *

**எழுத்துப் போட்டி**

1. செல்வி: பொ. அருளம்மா. (இ.கி.ச. பெண்கள் பாடசாலை, கல்லடி உப்போடை,)
2. செல்வி: ந. உமாதேவி, (அரசினர் கல்லூரி, மட்டக்களப்பு.)

* * *

**திருக்குறள் மன்றப் போட்டி**

1. செல்வி: இ. சாந்தினிதேவி· (இ. கி. ச. பெண்கள் பாடசாலை, கல்லடி உப்போடை.)
2. செல்வன்: ந. கணேசன் (சிவானந்த வித்தியாலயம் கல்லடி உப்போடை)
3. செல்வி: த. புஷ்பராணி. (இ. கி. ச. பெண்கள் பாடசாலை, கல்லடி உப்போடை.)

**திருக்குறள் இசைப்போட்டி**
(கீழ்ப்பிரிவு)

1. செல்வன்: வீ. பாலச்சந்திரன். (அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, கோட்டைமுனை.)
2. செல்வன் தி. சோதிராசா. (இ. கி. ச. பெண்கள் பாடசாலை, கல்லடி உப்போடை.)

**திருக்குறள் இசைப்போட்டி**
(மேற்பிரிவு)

1. செல்வி: வீ. வாலாம்பிகை. (வின்சென் மகளிர் கல்லூரி, மட்டக்களப்பு.)
2. செல்வி: சி. தர்மதேவி. (இ. கி. ச. பெண்கள் பாடசாலை. கல்லடி உப்போடை).

பேச்சுப்போட்டியில் முதலிடம் பெற்றவருக்குத் "தங்கப்பதக்கமும்," எழுத்துப்போட்டியில் முதலிடம் பெற்றவருக்கு "வெண் பட்டாடையும்" ஏனையோருக்குப் புத்தகங்களும் பரிசாக வழங்கப்பட்டன. பரிசுகளை நீதிபதி அரசு வால்டன் அவர்களின் பாரியார் திருமதி அரசு வால்டன் அவர்கள் வழங்கினார்கள்.

### கம்பளையில்

கம்பளையிலுள்ள கடுகண்ணாவை ரோட்டில் அமைக்கப்பட்டுள்ள 'ஈழமணி' காரியாலயத்தில் வள்ளுவர்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவிற்குத் தலைமைதாங்கிய திரு. இராசமாணிக்கம் வள்ளுவரின் படத்தைத் திரைநீக்கம் செய்துவைத்தார். திருக்குறளின் சிறப்புப் பற்றியும், அதன் புகழ்பற்றியும் 'ஈழமணி' ஆசிரியர் 'தமிழ்ப்பித்தன்' கூறினார்.

### உடுவில்

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையின் இலக்கியசங்க ஆதரவில் வெள்ளிக்கிழமை (22-5-59) காலை, கல்லூரி மண்டபத்தில் ஆசிரியர் திரு. மா. கணேசமூர்த்தியின் தலைமையில் வள்ளுவர் விழா நடைபெற்றது.

**சிங்கப்பூரின் புதிய அரசியல்திட்டம் அடுத்த மாதம் நடைமுறைக்கு வருகின்றது. இத் திட்டத்தின் முக்கியமான அம்சங்களை இக்கட்டுரையிற் காணலாம்.**

# சிங்கப்பூருக்கு சுயாட்சி

## புதிய அரசியல் அமைப்பு

— வ. மகாதேவன் —

சிங்கப்பூர் மலாயாக் குடாநாட்டுக்குத் தெற்கே கேந்திரத்தானமாக அமைந்திருக்கும் ஒரு தீவாகும். மலாய் குடாநாட்டுடன் புகையிரத வீதியும் மோட்டார் வீதியும் அடங்கிய முக்கால் மைல் நீளமான ஒரு தாம்போதி மூலம் இத்தீவு இணைக்கப்பட்டிருக்கிறது. மலாயாவோடு இணைக்கப்படாத ஒரு தனிப்பட்ட அரசியலமைப்பு சிங்கப்பூரில் இருக்கின்றது. இதனால் 31-8-57 இல் மலாயா டொமினியன் நாடாகிய பின்னரும் சிங்கப்பூர் தொடர்ந்து குடியேற்ற நாடாகவே இருந்து வருகின்றது. 1-6-59 தொடக்கம் ஒரு புதிய அரசியல் திட்டம் நடைமுறைக்கு வருகின்றது. இத்திட்டத்தின்படி பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரம் நீங்கலாக ஏனைய விவகாரங்களில் சிங்கப்பூருக்குப் பூரண சுயாட்சி உரிமை கிடைக்கும்.

**பருப்பம்:** சிங்கப்பூர் தீவின் மொத்த நிலப்பரப்பு 224 1/2 சதுரமைல். தீவின் நீளம் ஏறக்குறைய 27 மைல்; அதன் அகலம் ஏறக்குறைய 14 மைல். சிங்கப்பூர் நகரத்தின் விஸ்தீரணம் 31 1/2 சதுரமைல். தீவின் உயர்ந்த இடம் 581 அடி உயரமுள்ள புக்கிற்றிமா (Bukit Timah) மலையாகும். நகரத்துக்கு வெளியே உள்ள இடங்களில் றப்பர் தென்னைப் பெருந் தோட்டங்களையும், பழவகை, காய்கறிவகை பயிராகும் தோட்டங்களையும் காணலாம். அதிக வருமானம் துறைமுகத்திலிருந்தும், விமானத் துறையிலிருந்தும் கிடைக்கின்றது. தென்கிழக்கு ஆசியாவின் பெரிய துறைமுகமாகவும் மலாயாவின் பிரதான துறைமுகமாகவும் இருப்பதோடு பிரதான கப்பற்படை விமானப் படை தளமாகவும் விளங்குகின்றது.

**காலநிலை:** வருடச் சராசரி மழைவீழ்ச்சி: 95 அங்குலம். வருடச் சராசரி வெப்ப நிலை 74°F தொடக்கம் 87°F வரை வேறுபடுகின்றது. வறண்ட காலம் இங்கு இல்லை.

**சனத்தொகை:** மொத்த சனத்தொகை 12,92,937. இவர்களுள் மலாய்க்காரர் 1,57,610; சீனர் 9,89,011; இந்தியர் 1,01,102; ஐரோப்பியர் 19,723, ஐரோப்பிய ஆசியர் (Eurasians) 12,185 பிறசாதியினர் 13,306. பெரும்பான்மையோர் முஸ்லீம் சமயத்தவர்; ஏனையோர் பௌத்தரும் இந்துக்களும். அரசாங்க மொழி ஆங்கிலம். சீனம், மலாய், தமிழ் ஆகிய மொழிகளையும் மக்கள் பேசுகின்றனர்.

**அரசியல் வரலாறு:** 13-ம் 14-ம் நூற்றுண்டுகளில் ஒரு வளமுள்ள வியாபார நிலையமாக விளங்கிய இத்தீவை 1337 இல் யாவாப் படையினர் கைப்பற்றி நாசமாக்கினர்.

1819 இல் சேர் ஸ்ராம்போட் ரப்பிள்ஸ் (Sir Stamford Raffles) என்ற பிரித்தானியர் ஜோகூர் சுல்தானுடனும் தீவின் மலாய தேசாதிபதியுடனும் ஒரு உடன்படிக்கை செய்து பிரித்தானிய வியாபார நிலையமாக்கினூர். அப்பொழுது சிங்கப்பூரில் 150 மக்களே வசித்தனர்.

1824 இல் சுல்தான் இத்தீவை கிழக்கிந்திய வியாபாரக் கொம்பனியாரிடம் ஒப்படைத்தார். சனத்தொகை அப்பொழுது 10,000 க்கு மேல் இருந்தது.

1826 இல் சிங்கப்பூர், மலாக்கா, பினங்கு ஆகிய மூன்றும் இணைக்கப்பட்டு "ஸ்ரெயிட்ஸ் குடியிருப்புகள்" (Straits Settlements) என்ற பெயருடன் நிர்வாகம் ஆரம்பிக்கப்பட்டது.

1830 இல் "ஸ்ரெயிட்ஸ் குடியிருப்புகள்" வங்காள இராசதானியுடன் இணைக்கப்பட்டன.

1851 இல் இந்தியாவின் மகா தேசாதிபதியின் நேரடி நிர்வாகத்துக்கு மாற்றப்பட்டன.

1867 இல் பிரித்தானிய குடியேற்ற நாடுகள் காரியாலயம் நிர்வாகப் பொறுப்பை ஏற்றது.

1942 தொடக்கம் 1945 வரை ஜப்பானியரின் ஆட்சியில் சிங்கப்பூர் இருந்தது. இக்காலத்தில் அதன் பெயர் ஷோனன் (Shonan) என இருந்தது.

1946 இல் சிங்கப்பூர் தனிப்பட்ட குடியேற்ற நாடாக்கப்பட்டது.

1948 இல் மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் சட்டசபையில் அங்கத்தவராகச் சேர்க்கப்பட்டனர்.

1955 இல் நடைமுறைக்கு வந்த அரசியல் திட்டத்தின்படி சட்டசபையில் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவருக்குப்பெரும்பான்மை வழங்கப்பட்டது.

1956 இலும் 1957 இலும் புதிய அரசியல் திட்டம் குறித்து லண்டன் மாநகரில் மகாநாடுகள் நடைபெற்றன. இப் பேச்சுவார்த்தைகளின் பயனாக 11-4-1957 இல் தீவின் புதிய அரசியல் திட்டம் பற்றிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு வெளியிடப்பட்டது. இத்திட்டமே 1-6-59 இல் நடைமுறைக்கு வருகின்றது.

**புதிய அரசியல் திட்டம்:** அடுத்த மாதம் நடைமுறைக்குவரும் அரசியல் திட்டத்தின் பிரதான அம்சங்கள் பின்வருமாறு:-

1. சட்டசபையில் 51 அங்கத்தவர்கள் இருப்பார்கள். இவர்கள் அனைவரும் மக்களால் தெரிவு செய்யப்படுவர்.
2. தலைமை மந்திரி (Chief Minister) பிரதம மந்திரி (Prime Minister) என அழைக்கப்படுவர்.
3. சிங்கப்பூர் குடியேற்ற நாடு சிங்கப்பூர் நாடு (State of Singapore) என் அழைக்கப்படும்.
4. தேசாதிபதிக்குப் பதிலாக ஒரு மலாயக்காரர் நிர்வாக அதிகாரியாக இருப்பார். அவர் "யாங் டி பேட்டுலன் நெகாரா" (Yang Dipertuan Negara—Head of State) என அழைக்கப்படுவர். பிரிட்டிஷ் அரசாங்கமும் சிங்கப்பூர் அரசாங்கமும் கலந்தாலோசனை செய்தே இவரை நியமிப்பர். புதிய அரசியல் திட்டத்தின் முதல் ஆறுமாத காலத்துக்கு இப் பதவியும் ஐக்கிய இராச்சியக் கொமிஷனர் பதவியும் இணைக்கப்பட்டிருக்கும்.
5. நிதிக் காரியதரிசி, 'அட்டோனி ஜெனரல்' ஆகிய பதவிகளுக்கு மந்திரிகள் நியமிக்கப்படுவர்.
6. உள்நாட்டு விவகாரங்கள் சம்பந்தப்பட்ட அரசியலமைப்பு விதிகளைத் திருத்தும் அதிகாரம் சட்டசபைக்குஇருக்கும்.
7. தீவின் வெளிநாட்டு விவகாரமும் பாதுகாப்பும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பொறுப்பிலிருந்துவரும்.
8. உள்நாட்டுப் பாதுகாப்பு விவகாரங்களைக் கவனிப்பதற்கு ஏழு அங்கத்தவர்கள் அடங்கிய உள்நாட்டுப் பாதுகாப்புச்சபை (Internal Security Council) ஒன்று அமைக்கப்படும். இச்சபையில் மூன்று பிரித்தானியரும், மூன்று சிங்கப்பூர் வாசிகளும், மலாய் நாட்டு மந்திரி ஒருவரும் அங்கத்துவம் வகிப்பார்கள்.
9. உள்நாட்டுப் பாதுகாப்பு நீங்கிய ஏனைய விவகாரங்களில் ஏற்படும் பிணக்குகளுக்குத் தீர்வுகாண ஆலோசனைகள் கூறுவதற்கு ஒரு அரசாங்கக் குழு (Inter-Governmental Committee) நியமிக்கப்படும்.
10. சிங்கப்பூர் பிரஜா உரிமை உருவாக்கப்படும்.
11. சுதேசிகள் அல்லாத உயர் நீதிமன்ற நீதிபதிகள் உத்தியோக ஓய்வுபெறவேண்டும்
12. சிறுபான்மையோருக்குப் பாதுகாப்புகள் அளிக்கப்படும்.

**முதலாவது பொதுத்தேர்தல்:** 30-5-1959 இல் நடைபெற இருக்கும் பொதுத் தேர்தலில் சுமார் 5,89,000 வாக்காளர்கள் வாக்குகளைப் பதிவுசெய்வார்கள். வாக்களிப்பு சட்டப்படி கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது. 51 தானங்களுக்கு 15 அரசியற் கட்சிகளைச் சேர்ந்த 160 அபேட்சகர்களும், 34 சுயேட்சை அபேட்சகர்களும் போட்டியிடுகின்றனர். 194 அபேட்சகர்களுள், 134 பேர் சீனர்கள். ஏனையோர் மலாய்க்காரர், இந்தியர், பிரித்தானியர் முதலியோர். கட்சிகளுள் மூன்று (இணைப்புக்) கட்சிகள் முக்கியமானவை. அவை யாவன, ஐக்கிய முன்னணி, வலதுசாரி லிபரல் சோசலிஷ்ட் கட்சி, இடதுசாரி மக்கள் செயற் கட்சி (Peoples' Action Party).

தேர்தலின் பின் ஒரு தனிக் சட்சி அரசாங்கம் அல்லது ஒரு கூட்டு அரசாங்கம் ஆகியவற்றுள் எது பதவிக்கு வரும் என்பதை இப்பொழுது கூற முடியாமலிருக்கிறது.

புதிய அரசியல் திட்டம் திருப்திகரமாக இயங்காவிட்டால் அதைத் தற்காலிகமாக நிறுத்திவைக்கும் அதிகாரம் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு இருக்கின்றது. மோல்டாவில் அவ்வதிகாரத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் பிரயோகித்திருப்பதால் சிங்கப்பூர் அரசியல் தலைவர்களும் மக்களும் விழிப்புடன் இருக்கவேண்டியது அவசியம்.


இழந்த இரத்தத்தை விருத்தி செய்ய

ஓர் அரிய யோசனை

டாக்டர் டிஸ்கிஸன்ஸ்

**ஹெப்பற்றோ - B12**

**(Hepato - B12)**

இழந்த இரத்தத்தை விருத்தி செய்வதுடன்

பாண்டு, இரத்தமின்மை

ஆகியவற்றுக்கும் வலிமையூட்டும்

அற்புதமான மருந்து

கிடைக்குமிடம்:

**புதியமலாயன் அப்போதிக்கரீஸ் கம்பெனி**

268, ஆஸ்பத்திரி வீதி, : : யாழ்ப்பாணம்


# கிணற்று நீர் உப்பு நீர் ஆகலாம்

## புவி இயல் பேராசிரியர் எச்சரிக்கை

### வடபகுதி மக்கள் விழிப்பாயிருத்தல் அவசியம்

"இலங்கையின் வடபகுதி மேட்டு நிலமாயில்லாது ஏறக்குறைய கடல் மட்டத்திலிருப்பதனால் மிகச் சொற்ப நீரே தேக்கத்தில் இடம்பெறும். இந்தச் சுத்தமான மழை நீர்த் தேக்கப்படையின் கீழ் கடலிலிருந்து உட்சென்ற உப்புநீர் காணப்படுவது இயல்பேயாகும். ஆதலின் நாம் பூமியின் மேல் தளத்தின் கீழுள்ள நல்ல நீரைப் பயன்படுத்துவதில் விழிப்பாயிருத்தல் வேண்டும். நாம் தொடர்ச்சியாகக் கிணற்று நீரை இறைப்பதனால் அதன் கீழுள்ள உப்புநீரை மேலே வரவழைப்பதற்கு வழிதிறந்தவர்களாவோம். எனவே, குறுகிய மழைக் காலத்தில் மழை நீரை இயன்றளவு கட்டுப்படுத்தி கீழ் ஊற்றுகள் நிரம்பி அவற்றின் மட்டம் உயரச் செய்வது மக்கள் கடனும். நன்னீர்ப்படை தடிப்பாயிருந்தால் அது அதன் கீழுள்ள உப்பு நீர்ப்படையை அமுக்கி உப்பு நீர் மேல் வராது தடுத்துவிடும். இவ்வாறு இலங்கைப் பல்கலைக் கழக புவியியல் துறைத் தலைவராகப் பணியாற்றிவரும் பேராசிரியர் கே. குலரத்தினம் தாம் எழுதிய "யாழ்ப்பாண நில அமைப்பும் நீர் ஊற்றும்" என்ற கட்டுரையில் கூறுகின்றார். இக்கட்டுரை இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ச்சங்கத்தின் "இளங்கதிர்" என்ற வருடாந்த வெளியீட்டில் பிரசுரமாகியுள்ளது.

#### எம் முன்னோரின் உபாயம்

அவர் மேலும் கூறுவதாவது:- எங்கள் முன்னோர் இவ்வுண்மையை அறிந்திருந்தமையால் அவர்கள் வரட்சியான காலத்தில் குளங்களின் அடித்தளத்தில் சேர்ந்திருந்திருந்த வண்டல் மண்ணை அள்ளிக் கட்டுகளுக்குப் போடுவது வழக்கமாயிருந்து வந்தது. வண்டல் குளத்து நீரை உட்செல்லவிடாது தடுத்துவிடும். வண்டல் படிந்த குளத்தில் மழை நீர் உட்செல்ல இடமில்லை. இவ்வாறு அகற்றப்படும் வண்டல் மண் வயலுக்குச் செழிப்பளிக்கும் பசளையாயிருப்பதனால் இன்னொரு அனுகூலமும் ஏற்பட ஏதுவாகின்றது.

#### தீவுப்பகுதிகளில் தண்ணீர் தட்டுப்பாடு

"இன்னும் தீவுப்பகுதிகளில் ஆழத்திலுள்ள உப்புநீர்ப்படை மிக மேலே இருப்பதனால் நன்னீர் குறுகிய காலத்தில் முடிவானதும் உப்பு நீரே கிணறுகளில் பெறக் கூடியதாயிருக்கின்றது. அவ்விடங்களில் வண்டல்கள் மிகக் கவனமாக அகற்றப்படுவதனால் கீழூற்றுகள் நிரம்பும்"

#### வற்றாத கிணறுகளிலும் உப்பு நீர்

புத்தூர் நிலாவரை போன்ற வற்றாத கிணறுகளின் அமைப்பை விளக்கியெழுதும் போது பேராசிரியர் "அவற்றின் வற்றாத இயல்பைக் கண்டு மக்கள் அக்கிணறுகளை அடியற்றனவாகக் கருதுகின்றனர். உண்மையில் அவை அவ்வாறு வற்றாத தன்மையுடையனவல்ல. ஒரு முறை நன்னீர் முற்றாக வெளியேற்றப்படுமாயின் அதன் பின் உப்புநீர் மேல் வருவதைக் காணமுடியும்" எனக் குறிப்பிடுகின்றார்.

#### பேராசிரியரின் குறிப்புரை

பேராசிரியர் குலரத்தினம் அவர்களின் கூற்றைக் குறித்து யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் புவியியல் ஆசிரியராகப் பணியாற்றிவரும் திரு. வ. மகாதேவன் நமது நிருபரிடம் கூறியதாவது:- இயந்திரக் குழாய்கள் மூலம் ஏராளமான நீர் இறைக்கப்பட்டு விவசாயம் செய்யப்பட்டுவரும் இக்காலத்தில் யாழ்ப்பாணக் கிணறுகளில் உள்ள நல்லநீர் உப்பு நீராக மாறக்கூடிய ஆபத்தான நிலையை பேராசிரியர் குலரத்தினம் முதன்முதலாக எழுத்து மூலம் வெளியிட்டதற்கு யாழ்ப்பாண மக்கள் என்றும் அவருக்குக் கடமைப் பட்டவராகின்றனர். இந்தஆபத்தைக் குறைப்பதற்கு ஒருவழி குளங்களிலுள்ள வண்டல் படிவுகளை வருடத்துக்கு வருடம் வரட்சி காலத்தில் அகற்றி வருதலே

[6-ம் பக்கம் பார்க்க]

சுதந்திர இரத்தத்திலேதான் தெளிந்த சிந்தனை பிறக்கும்

# தேடி வந்த செல்வம்

— கசின் —

5

இறைவனின் திட்டப்படி எல்லாம் நடக்கின்றன. நாங்கள் ஏதேதோ நினைக்கிறோம்; சிந்திக்கிறோம்; வீரம் பேசுகிறோம். அந்தப்பெரிய திருவருட் சக்தியின் அணுவின் ஒரு பாகத்தை யாவது உணர்ந்தோமா?

இந்த அருமையான சந்தர்ப்பத்தில் யாழ்தேவி அனுராதபுர நிலையத்துக்குள் நுழைந்தது. நாங்கள் போய் ஜன்னல் ஓரத்தில் இருந்துகொண்டு நிலையக் காட்சிகளைப் பார்த்தோம்.

அங்கே சில பெண்களும் ஆண்களும் எங்கள் பெட்டிக்குள் ஏறினர்கள். அவர்கள் எல்லோரும் அந்நியர்கள். முன்னைய பழக்கத்தின்படி அவள் எனக்கும் ஜன்னலுக்கும் இடையில் வந்திருந்தாள்.

அங்கே வந்து புதிதாக ஏறியவர்களுக்குத் தமிழ்ப்பாஷையும் தெரியும் போலிருந்தது. அவர்களிற் சிலர் நாங்கள் சம்பாஷித்ததை அவதானித்தார்கள் போலிருந்தது. நாங்கள் மெல்லிய ஓசையுடன் பேசினோம்.

நாங்கள் இருவரும் தம்பதிகள் போன்று அருகருகே இருப்பதே எனது சிந்தனைகள் எல்லாவற்றிற்கும் ஒரு முற்றுப் புள்ளி வைப்பது போன்றிருந்தது. அதில் தோன்றிய சுகம், மூளையே வேலை செய்யாது தடுத்தது. ஒரு பெருமை தலையைக் கனக்க வைத்தது. இந்தச் சுகத்தை அனுபவித்த வண்ணம் நாமிருக்கப் புகைவண்டி வேகமாகச் சென்றுகொண்டிருந்தது.

நாங்கள் இருவரும் இன்று புதிதாகச் சினேகிதமாகி ஒன்ருய் இருக்கிறோம் என்பதை எங்களைப் பார்ப்போர் எவரும் நம்பமாட்டார்கள். ஆனல் எங்கள் நெஞ்சத்திற்குத் தெரியும். நெஞ்சம் உள்ளுக்குள் குறுகுறுத்துக் கொண்டுதானிருந்தது. அதனுடைய குறுகுறுப்பை மாற்றுவதற்காக நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம்.

அவளைப்பற்றியறியவேண்டும் என்று நான் கொழும்பிலிருந்து புறப்பட்டபொழுது தொடக்கம் நினைத்து வருகிறேன். அவளைப்பற்றி யறிய நான் முற்பட்ட பொழுதெல்லாம் வேறு பிரச்சினைகள் குறுக்கிட்டு எனது எண்ணத்தை மாற்றி விட்டன.

இப்பொழுது நான் விடாது, 'உங்கள் பெயரென்ன?' என்று கேட்டேன்.

'அதுதான் நீங்கள் அப்பொழுதே சொன்னீர்களே?

'எப்பொழுது சொன்னேன்?'

'கொஞ்சம் முந்தி, எனது பக்தன் சொன்ன பெயர்தான், எனது பெயர்' என்று அவள் புன்சிரிப்போடு சொன்னள். அந்தக் கட்டம் அவள் மனத்திரையிலிருந்து இன்னும் நீங்கவில்லையென்று அவள் பேச்சிலிருந்து தெரிந்தது.

'தே......வி; தேவி' என்று நான் கூறினேன்.

'என்ன அருச்சனை செய்கிறீர்களா?' என்று அவள் கேட்டாள்.

'பக்தன் என்ன பெயர் கொண்டழைத்தாலும் அது இறைவன் நாமமாய் அமைந்துவிடுகிறது.'

'அதுதான் பக்தனின் விசேஷம்'

'நான் தற்செயலாகச் சொன்னது; உங்கள் உண்மைப் பெயராக அமைந்து விட்டது. இது ஒரு அதிசயந்தான்.'

'நாங்கள் தற்செயலாகத்தானே சந்தித்ததும்.'

இவ்வார்த்தைகள் என்னை மீண்டும் சிந்தனையில் ஆழ்த்தின. சிறிது நேரம் மௌனம் நிலவியது.

'என்ன நீண்ட ஆலோசனை' என்று, அவள் எனது ஆலோசனையைக் கலைத்தாள். நான், 'ஒன்றுமில்லை' என்றேன். அவள் விஷயத்தை உடைத்துச் சொன்னள்.

'இவள் தானகவே வந்து உறவு கொண்டாடி பக்கத்தில் வந்து விட்டாளே; ஆர் இவள்; என்று யோசிக்கிறீர்கள்போலும்......' என்று அவள் தனது வரலாற்றைச் சொல்ல ஆரம்பித்தாள்போலும். நான் அதை அப்பொழுது உணர்ந்து கொள்ளவில்லை. உணர்ந்திருந்தால் மேலே அவளைப்பேசவிட்டு, அவள் வரலாற்றை நான் அறிந்திருப்பேன்.

'நீங்கள் யாராய் இருந்தாலென்ன? எனக்கு உங்களைப் பிடித்து விட்டது; மேலே ஆராய வேண்டிய அவசியமில்லை' என்று நான் எனது நிதானபாஷையில் விடைபகர்ந்தேன். இவ்வனுபவமற்ற வார்த்தைகள் என்னைப் பின்னர் பெரிதும் துன்புறுத்தி விட்டன.

அப்பொழுது வண்டி வவனியா நிலையத்தில் போய் நின்றது. வவனியாவில் எங்களோடு இருந்தவர்கள் எல்லோரும் இறங்கி விட்டார்கள். பெட்டி வெறுமையாய் இருந்தபோதிலும் அவள் தான் முன்பிருந்த இடத்திற்குச் செல்லவில்லை. அவள் தனது இடத்திற்குப் போவதை மறந்து வெளிக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தாள். எழுந்து போய் எதிர் ஆசனத்தில் இருந்து விடுவாளோ, என்று நான் எனக்குள் ஏங்கினேன். அவள் எழுந்து போனல் தடுத்து நிறுத்த என்னிடம் அப்பொழுது போதிய சக்தி இல்லை —துணிவில்லை.

எனது ஏக்கத்தை மாற்ற இரு வயோதிபர்கள் எதிர் ஆசனத்தில வந்து அமர்ந்தார்கள். அவர்கள் ஒரு கிழத் தம்பதிகள். இவ்வுலக அனுபவமெல்லாம் பட்டுத்தெளிந்த பழங்கள்.

அவர்கள் எதிரில் வந்து அமர்ந்ததும், எங்களுடைய கதை நின்றுபோய் விட்டது. இனி அவர்களுடைய கதையைத்தான் சொல்ல வேண்டும். எங்களுடைய கதையிலும் பார்க்க அவர்களுடைய கதை சுவையானதென நினைக்கிறேன்.

'தம்பி எங்கே இறங்கிற' தென்று கிழவர் முதலில் ஆரம்பித்தார். 'கிளிநொச்சியில்' என்று நான் சுருக்கமாகப் பதில் சொன்னேன். 'அங்கே கமம் இருக்கிறது போலும்' என்ருர் கிழவர். 'ஆம்' என்று சொல்லி விட்டு நான் தேவியைப் பார்த்தேன். 'பார்த்தாயா, உன்னைப்போல் பிழை விடாமல் கிழவன் சரியாகச் சொல்லி விட்டார்' என்பது அந்தப்பார்வையின் பொருள். அவளும் அப்பொருளை விளங்கிக் கொண்டது போல முறுவலித்தாள்.

'பிள்ளை குட்டி இன்னும் இல்லைப்போலும்' என்று கிழவி கேட்டதும் நாங்கள் இருவரும் திடுக்குற்ருேம். நாங்கள் இருவரும் செய்தபிழையை அப்பொழுதுதான் உணர்ந்தோம். இது தமிழ் நாடு, தமிழ் நாட்டிற்குள் வந்து விட்டோம் என்பதை நாங்கள் உணராது இருந்து விட்டோம். ஒருவரையொருவர் சுரண்டினேம் இனி ஒன்றும் செய்ய முடியாது. விஷயம் தலைக்கு மேலே போய் விட்டது. தமிழ் நாட்டிற்குள் தப்ப முடியாது, நாங்கள் எங்கள் தவறை மறைத்து நிலவரத்தை ஒருமாதிரிச் சமாளித்துக் கொண்டோம்.

எங்கள் மௌனத்தைக் கண்டு, 'உனக்கும் சடங்கு செய்து ஐந்தாறு வருஷங்களாகப் பிள்ளையில்லைத்தானே' என்று கிழவர் கிழவியைப் பார்த்துச் சொன்னர்.

'உங்களுக்கு உந்தக் கதை தான் நெடுக. இனி ஆச்சி வேறே சம்பந்தம் பேசினதையும் சொல்லுங்க'.

'உனக்கு ஆச்சியைப் பற்றிக் குறை சொல்லாவிட்டால் பொச்சம் அடங்காது. இஞ்சை கொஞ்சம் வெற்றிலை இடிச்சுத்தா'

'இவ்வளவு காலமாகியும் நான் இடிச்சுக் குடுத்தாற்ருன் வெற்றிலை போடுவார்.' என்று எங்களுக்குக் கிழவி பெருமையுடன் கூறிவிட்டு, பையிலிருந்து செப்புரலை எடுத்து வெற்றிலை இ[illegible]கத்தொடங்கினள்.

இருவருக்கும் ஒரு பல்லும் கிடையாது. தலைமயிர் வெண்சாமரை போன்று இருவருக்கும் அழகாக நரைத்திருந்தன. அந்த அழகான கிழத் தம்பதிகள் அந்நியோந்நியமாகவிளங்கினர்கள்.

'கமத்தைப் பார்க்க இரண்டு பேரும் தனியாகப் புறப்பட்டு விட்டீர்கள்; கமம் என்ன சீதனக் கமமோ;' என்று கிழவர் கேட்டார். நான் விடை சொல்லத் தயங்கினேன். தேவி 'ஆம்' என்று எனக்கு முந்திக் கூறினள். நான் அவளைப் பார்த்தேன்; அவள் முறுவலித்தாள்.

'பெண்கள் எப்பொழுதும் தங்கள் சீதனத்தைச் சொல்லிக் கொள்வதில் பெருமையடைகிருர்கள்' என்று கிழவர் கிழவியை அர்த்த புஷ்டியோடு பார்த்தார்.

'பெருமை ஒன்றும் இல்லை; உள்ளதைச் சொன்னல் அது பெருமையோ; இன்றைக்கும் நாங்கள் இருப்பது எங்கள் சீதன வீட்டிற்ருன்; அது ஒரு கை இராசியான வீடு; எனது பிள்ளைகள், எனது பேரப் பிள்ளைகள் எல்லோருக்கும் அந்த வீட்டிற்ருன் கலியாணம் நடந்தது. எல்லோரும் சீரும் சிறப்புமாக இருக்கிருர்கள்,' என்று கிழவி மிடுக்காகச் சொன்னள்.


'எல்லாவற்றையும் சொன்னுய்; உன்றை கலியாண வீடு எங்கே நடந்தது என்று சொல்லவில்லையே' என்று கிழவர் ஓரக் கண்ணல் கிழவியைப் பார்த்துக் கொண்டு ஒரு மாதிரிக் கேட்டார். அவர் கேட்ட விதத்திலிருந்து, அது ஒரு சுவையான சம்பவம் என்று நான் உணர்ந்தேன்.

'உங்களுக்கு வெட்கமில்லை. அதுகள் சிறிசுகளுக்கு முன்னல் என்ன கதைக்கிறது என்ன கதைக்கக் கூடாது என்று உங்களுக்குத் தெரியவில்லை; உங்களுக்கு நரைச்சதுதான் மிச்சம்.' கிழவி பெரிய கூச்சத்தோடு கோணிக்கொண்டு இவ்வளவும் சொன்னள்.

கிழவியின் பேச்சு கிழவனுக்கு மேலும் உற்சாகத்தைக் கொடுத்தது. 'இவ்வளவு வயது சென்றும் என்னடி வெட்கம்; தம்பி, நீ முதலிலேயிருந்து கதையைக் கேள்; தங்கச்சியும் கேட்டுக் கொள்;' என்று கிழவர் சொல்லத் தொடங்கினர்.

'இதுதான் உங்களோடே ஒரு இடமும் வெளிக்கிடக் கூடாது; இளந்தாரிக் கதைகளை இப்பவும் கதைக்க வெட்கமாயில்லை' என்று கிழவி தனது வெட்கத்தை மேலுங் காட்டி, பொக்கை வாய் தெரியச் சிரித்துக் கோணிக் குறுகினள். ஆனல் கிழவிக்கும் அந்தக் கதையை மீட்டும் மீட்டும் கேட்பதில் விருப்பம் இருந்தது என்பது கிழவியின் முகத்திலிருந்து தெரிந்தது. கிழவர் சொல்லிக் கொண்டு வந்த கதைக்கு இடையிடையே கிழவி குறுக்கிட்டுத் தனது வெட்கத்தைக் காட்டிக் கொண்டாள். அதைக் கதை நடுவே கூருமல் இப்பொழுதே சொல்லிவிடுகிறேன்.

(தொடரும்)



லண்டனில் புதிய றெலிவிஷன் நிலையம்

லண்டனிலுள்ள வைற் நகரம் என்ற இடத்திலே, 13 பரப்பு நிலத்தில், 9 கோடி பவுண்செலவில் இப் புதிய றெலிவிஷன் நிலையக்கட்டடம் உருவாகின்றது. இது பிரிட்டிஷ் ஒலிபரப்புக் கூட்டுறவான பி. பி. ஸி. க்காகக் கட்டப்பட்டுள்ளது. இந்த நிலையத்தில் ஏழு ஸ்ரூடியோக்கள் நிறுவப்படும்.

சிறந்த போட்டோக்களுக்கு

தொலைபேசி: 252.

தந்தி: பாரத்போட்டோ

பாரத் ஸ்ரூடியோ

படம் பிடிப்பவர்கள்

கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.

# தெய்வ மணங்கமழும் திருப்பதி

## திருக்கேதீச்சரத் திருத்தல நினைவுகள்

— பொ. கிருஷ்ணன் —

திருக்கேதீச்சரம் சைவர்களுக்குரிய மிகப் புராதன சிவத்தலம். விஜயன் இலங்கைக்கு வருவதற்குப் பன்னெடுங்காலம் முன்னரே இத்தலம் பெரும்புகழொடு இலங்கிற்று. மூர்த்தி, தலம், அருமை சிறந்த பாலாவித் தீர்த்தம் என்ற மூவகைப் பெருமைகளையும் உடைய இத்தலம் இருக்கும் மாதோட்டம் மிகப் பழைய கடற்றுறை. அக்காலத்திலே பற்பல தேசத்தவரும் இலங்கையோடு தொடர்பு வைக்கக் காரணமாயிருந்தமையால் இது "வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன் னகர்" (வங்கம் – கப்பல்) எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளாற் புகழப்பட்டுள்ளது. இலங்கையிலே இராவணன் மனைவியாக அழகமர் மண்டோதரிக்குச் சிவன் திருவருள் சுரந்ததும் இத்தலத்திற்றென ஆராய்ச்சியாளர் அபிப்பிராயப் படுகின்றனர். விசுவ கன்மாவின் தந்தையாகிய துவட்டா இத்தலத்திலே அருந்தவம் செய்து இறைவன் திருவருளை நன்கு பெற்று வதிந்துவந்தமையால் இத்தலமுள்ள ஊர் அத் தவமுடையான் பேரால் மகாதுவட்டாபுரம் எனப்பெற்றது. அப்பெயரே மாதோட்டம் என மருவிற்று. மாந்தை என்பதும் அப்பெயரின் குறுக்கமே.

### சோழர் காலத்தில் இத்தலச் சிறப்பு

இற்றைக்கு ஏறக்குறைய 1000 ஆண்டுகளுக்கு முன் சோழமன்னர் ஆட்சி சிறப்புற்று நிலவிய காலத்தில் இத்தலம் மகா சிறப்புடைத்தாயிருந்தது. காவிரியின் மருங்கெலாம் பெருங்கோயில் கண்டது சோழ அரசு. ஆகவே புனித பாலாவியின் மருங்கிலுள்ள இவ்வாலயமும் காவிரியாற்றங்கரைக் கோவில்கள்போலவே சிறப்பொடு சோழர் தம் அன்புப் பெருக்கால் இலங்கிற்று. இக்கோவிலையண்டிய ஊர்களிலிருந்து இலுப்பை நெய் தஞ்சைப் பெரிய கோவிலிலே திருவிளக்கெரிப்பதற்குச் சென்றதென்றும் அவ்வாற்றால் இவ்வாலயம் இந்திய ஆலயங்களுடன் தொடர்புற்றுத் தனிச் சிறப்புடன் நிலவியதென்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர்.

### சமயகுரவர் போற்றிய கேதீச்சரம்

இலங்கையின் முதுகெலும்பனைய மேற்பாகத்தில் இஃதிலங்கி இருபெரும் சைவசமய குரவராற் பாடப்பெற்றதாகையால் இது பாடல்பெற்ற பெரும் புண்ணியதலமுமாகின்றது. திருநாவுக்கரசு நாயனார் இத்திருப்பதிக்குத் தனித் திருப்பதிகம் அருளாவிட்டாலும், தமது திருவீழிமிழலைத் திருத்தாண்டகத்தில் இத்தலத்தைப்பற்றிக் குறிப்பிடுகின்றார். சிவம் எல்லாத் திருத்தலங்களிலும் பொலிந்திலங்கும் வெற்றியைத் தெரிவிக்குங்கால் அப்பரெம்பெருமானார் இந்தியாவின் தென்பால் சேய்த்தேசமாகிய இலங்கையிலுள்ள இத்திருத்தலத்தைத் தாய்த்தேசத்தின் வடபால் இமயத்துள்ள திருக்கேதாரத்தோடு தொடர்புறுத்தி "கேதீச்சர மேவினார் கேதாரத்தார்" எனக் கூறியருளியமை ஊன்றி நோக்கற்பாலதொன்றாகும்.

### அன்னியர் செய்த அழிவும் ஆறுமுகநாவலர் அருந் தொண்டும்

இறைவன் ஆன்மகோடிகளுக்கு அருள்சொரியக் கோயில் கொண்டருளியிருத்தலை அறியாத வேற்றுநாட்டு அன்னிய மதத்தினர் சைவக் கோவில்கள் பலவற்றைச் சிதைத்தனர். சைவர்களுக்கு உயிராயிருந்த இக்கோவிலை அவர்கள் இடித்துத் தகர்த்துச் சிதைத்தனர். இச்செய்கையாற் சைவமும் சிவவழிபாடும் அழிந்தொழிந்து போகுமென எண்ணினர் இவ் விரிவிலா அறிவினர்கள். கோவிலிருந்த சுவடுகூடத் தெரியாமல் இத்தனை அட்டூழியங்கள் நடந்தேறின. நல்லூரிலே சைவ உலகந் தழைத்தோங்கத் தோன்றிய நாவலர் பெருமான் உளங்கரைந்து கசிந்து உருகிச் சைவர்கள் பாடல்பெற்ற இத்திருத்தலத்தை மீண்டும் உருவாக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்கள்.

### இறை என்றும் உறைதலம்

தேவாரமாகிய தமிழ் வேதவாக்கிலே திடநம்பிக்கையுடைய நாவலர், "கேடிலாத கேதீச்சரம்", "கேழல் வெண்மருப் பணிந்த நீண்மார்பர் கேதீச்சரம் பிரியாரே" என்ற ஞானசம்பந்தர் திருவாக்குகளையும், "படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல் திடமாவுறை கின்றான் திருக்கேதீச்சரத் தானே" என்ற சுந்தரமூர்த்திகள் மெய்ம்மொழியையும் ஓர்ந்தவராகையால் அவற்றை உளமார ஓதி ஓதிப் பண்டைய கோவிலைக் காண்டல் வேண்டுமென்ற வேணவாக் கொண்டிருந்தனர்.

### நாவலர் எண்ணம் நிறைவேறல்

அன்னிய மதத்தினர் இத்திருத்தலமிருந்த நிலப்பரப்பைத் தாமே விலைக்குப்பெற்றுத் தமது ஆலயம் அமைக்க முற்பட்டனர். நாவலர் பெருமான் சைவநன்மக்கள் உள்ளத்தில் ஏற்றிய உணர்ச்சிப் பெருக்கால் சைவத்தலநிலம் சைவர்களுக்கே சொந்தமானது 1872-ம் ஆண்டு நாவலர் மனத்தெழுந்த எண்ணம் எத்தனையோ ஆண்டுகள் கடந்து நிறைவேறிற்று. 1893-ம் ஆண்டின் இறுதியில் சில ஏக்கர் நிலம் சைவர்களுக்கு விலைக்குக் கிடைத்தது. காடு மண்டிய இந்நிலத்தில் 1894-ம் ஆண்டு கோவில்கட்டும் முயற்சியும் தோன்றலாயிற்று.

### பாடல்பெற்ற வினையொழிக்குந் தலம்

இப் பண்டைய பெருமை வாய்ந்த திருத்தலம் நன்கு பெருகிப் பாய்ந்த புண்ணிய பாலாவி ஆற்றின் கரையிலே வினையெலாந் தீர்க்கும் பெருந்தளியாய்விளங்கிற்று. திருஞானசம்பந்தப் பெருமானுடைய திருப்பதிகத்தில் முதல் நான்கு திருப்பாடல்களின் கடைசி அடிகளும் இத்தலத்தின் வினை தீர்க்கும் இயல்பினை வியந்தோதுகின்றன. அவ்வடிகள் வருமாறு :-

"கேதீச்சரங் கைதொழக் கருவினை யடையாவே"

"கேதீச்சரங் கைதொழுதெழக் கெடுமிடர் வினை தானே"

"கேதீச்சர மடைபவர்க் கருவினை யடையாவே"

"அடி பேணவல் லார்தம் மேன் மொய்த்தெழும் வினை போமே"

சுந்தரமூர்த்தி சுவாமிகளும் கேதீச்சரப்பதிகத்தில் ஆறும் ஏழாம் திருப்பாடல்களில் ஆன்மாவைப் பற்றும் நோயாகிய வினையை இத்தலம் தீர்க்கும் தன்மையை முதலாமடிகளில் வைத்துத் தெளிவுறுத்துகின்றார்.

ஐந்தாம் திருப்பாடலில் இதன் தீர்த்தம் "அங்கத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி" என்றபடி அடியார்களது உடற்பிணிகளை ஒழிப்பதனைத் தெரிவிக்கின்றார். ஒன்பதாம் திருப்பாடலிலே பாலாவியின் தீர்த்த மகிமையால் சிவம் ஆன்மாக்களின் பாவங்களையும் வினைகளையும் போக்கியருமாற்றைப் "பாவம் வினையறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல்" என்ற அடியால் உணர்த்தியருளுகின்றார். இவ்வாற்றால் இதனை வினைதீர்க்கும் தலமென நாமும் கொண்டாடுவோமாக.


### திருப்பணித் திருத்தொண்டரும் பெரியோர் வாக்கும்

இத்திருக்கோயில் பண்டைய சிறப்புடன் துலங்கவேண்டும் என்ற குறிக்கோளுடன் இன்று இறைவன் திருவருட் செல்வத்துடன் சைவ அபிமானமும் பொருட்செல்வமும் படைத்த சிற்சில பெரியார்கள் இத்தலத்தருகே சிற்றில் அமைத்துத் தொண்டாற்றி வருகின்றனர். அல்லும் பகலும் இவர் தம் எண்ணமெல்லாம் சைவசமயத்தவர் எல்லார் பொருளிலும் அற்பமாவது கோயிற்றிருப்பணிக்கு உபயோகப்படவேண்டும் என்பதே. இத்தகைய விரல்விட்டு எண்ணக்கூடிய தொகையினர் கொழும்பு மாநகரத்தில் தமது சுகசௌகரியங்களை விடுத்து இக்காட்டுப் பிரதேசத்தில் கோயிலைப் புதுப்பிக்கும் தொண்டிற்காகப் பிச்சை ஏற்கும் நிலையை மனமுவந்து மேற்கொண்டிருப்பதைப்பற்றி நினைக்கும்போது சுந்தரர் திருவாக்குச் செவியிலே ஒலிக்கின்றது. "சுவாமி! நீயோ கயிலை மலையையும் பொன்வெற்பையும் விடுத்துக் காட்டையே உன் வீடாக்கிக் கொண்டனை! நீ கையிலே தாங்கியதோ ஓடு. உன்னை நேசிக்கும் அடியார் பெறுவனவும் காடும் ஓடுமாக இருத்தலே பொருத்தமாகும். "காடு நும்பதி ஓடுகையது காதல் செய்பவர் பெறுவதென்!" ஈண்டு முற்றத் துறந்த முழு முனிவராகிய பட்டினத்தடிகள் பொன்வாக்கொன்றும் முன் நிற்கின்றது. "குடை கொண்டிவ் வையகமெல்லாம்......திகிரிப் படைகொண்டு...... பார்த்திவராவதில்......அம்பலத்தான் தொண்டர்க்கேவல் செய்து......பிச்சை கொண்டு இங்கு வாழ்தல் களிப்புடைத்தே". (திகிரிப் படை - சக்கரம்; பார்த்திலர் - அரசர்; களிப்புடைத்து - இன்பந்தருவது). அம்பலத்தான் தன்னைப்போலவே தன்னை விரும்புவரையும் பிச்சைத் தொழிலாளர் ஆக்கிவிடுகின்றானே!

### விஞ்ஞானத்திற்கு மேம்பட்ட மெய்ஞ்ஞானம்

இவ்வருடத் திருவிழாப் போது விஞ்ஞானம் நன்கு கற்ற ஒரு பக்தர் இக்கோவிலிலே இரு பெரிய பாம்புகள் விசேடமாகப் பூசை காலத்திலே தோற்றுவதுபற்றி ஒரு பெரியாருடன் ஆச்சரியத்துடன் கதைத்துக் கொண்டிருந்தனர். அப்பெரியார் கேது என்னும் பாம்பு பூஜித்த தலமாயிருப்பதனாலே இங்ஙனம்பாம்புகள் பலகாலமாக இக்கோவிலிலே காணப்படுதல் பொருத்தமானதென விளக்கினர். பெரிய மூர்க்க விஷப்பாம்புகள் தம் கொடுந்தன்மை ஒழிந்து மனிதருக்குத் தீங்கையோ அச்சத்தையோ ஏற்படுத்தாமல் கேது பூஜித்த தலத்திலுலாவுவது விந்தையல்ல என்றார் பெரியார். இவர் தம் பேச்சு ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகக் கழுக்குன்றத்தில் பூஜை முடிந்ததும் தோற்றும் இரு கழுகுகளையும் பற்றித் திரும்பியது. கழுகாசலம் என்ற பெயருள்ள தலத்திலே எத்தனையோ தலைமுறைகளாக இக் கழுகுகள்—வயது காண்டற்கரியன - பிணம் உண்பதை விடுத்து இறைவனுக்குரிய தூயநிவேதனத்தைப் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் முன் அருந்தும் ஆச்சரியத்தைப்பற்றி விஞ்ஞான அறிஞரும் மற்றையவருமாகப் பக்தி சிரத்தையுடன் பேசிக்கொண்டிருந்தனர். இந்த அணுக்குண்டு விஞ்ஞான யுகத்திலேயே விஞ்ஞானமும் விளக்க முடியாத உண்மைகளைப்பற்றி இப்பெரியார் கதைத்த பொழுது விஞ்ஞானத்திலும் மேம்பட்ட மெய்ஞ்ஞானத்தை அருளும் கௌரி சமேத கேதீச்சர நாதனது திருவருள் வெள்ளம் எல்லாச் சீவராசிகளையும் தன்பால் ஈர்க்கும் உண்மையை எமக்கு எடுத்து இயம்புவது போல ஒரு பக்தர் உள்ள முருகப்பாடிய திருப்பாடல் நம் காதில் விழுந்தது. "இயக்கர் கின்னரர்......ஞாயிறு திங்கள் மயக்கமில்புலி வானரம் நாகம்......எல்லாம்......நின் திருவடியதனை அர்ச்சித்தனர் பெறும் ஆரருள் கண்டு திகைப்பொன்றின்றி நின் திருவடி அடைந்தேன்......திருப்புன்கூர் உளானே". இவ்வள

(12ஆம் பக்கம் பார்க்க)



உலகத்தின் பெரிய உலை துப்புரவாக்கும் இயந்திரம்

பெரிய கொல்லுலைகளிலுள்ள தூசி, அழுக்கு முதலிவற்றைப் போக்கும் இந்த இயந்திரம் 12 தொன்களுக்கு மேலதிகமான நிறையுள்ளது. இது இங்கிலாந்திலே தயாரிக்கப்பட்டுள்ளது. ஒரு மணித்தியாலத்திற்கு ஐந்து தொன்கள் தூசியை அகற்றும் சக்தி வாய்ந்தது.


## யாழ் விநோதக் காணிவலும்

### கண்கவர் பொருட்காட்சியும்

யாழ் மத்திய நூல் நிலையக் கட்டிட நிதிக்காக

1959-ம் ஆண்டு ஜூன் மாதம்

12-ம் திகதி தொடக்கம் 25-ம் திகதி வரை

யாழ்ப்பாண மாநகரசபை மைதானத்தில் நடைபெறும்.

★ அரசாங்க இலாகாகள், தூதுவர் காரியாலயங்கள், தேயிலைப் பிரசாரப் பகுதிபோன்ற முக்கியமான ஸ்தாபனங்கள் பங்குகொள்ளும்.

★ மாட்டுவண்டிச் சவாரி, மல்யுத்தப் போட்டி, மின்சார ஒளியில் கைப்பந்தாட்டப் போட்டிகளும்; சுழல் ராட்டினம், குழந்தைகள் பூங்கா, பயங்கரக் கிணறு, கார் அதிர்ஷ்டச் சீட்டு, முதலியனவும் ஏற்பாடாகியுள்ளன.

★ சங்கீதம், நடனம், நாடகம், முதலிய கலை நிகழ்ச்சிகள் கண்கொள்ளாக் காட்சிகளாகும்.

இவற்றில் இந்தியக் கலைஞர்கள் பங்குபற்றுகின்றனர்.

★ பேச்சு வன்மை, துப்பாக்கிச் சூடு, தேகாப்பியாசம், நீச்சல் முதலியவற்றில் பள்ளிக்கூட மாணவர்களிடையே போட்டிகள் நடைபெறும்.

★ பார், (Bar) சிற்றுண்டிச்சாலை, இந்திய கைத்தறி இலாகாவினால் அமைக்கப்பெறும் கைத்தறி உடை காட்சிகள் முக்கியாம்சகளாக இடம் பெறும்.

நூல் நிலையம் உங்கள் நிதியையும் நேரத்தையும் வேண்டுகிறது.

தயவு கூர்ந்து வாருங்கள்!

தாராளமாகச் செலவு செய்யுங்கள்!!

ஒரு கடை (10 x 15) ரூபா 100/-
இரண்டு கடைகள் ரூபா 150/-
காணிவல் நடைபெறும் காலத்துக்கு மட்டும்.

கே. வி. மயில்வாகனம்
பொதுக் காரியதரிசி,
யாழ் விநோதக் காணிவல்.

<u>இலங்கை அரசியல் திட்டத் திருத்தம் 3</u>

இலங்கை சட்டக் கல்லூரியில் அரசியல் சட்டவிரிவுரையாளராகப் பணியாற்றும் திரு. ஜே. ஏ. எல். கூரே எல். எல். பி. சமீபத்தில் சட்ட மாணவர் கழகத்தில் ஆற்றிய விரிவுரையின் தமிழாக்கம் இது. அவ்விரிவுரையின் மூன்றாவது பகுதி இவ்வாரம் வெளியாகியுள்ளது.

# நீதிபரிபாலன சேவை:
## கட்டுப்பாடற்ற சுதந்திரம் தேவை

குடியரசுக்கான அரசியல் திட்டம் இயற்றப்படும்போது நீதிபரிபாலன முறையிலும் மாற்றங்கள் செய்யவேண்டியிருக்கும். உதாரணமாக, அரசப் பேரவையின் நீதிபரிபாலனக் குழுவுக்கு (Judicial Committee of the Privy Council) அப்பீல் மனுக்கள் அனுப்பப்படும் வழக்கத்தை கைவிட்டு அதற்குப் பதிலாக முடிவான அதிகாரமுள்ள அப்பீல் நீதிமன்றம் ஒன்றை இலங்கையில் நிறுவவேண்டும்.

சாம்ராச்சிய நாடுகளில் சில விசாரணைப் பிரிவு அப்பீல் பிரிவு ஆகியவை அடங்கிய ஓர் உயர் நீதிமன்றத்தை அமைத்திருக்கின்றன. வேறு சில உயர்தர நீதிமன்றம் (Supreme Court) எனப்படும். அப்பீல் மன்றத்தையும் உயர் நீதிமன்றங்கள் (High Courts) எனப்படும் விசாரணை மன்றங்களையும் அமைத்திருக்கின்றன.

முக்கியமான சட்டங்கள், அரசியல் சட்டத்துக்கு முரணான சட்டங்கள் ஆகியவை குறித்து சனதிபதி உயர்தர நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தைப் பெறுவதற்கு சில நாடுகளின் அரசியல் திட்டங்கள் வகை செய்கின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நீதிபரிபாலன சேவை அதிகாரசபை (Judicial Service Commission) விஷயத்தில் அடிப்படையான மாற்றங்கள் ஒன்றும் செய்யத் தேவையில்லை. இச்சபையை அரசாங்க சேவை அதிகார சபையோடு ஒப்பிட்டுக் குறை கூறுதல் நியாயமற்ற செயலாகும். நீதிபரிபாலனம் சம்பந்தமான விஷயங்களில் மந்திரிகள் பார்லிமெண்டுக்குப்பொறுப்புடையவரல்லர். ஒரு சனநாயக நாட்டில் நீதிபரிபாலனப் பகுதி சட்டசபை, நிர்வாகப் பகுதி ஆகியவற்றின் தலையீடின்றி சுதந்திரமாக இயங்கவேண்டியது அத்தியாவசியம். நீதிபரிபாலன சேவை உத்தியோகத்தரைக் கட்டுப்படுத்தும் அதிகாரங்களை இச்சபையிடம் இருந்து பறித்து நிர்வாகப் பகுதியினருக்கு வழங்க முயற்சிப்பது நீதிபரிபாலன சேவைக்குரிய சுதந்திரத்தை மறுப்பது போன்ற செயலாகும்.

இங்கிலாந்தில் சான்சலர் பிரபு (Lord Chancellor) உயர் நீதிமன்ற நீதிபதிகளையும் நீதிபரிபாலன உத்தியோகத்தரையும் நியமித்துவருகிறார் என்பது உண்மைதான். ஆனால் சான்சலர் பிரபுவின் பதவி நிலைமை சம்பந்தமான வரலாறு பெரிய பிரிட்டனுக்கு மாத்திரம் பிரத்தியேகமான தொன்றாகும். இதனை நாம் மறந்துவிடக்கூடாது. சரித்திரரீதியில் சான்சலர் பிரபு அரசியின் மனச்சாட்சிக்குப் பொறுப்பானவராக இருந்து வந்திருக்கிறார். இன்றும் அவர் சட்டசபை உறுப்பினராகவும், மந்திரிசபை உறுப்பினராகவும் இருந்து வருவதோடு, அரசப் பேரவையும் பிரபுக்கள் சபையும் நீதிமன்றங்களாக கூடும்போது அவற்றுக்குத்தலைமைவகித்தும் வருகின்றார்.

நீதிபரிபாலனப் பகுதிக்கும் நிர்வாகப் பகுதிக்கும் இடையே உள்ள அரசாங்க நிருவாகக் கொள்கைக்கும் தொடர்பு ஏற்படுத்தவேண்டும் என்ற கூற்று ஓரளவுக்கு நியாயமானதாக இருக்கிறபோதிலும், இத்தொடர்பை நீதிபரிபாலன சேவையின் சுதந்திரம்பாதிக்கப்படாத வகையில் செய்து கொள்வதற்கு வழிகள் இருக்கின்றன.

### மூலாதார உரிமைகள்

அடிப்படை உரிமைகளுக்குத் திருத்தஞ் செய்யப்படும் அரசியல் திட்டம் உத்தரவாதம் அளிக்கவேண்டும். இவ்வுரிமைகள் சம்பந்தமாக நாடுகளிடையே பெருமளவுக்கு உடன்பாடு நிலவுகின்றது என்பது ஐக்கிய நாடுகள் தாபனத்தினால் பிரகடனஞ் செய்யப்பட்டுள்ள மனித உரிமைகள் சாசனத்திலிருந்து அறியக்கிடக்கின்றது. இக்கால அரசியல் திட்டங்களில் அடிப்படை உரிமைகள் விவரிக்கப்பட்டு அவற்றுக்கு உத்தரவாதமும் அளிக்கப்படுகின்றது.

அரசியல் திட்டத்தில் சேர்க்கப்படவிருக்கும் விபரமான அடிப்படை உரிமைகள் பட்டியலில் பின்வருவனவும் இடம் பெறவேண்டும்:- சட்டத்தின் முன் எல்லா மக்களுக்கும் சமத்துவம், பழைய குற்றங்களுக்குத் தண்டனை விதிக்கப்படாது பாதுகாத்தல், இன, சாதி, சமய, பிறந்தஇட, அடிப்படையில் பாரபட்சமாக நடத்தப்படுவதைத் தடைசெய்தல், ஒருவரின்உயிருக்கும்தனிப்பட்டசுதந்திரத்துக்கும் பாதுகாப்பளித்தல், விசாரணைக்குக் கொண்டு வராமல் மூன்று மாதங்களுக்கு மேலதிகமாக ஒருவரைத் தடுப்புக் காவலில் வைத்திருக்காமல் தடைசெய்தல், (மூன்று மாதத்திற்கு மேல் தடுப்புக்காவலில் ஒருவரை வைத்திருப்பதற்குப் பிரதம நீதிபதியால் நியமிக்கப்பட்ட ஒரு குழுவின் சிபார்சு தேவை என விதிக்க வேண்டும்), பேச்சுச் சுதந்திரம், பத்திரிகைகளுக்குச் சுதந்திரம்' கூட்டம் கூடுவதற்கும் சங்கங்களை நிறுவுவதற்கும் சுதந்திரம், தடையின்றி பிரயாணம் செய்யும் உரிமை, உறைவிடத்தைத் தெரிந்தெடுக்கும் உரிமை, பொருட்களை வாங்கி உடைமையாக்கும் உரிமை, விரும்பிய தொழிலை மேற்கொள்ளும் உரிமை, வீடுகளை அமைத்து வாழும் உரிமை, மத சுதந்திரம், மதத்தாபனங்களை அமைத்து அவற்றைப் பரிபாலிக்கும் உரிமை, சிறுபான்மையோரின் மொழி, எழுத்து, கலாசாரம் ஆகியவற்றைப் பாதுகாத்தல், சிறுபான்மையோர் கல்வித்தாபனங்களை அமைத்து நிருவகிப்பதற்குச் சுதந்திரம், சிறுபான்மையோரின் தாபனங்களுக்கும் பாரபட்சமற்ற முறையில் அரசாங்கம் நன்கொடை வழங்கல், ஆகிய உரிமைகளும் வேறு பலவும்.

தனிப்பட்டவரின் உடைமைப் பொருள்கள், அரசாங்க உடைமை யாக்கப்படும் போது நஷ்ட ஈடு வழங்கப்படுவதற்கு இந்தியாவின் அரசியல் திட்டம் வகை செய்தது. ஆனால் 1951 இல் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாக ஜமீன்தாரின் பெருந் தோட்டங்களும் காணிகளும் அரசாங்க உடைமையாகும்போது நஷ்டஈடு வழங்கப்படுவதில்லை.

இந்திய அரசியல் திட்ட விசாரணைக் குழுவினராகிய சைமன் விசாரணைக் குழுவினர் கூறியிருப்பதுபோல் அடிப்படை உரிமைகளைத் தொகுத்துரைப்பதால் ஒரு பயனுமேற்படாது; அவ்வுரிமைகள் நடைமுறையில் கையாளப்படுவதற்கு மனவுறுதியும் வழிவகைகளும் அவசியம். இவ்வுரிமைகள் நடைமுறையில் இருப்பதற்குரிய சட்டமுறைகளையும் இக்கால அரசியல் திட்டங்கள் விதிக்கின்றன. பல நாடுகளில் உத்தரவுக் கட்டளைகளை (Writs) பிறப்பிக்கும் அதிகாரம் உயர் நீதி மன்றத்துக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

### திட்ட அடிப்படை

குடியரசுக்கான அரசியல் திட்டத்தை ஆக்குவதற்குமுன் அதன் அடிப்படை அம்சங்களை நுண்ணிதாக ஆராயவேண்டும். இந்தியாவைப்போல் சாம்ராச்சிய அமைப்பிலிருக்கும் குடியரசாக இருந்தாலும் அல்லது சாம்ராச்சிய அமைப்பிற்கு வெளியே ஒரு குடியரசாய் இருந்தாலும், புதிய குடியரசு பாராளுமன்றச் சட்டங்களினாலோ அல்லது அரசப் பேரவைக் கட்டளைகளினாலோ பிரமாணச்சட்டம் கட்டுப்படுத்தப்படுவதாக இருக்கக்கூடாது. சுதந்திர நாட்டுமக்களுக்குரிய ஆட்சிமுறையை மாற்றிக் கொள்ளும் உரிமையினால் அரசியல் திட்டம் உறுதிப்பாட்டைப் பெறவேண்டும். 1937-ல் அயர்லாந்தில் டீவாலராவின் அரசாங்கம் குடியரசுக்கான அரசியல் திட்டத்தை வகுத்த போது 1922-ஆம் வருட அரசியல் திட்டம் நடைமுறையிலிருந்தது. பாராளுமன்றம் அங்கீகரித்ததும் புதிய அரசியல் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. அத்திட்டத்தின் முன்னுரையில் "பொது நலத்தையும் தனிப்பட்டவரின் சுதந்திரத்தையும் விருத்தி செய்வதற்கு மக்களால் இயற்றப்பட்ட அரசியல் திட்டம்" எனப் பொறிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(முற்றும்)

## கிணற்றுநீர் உப்புநீர் ஆகலாம்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாகும். இன்னொரு வழி குறைவான அளவு நீருடன் விளையக் கூடிய பயிர்களை யாழ்ப்பாண விவசாயிகள் தெரிந்து பயிரிடுவதற்கு வகை செய்வதேயாகும். உதாரணமாக யாழ்ப்பாண விவசாயிகள் புகையிலைக்குப் பதிலாக 'சிகரெட்' புகையிலையைப் பயிரிடுமாறு செய்தல் வேண்டும். இக்கருத்தை யாழ்ப்பாணக்குடா நாட்டின் மண் வகை ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் விவசாயப் பகுதி ஆராய்ச்சியாளர் ஒருவர் சில மாதங்களுக்கு முன் வட இலங்கை புவியியல் சங்கக் கூட்டத்தில் வெளியிட்டார் என்றும், அவரும் கிணற்றுநீர் உப்பு நீராகக் கூடிய ஆபத்தையும் எடுத்து விளக்கியிருந்தார் என்றும் கூற விரும்புகின்றேன். அச்சுவேலி போன்ற இடங்களில் உள்ள சில கிணறுகளில் நீர் உவர் நீராக மாற்றமடைவதற்குக் காரணம் கடலேரித் திட்டமா என்பது ஆராய்ந்து முடிவு செய்யப்பட வேண்டும் என அவர் தெரிவித்திருந்தார்.

மேலும் யாழ்ப்பாண மக்கள் இரு பாதுகாப்பு முறைகளை உடனடியாக மேற் கொள்ள வேண்டுமென்பது அவர் தம் கருத்து.

1. குளங்களில் படியும் வண்டல் மண்ணை ஒவ்வொரு வருடமும் வரட்சிக்காலத்தில் தவறாமல் அகற்றிக் கொண்டு வர வேண்டும்.

2. குறைவான அளவு நீருடன் விளையக்கூடிய பயிர்களைத் தெரிந்து விவசாயிகள் பயிரிட ஆரம்பிக்க வேண்டும். இதற்குத் தீவிர பிரசார இயக்கம் தேவை.

### கிராமங்களில் இயக்கங்கள்

ஒவ்வொரு கிராமத்திலும் நன்னீர்ப் பாதுகாப்பு இயக்கங்களை ஆரம்பிக்க வேண்டும். இதற்கு பட்டின சங்கங்கள் கிராமச்சங்கங்கள், கிராம முன்னேற்றச்சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் சனசமூக நிலையங்கள் முதலியன உதவிபுரிந்து வழிகாட்டவேண்டும். அரசாங்கத்தை நம்பி மோசம் போகாமல் பொதுமக்களே முன்வந்து ஆவன செய்யவேண்டும். பேராசிரியர் குலரத்தினம் அவர்கள் விடுத்துள்ள இந்த எச்சரிக்கையை உதாசீனம் செய்தால் யாழ்ப்பாண மக்களின் உயிர் நாடியாகிய விவசாயத்துக்குப் பேராபத்து விளைந்தே தீரும். பின்பு கவலைப்படாமல் இருக்க வேண்டுமானால் முன்பு எச்சரிக்கையாக இருக்க வேண்டுமல்லவா?

'ஹென்றலி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்றலி

★ சேட்
★ காற்சட்டை
★ ஷோட்ஸ்

ஹென்றலி சேட், காற்சட்டை, ஷோட்ஸ் ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்றலி உடைவகையில் நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினாலும், அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்

ஹென்றலி (காமெண்ட்ஸ்) லிமிடெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை.

பலவித சிற்றுண்டி பலகார வகைகளுக்கும்
சுத்த சைவ போசனத்திற்கும்
சிறந்த இடம்!



விசேஷ பரிசு
(Special Grade)
1952—1957



மலாயா கபே

உரிமையாளர்: M. K. கதிரவேலு
36, 38, பெரியகடை யாழ்ப்பாணம்

# ஈழத் தமிழர் சரித்திர ஆராய்ச்சி

— ஆசிரியர் மா. பீதாம்பரன் —

'ஈழநாடு' 23–5–59 இதழில் வெளிவந்த இரு குறிப்புக்கள் என் உள்ளத்தைக் கவர்ந்தன. ஒன்று, 'ஈழத்தமிழர் சரித்திர ஆராய்ச்சிக் கழகத்தின்' தலைவர் திரு. எஸ். யு. சோமசேகரம் அவர்கள் "பள்ளிக்கூடங்களில் உபயோகிக்கப்படும் சரித்திர நூல்களில் சொந்த நாட்டின் வரலாறு முக்கிய இடம் பெறல் வேண்டும்" என்று கூறிய குறிப்பு. மற்றையது, 'தமிழர் சரித்திர ஆராய்ச்சி' என்னும் தலையங்கத்தில் (பக்கம் - 8) வந்துள்ள "ஈழத்தமிழறிஞர்கள் ஒன்றுசேர்ந்து இலங்கைத் தமிழரின் வரலாற்றினைத் தக்க சான்றுகளுடன் எழுதி வெளியிட முன்வரவேண்டும்" என்னும் குறிப்பு.

இவற்றைப் படித்ததும், தமிழர் வரலாறுபற்றி—சிறப்பாக ஈழத்தமிழர் வரலாறு பற்றி—என் உள்ளத்து எழும் கருத்துக்களை எழுத விரும்பினேன்.

## சேர் அருணசலம் கூற்று

'ஈழநாட்டுத் தமிழ்ப் பெருங் கலைஞர்களுள் ஒருவராகிய சேர் பொன். அருணசலம் அவர்கள் இற்றைக்கு 60 ஆண்டுகட்குமுன் ஆங்கிலத்தில் எழுதிய 'இலங்கைச் சரித்திரச் சுருக்கத்தில்' ஆரம்பப் பந்தியில், ஈழநாட்டுச் சிறுவர் சிறுமியர்க்கும், பெரியார்க்கும் இலங்கை வரலாற்று அறிவு ஒரு சிறிதும் இல்லை என்பதைக் கூறி மனம் வருந்தும் வசனங்கள் எவரையும் கொள்ளைகொள்ளும்பான்மையன. அக்காலத்து வெளிவந்த கொழும்பு அரசாங்கக் கல்லூரி முத்திங்கள் வெளியீட்டில் அந்நாள் பெருங் கல்லூரிகளிற்றானும் பயிற்றப்படும் பாடங்களில் **இலங்கைச் சரித்திரமும் இலங்கைப் பூமிசாஸ்திரமும்** இடம் பெருமையைக் கண்டித்து, ஒரு மாணக்கன் எழுதிய கட்டுரை தமக்கு மனச்சாந்தியை அளித்ததாகவும், அது எதிர்காலச் சரித்திரக் கல்விக்கு (தாய் நாட்டுச் சரித்திரக்கல்விக்கு) வர இருக்கும் மதிப்புக்கோர் அறிகுறி என்றும் சேர். அருணசலம் அவர்கள் கூறியுள்ளார்கள். அக்காலத்திருந்த கலைஞர் சிலர் ஒருங்குசேர்ந்து சரித்திரக் கல்விக் கழகம் ஒன்றனையும் நிறுவி நடத்தினர்கள்.

## இலங்கைச் சரித்திர நூல்கள்

அக்காலத்தின் பின் இலங்கைச் சரித்திரக் கல்வி சிறிது சிறிதாகப் பயிலப்பட்டு வந்தது. தேணரும் விஜயசிங்கவும் மொழி பெயர்த்த மகாவமிசம் என்னும் நூலும், தெனெந்து ஆங்கிலத்தில் எழுதிய இலங்கைச் சரித்திரமும், நொக்ஸ் என்னும் ஆங்கிலேயர் இலங்கையரைப் பற்றி எழுதிய நூலும் பிறவும் ஆராயப்பட்டன. இலங்கைச் சரித்திர நூல்களும் வெளிவந்தன. அவற்றுள் ஒரு சிலவே 'காய்தல் உவத்தல்' இன்றி எழுதப் பட்டன. "வாரம் பட்டுழித் தீயவும் நல்லவாம்; தீரக் காய்ந்துழி நல்லவும் தீயவாம்" மாணக்கருக்குப் பெரிதும்பயன் பட்டு வந்த நூல்கள் கலைஞர்களான திரு. பிளாசே, திரு. கொட்றிங்தன் என்பவர்கள் எழுதிய நூல்களும் பிறவும் ஆகும். திரு. இராசநாயக முதலியார் ஆங்கிலத்தில் எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரமும், தமிழில் எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரமும், வண. சுவாமி ஞானப்பிரகாசர் எழுதிய நூல்களும் யாழ்ப்பாணச் சரித்திரமும் கற்க விரும்புவார்க்குப் பயன் படலாயின. இலங்கைச் சரித்திர சம்பந்தமான விரிந்த நூல்கள் (ஆங்கிலத்திலே) பலவுள.

## 'பௌத்த வாசனை'

இங்ஙனமாக எழுதப்பட்ட இலங்கைச் சரித்திரங்களில்சிங்கள—பௌத்த வரலாறுகளே மலிந்திருக்கக்காணலாம். இலங்கைச் சரித்திரம் என்று ஒரு சிலராற் போற்றப்படும் **மகாவமிசம்** புத்த பிரத்துவத்தைக் கூற எழுந்த புராணமேயாகும். இது சரித்திரக் கண்கொண்டு, காய்தல் உவத்தல் அகற்றி எழுதப்படவில்லை. பேராசிரியர் **றைடேவிட்ஸ்** கூறுமாறு இது துட்டகாமினி (துஷ்டகிராமணி) மான்மியமே. **இராஜதரங்கினி** என்னும் காஷ்மீர நூலுக்குள்ள மதிப்புத்தானும் இதற்குண்டோவெனில் ஐயமே.

'புத்தர் இலங்கைக்கு வந்தார்—அதுவும் ஆகாயமார்க்கமாக மும்முறை வந்தார்; விஜயன் என்பவன் வந்தான், சிங்கள சமூகத்துக்கு அடிகோலினன், என்பனபோன்ற 'புராண'க் கதைகளை அடிப்படையாகக்கொண்ட நூல் சரித்திர ஆராய்ச்சிக்கு ஒருசிறிதே துணை செய்யும்.

இற்றை நாள்வரையும், பாடசாலை மாணக்கர்களுக்கெனத் தமிழிலே சரித்திர வாசகங்கள் எழுதினவர்கள், சிங்களவாசனை பொருந்தியனவும், பௌத்தவாசனை பொருந்தியனவும் சிங்களர்களால் எழுதப்பட்டனவுமான ஒரு சில நூல்களைத் தழுவியே எழுதியுள்ளனர்கள்.

இற்றைக்குப் பல ஆண்டுகட்குமுன் திரு. எச். எஸ். பெரேரா அவர்கள் வித்தியாதிபதியாக இருந்தகாலத்தில், 'பாடசாலைகளுக்கு உரிய தமிழ்ப் புத்தகங்களை ஆக்குவதற்கு ஆலோசனை கூறுவதற்கென ஒரு சபையிருந்தது. அச்சபை தமிழ் மாணக்கருக்குரிய இலங்கைச் சரித்திரம்' ஒன்றனை இயற்றி வெளியிடவேண்டும் என்றும் தீர்மானஞ்செய்தது. எனினும் அது நிறைவேறவில்லை. இச் சரித்திரத்தில் தமிழ் நாட்டு வரலாறு பெரிதும் இடம்பெறல் வேண்டுமென்னும் நோக்கம் இருந்தது. சுதந்திர இலங்கையில் இப்படிப்பட்ட நூல் உருப்படுமா?

எனினும் சென்ற ஆண்டில் வெளிவந்த "தமிழரும் இலங்கையும்" (Tamils & Ceylon, by C. S. Navaratnam, Navaly, Manipay) என்னும் ஆங்கில நூல் ஈழநாட்டுத் தமிழ் மக்கள் போற்றவேண்டிய ஒருசெல்வமாகும். இதன் தமிழ்ப் பதிப்பு விரைவில் வெளிவரும். ஆங்கிலம் அறிந்த ஒவ்வொரு தமிழர் கையிலும் இப்புத்தகம் இருத்தல் வேண்டும்.

பல்கலைக் கழகக் கல்விபயிலும் தமிழ் மாணக்கருள் **ஒரு சிலரேனும்**, சமஸ்கிருதம், பாளி, சிங்களம் என்ற மொழிகளை நன்கு பயின்று வரலாற்று ஆராய்ச்சித் துறையில் ஆற்றல் வாய்ந்தவராய் 'தொன்மாவிலங்கை' யின் வரலாற்றினையும், தமிழர் வரலாற்றினையும் எழுதவேண்டும். 'ஈழத்தமிழர் வரலாற்று ஆராய்ச்சிக் கழகம்' விவேகமும், ஆற்றலும் வாய்ந்த வறிய மாணக்கர்களுக்கு (எப்பாலினர்க்கும்) நன்கொடை (ஸ்கொலர்ஷிப்) பணம் உதவி இத்துறையில் ஈடுபடச் செய்வாராக.

"இளமாணவர்க்குக் கல்வி பயிற்றும் போதகாசிரியர்கள் தமிழ்க்குலத்தாரின் பழைமையையும் செம்மையையும் ஆராய்ந்துணர்ந்து மாணவர்க்கு அறிவுறுத்துவார்களாக" **சுவாமி விபுலானந்தர்** – 'கலாவல்லி' 1941.

<u>ஜெனிவா மாநாடு</u>

# நான்கு அம்சத்திட்டம்

பிரிட்டன், ஐக்கிய அமெரிக்கா, பிரான்சு, ருஷியா ஆகிய நான்கு வல்லரசுகளின் வெளிநாட்டு அமைச்சர் மாநாடு மூன்ருவது வாரமாகத் தொடர்ந்து நடைபெறுகின்றது. இம் மகாநாடு, ஜெர்மனியை மீண்டும் ஒரு நாடாக்குதல், பெர்லின் நகர் நிர்வாகம், ஜெர்மனியுடன் சமாதான உடன்படிக்கை செய்தல் ஆகிய சிக்கல்களுக்குத் தீர்வுகாண்பதற்காகவும் பின்னர் ஒரு உச்சி மாநாட்டிற்கு வழிவகுப்பதற்காகவும் கூட்டப்பட்டிருக்கின்றது. முதல் வாரத்தில் மேற்கு வல்லரசுகளும் ருஷியாவும் தமது திட்டங்களை வெளியிட்டனர். இரண்டாவது வாரத்தில் மேற்கு வல்லரசுகள் தமது திட்டத்தைத் தெளிவாகவும் விபரமாகவும் விளக்குவதில் ஈடுபட்டனர். மேற்கு வல்லரசுகளின் கூட்டுத்திட்டம் நான்கு அம்சங்களை உடையதாக இருக்கின்றது. அவை பின்வருமாறு:

1. ஜெர்மனி மீண்டும் இணைக்கப் படுவதற்குமுன் பெர்லின் நகரத்துக்கு இடைக்கால நிர்வாகமுறையை வகுத்தல்.

2. அகில ஜெர்மானியக்குழு ஜெர்மனியில் தேர்தல் நடாத்துவதற்குரிய விதிகளை வகுத்தல்.

3. தேர்தல் விதிகளை மக்கள் அங்கீகரித்ததும் தேர்தல்களை நடத்தி அகில ஜெர்மனிய சட்ட சபையை அமைத்து ஜெர்மனியை ஒரு நாடாக்குதல்.

4. புதிய ஜெர்மனியுடன் சமாதான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடல்.

இத்திட்டத்தில் ஜெர்மனியின் பாதுகாப்புக்கான பல அம்சங்களும் சேர்க்கப்பட்டு இருக்கின்றன.

ருஷியாவின் திட்டம் இப்பொழுதுள்ள மேற்கு ஜெர்மனி கிழக்கு ஜெர்மனி ஆகியவற்றுடன் சமாதான ஒப்பந்தங்கள் செய்யப்பட வேண்டியதை வற்புறுத்துகின்றது. மேற்கு வல்லரசுகள் தமது திட்டத்தைக் கூறுகளாக்க முடியாதென்றும் முழுவதும் ஒரு திட்டமாகக் கருதப்பட வேண்டும் எனக் கூறுவதனல் ஒரு சமரச உடன்பாடு இம்மகாநாட்டில் ஏற்படுமா என்பதுபற்றி ஒன்றும் கூறமுடியாமல் இருக்கிறது.

மூன்ருவது வாரத்தில் ருஷியா ஏதாவது பயன்படத்தக்க ஆக்க திட்டங்களை வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. முன்னள் அமெரிக்க இராசாங்க மந்திரி திரு. டல்லசின் மறைவு காரணமாக 27,28-ம் தேதிகளில் மகாநாடு நடைபெருது.

## தென் ஆபிரிக்காவில் அக்கிரமச் சட்டம்.

(Buntu) பான்ரு சுதந்திர மசோதா தென்னபிரிக்க சட்டசபையில்இரண்டாம் முறையாக நிறைவேறியிருக்கின்றது. இம் மசோதாவின்படி தென்னபிரிக்காவின் மொத்த நிலப்பரப்பில் சுமார் பத்திலொரு பாகம் சுதேசிகள்(நிறத்தவர்கள்) குடியேறுவதற்காக ஒதுக்கப்படும். பத்திலொன்பது பாகம் வெள்ளையரின் பிரதேசமாக்கப்படும். இப்பிரதேசத்தில் நிலத்தவர்கள் வேலைபார்க்க அனுமதிக்கப்படுவர். ஆனல் குடியேறமுடியாது. பல்கலைக் கழகங்கள் வெள்ளையர் மயமாக்கப் பட்டிருக்கின்றன. நிறத்தவருக்கு தனிப்பட்ட

(15-ம் பக்கம் பார்க்க)

# உலக வங்கித் தலைவர் அறிக்கை நம்பிக்கையூட்டும் சூழ்நிலை

இந்திய அரசாங்கத்துடனும் பாகிஸ்தான் அரசாங்கத்துடனும் சிந்துநதி நீர்தகராறு சம்பந்தமாகப் பேச்சுவார்த்தைகளை முடித்துக்கொண்டு உலக வங்கித் தலைவர் திரு. இயூஜீன் பிளாக் 19-5-59 இல் வெளியிட்ட அறிக்கை நம்பிக்கை அளிப்பதாக இருக்கின்றது. இவருடைய அறிக்கையில் பின்வரும் விபரங்கள் காணப்படுகின்றன.

1. இரு நாடுகளும் இத் தகராறுக்கு விரைவில் தீர்வுகாண விரும்புகின்றன.

2. சில அடிப்படை அம்சங்களில் இருநாடுகளிடையேயும் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

3. உலக வங்கியின் உடன்பாட்டுத் திட்டத்தை பாகிஸ்தான் ஏற்றிருக்கின்றது.

4. இத் திட்டம் காரணமாக வெட்டப்பட இருக்கும் கால்வாய்களுக்குச் செலவு அதிகம் என இந்தியா கருதி இத் திட்டத்தை முற்ருக ஆதரிக்காமலிருக்கின்றது.

5. அடுத்த இரண்டுமாத காலத்திற்குள் இரு அரசாங்கங்களின் பிரதிநிதிகளையும் உலக வங்கிக்கு அழைத்து உடன்படிக்கையின் அம்சங்கள் தயாரிக்கப்படும்.


நேசநாடுகளிடம் இருந்து நிதி உதவிபெற்று இத் தகராற்றைத் தீர்த்துவைக்க திரு. பிளாக் முயற்சி செய்துவருகிருர். பிரித்தானிய அரசாங்கத்துடன் அவர் ஆலோசனைகள் நடத்துகிருர். இதன்விளைவாக பிரித்தானியா நிதி உதவி வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தேவையான நிதி உதவி கிடைத்ததும் அடுத்த சில மாதங்களுக்குள் இரு நாடுகளும் ஒரு உடன்படிக்கையை கைச்சாத்திடக்கூடிய சூழ்நிலை

(15-ம் பக்கம் பார்க்க)


LEY & FREY

— POULTRY & CATTLE FOOD MERCHANTS. —

21/2, Stanley Road, JAFFNA.



மாடு, ஆடு, குதிரை, பன்றி, நாய், முயல், வான்கோழி, கோழி, தாரா, புரு, கிளி,

ஆகிய சீவபிராணிகளை வளர்ப்பவர்களின் வசதியை முன்னிட்டு,

லே அன் பிறே ஸ்தாபனத்தார்


— உங்கள் ஒவ்வொருவரினதும் தேவைகளைப் பூர்த்திசெய்ய —

யாழ்ப்பாணம், 21/2, ஸ்ரான்லி வீதியில்,

— ஓர் கிளை ஸ்தாபனத்தைத் திறந்திருக்கிருர்கள். —

விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்ட மிருக உணவுகளை, சீவ சத்துக்கள் செறிந்த பறவைத் தீனிகளை உங்கள் சீவ பிராணிகளுக்குக் கொடுத்து

— போசித்து இன்பத்தைப் பெறுங்கள். —



கோழி நோய் என்ற கவலை வேண்டாம்.

கோழி வளர்த்தல் பற்றி நிபுணத்துவமான ஆலோசனை இலவசமாய்ப் பெற நேரில் வாருங்கள்.

*Head Office:*

LEY & FREY

65, Wolfendhal Street, Colombo.

Phone: 2751 Grams: "Edraj"

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விகாரி ஆண்டு வைகாசி மீ 16 உ (30-5-59)


## மறப்பது எப்படி?

"நன்றல்லது அன்றே மறப்பது நன்று" என்று உபதேசித்தார் வள்ளுவப்பெருந்தகை. ஆனாலும் சென்ற ஆண்டில் இதே நாட்களில் நடந்த பல கொடுமைகளையும் நம்மில் பலராலும் சுலபமாக மறக்க முடிகிறதா?

மன்னித்துவிடலாம்; அது சுலபம்; ஆனால் மறப்பது நம்மில் பலருக்கும் கடினமாகவுள்ளது. இடிந்த கோவிலையும் சிதைந்த குடும்பங்களையும் காணும்போது அந்தத்துன்ப நினைவுகளெல்லாம் நம்மனதில் தோன்றி நமக்கு வேதனை அளிக்கின்றன.

இந்த வேதனைகளை நீக்க வழி என்ன? இடிந்த கோவில்களை மீண்டும் புதுப்பிக்கலாம். சிதைந்த குடும்பங்களுக்கு கூடுமான கஷ்ட நிவாரணங்கள் அளிக்கலாம். பாணந்துறைக் கோவிலை மீண்டும் கட்டித் திறக்கவும் சில சிங்களவர்கள் முன்வந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. நயினாதீவு நாகவிகாரையைச் செப்பனிட யாழ்ப்பாண அரசாங்க ஊழியர்கள் தீர்மானித்துள்ளதாகவும் ஒரு செய்தி கூறுகின்றது. இவை வரவேற்கத்தக்கனவே.

ஆனாலும் நடமாடும் கோவில்களான பல மக்களுக்கு ஏற்பட்ட துன்பத்தைத் துடைக்க அரசாங்கமோபொதுமக்களோ முன் வரவில்லை. உதாரணமாக பாணந்துறையில் மாண்ட கோவில் குருக்களின் குடும்பத்தாரின் கண்ணீரைத்துடைக்கப் போதுமான முயற்சிகள் இன்னும்செய்யப்படவில்லை.பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் தலைவர்களை இழந்து வெளியில் செல்ல முடியாமல் தவிக்கின்றன. அவ்வித குடும்பங்களைப் பற்றி விசாரித்து அவர்களுக்குக் கூடுமான உதவிகளை அளிக்கும் முயற்சிகளில், தமிழ்த்தலைவர்களும் கட்சிகளும் ஒரு முகமாக ஈடுபடலாம். இதில் கருத்து வேற்றுமைகளுக்கு இடமில்லை. என்றாலும் இதைப்பற்றி யாரும் எவ்வித முயற்சிகளும்செய்யாமல் இருப்பது தமிழ் சமூகத்துக்கே பெருந்துரதிருஷ்டம். இப்போதும் காலம் கடந்து விடவில்லை. இனியாவது இவ்வித ஆக்க முயற்சிகளில் ஈடுபட்டு, நிதி திரட்டி, சென்ற வருஷக் கலவரங்களில் கஷ்டப்பட்டவர்களுக்குக் கூடுமான உதவிகள் அளிப்பதே இச்சமயம் தமிழ்த் தலைவர்களின் ஏகோபித்த கடமையாகவும் முயற்சியாகவும் இருத்தல் வேண்டும்.

தீயினால் சுட்ட புண் ஆறிவிடலாம். ஆனால் நாவினால் சுட்டவடு தமிழ்மொழிக்குச் சம உரிமை கிடையாதென்று செய்யப்பட்ட சட்டத்தால் ஏற்பட்டுள்ள மனவேதனையும் தீங்கும் அந்தச் சட்டம் நீங்கும் போதுதான் ஆறக்கூடும். அதற்குத் தமிழ்த் தலைவர்கள் என்ன செய்கின்றனர்? இவ்வளவு பெரிய சோதனை ஏற்பட்டும் தமிழ்த்தலைவர்கள் இன்னும் ஒன்றுபட்டு ஒத்துழைக்க முன்வரவில்லை. தமிழ் பேசும் மக்களிடையே, அத்தலைவர்களிடையே ஒற்றுமை இருப்பின் இச்சட்டத்தை மாற்றவும் இந்நாட்டிலே தமிழர்கள் மானம் மரியாதையுடன்வாழவும் செய்யலாம்.

தமிழரின் கோரிக்கைகளிலுள்ள நியாயத்தை உணர்ந்து அவர்கள்பால் அனுதாபம் கொண்ட சிங்கள மக்கள் இல்லாமலில்லை. சென்ற கலகத்தின் போது, பல தமிழ்க்குடும்பங்களை ஆபத்து மிக்க சமயத்தில் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் பல சிங்கள மக்கள் காத்திருக்கின்றார்கள். இந்த நன்றியைநாம் மறந்துவிடவோ, மற்றசமூகத்தவர் அனைவரையும் தமிழரின் விரோதிகளாகக் கருதவோ கூடாது.

இங்கிலையில் சிறப்பாக அரசியலில் பலவீனமாகவுள்ள தமிழரிடையே ஒற்றுமையும் பொறுமையும்,தீர்க்க தரிசனமும், அரசியல் ஞானமும், எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையும் அதிகம் தேவை. குட்டிச்சுவரில் முட்டிக்கொள்ளுவதால் நம்தலை தான் நோகும். தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும். தருமம் மறுபடி வெல்லும். இன்று கட்டுண்டோம். பொறுத்திருப்போம்.காலம்மாறும்.தருமத்தை அப்போது வெல்லக் காண்போம் என்ற வேதவாக்கு பொய்யாகாது. ஆனால் நாம் நமது கடமைகளைச்சரிவர நிறைவேற்றினால்தான் உரிமைகளும் கிடைக்க முடியும்.

## பார்லிமெண்டும் பிரதமரும்

பார்லிமெண்டிலே தமது அரசாங்கக் கட்சிக்கு இப்போது பூர்ண 'மெஜாரிட்டி' இல்லை என்று பிரதமரே பத்திரிகைப் பிரதிநிதிகள் மகாநாட்டில் ஒப்புக்கொண்டார். வேறு சில எம். பிக்களின் ஆதரவு கிடைக்கலாமென்ற நம்பிக்கையில் அவர் அரசாங்கத்தை நடத்துகிறார். ஆகவே இங்கிலையில் பார்லிமெண்ட் கூட்டத்தை இவ்வாரம் கூட்டாமல் அதை முடித்துத் திடீரென அடுத்த ஜூன் மாதம் 30க்கு அவர் தள்ளிவைத்ததில் வியப்பில்லை.

இவ்விதம் திடீரெனத் தள்ளிவைத்த செயலானது உண்மை ஜனநாயகத்துக்கு முரணாகுமென்று சில அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகின்றது. ஆனால், ஜனநாயகம் என்ற பெயரால் இங்கு நடக்கும் பெரும்பான்மை வகுப்புவாத ஆட்சியிலே பலவித இன்னல்களுக்கு உட்பட்டுள்ள சிறுபான்மைச் சமூகங்களுக்கு, இதுகுறித்து எவ்வித உணர்ச்சியுமில்லை. அவர்களது ஒரே ஒரு கவலை, மீண்டும் கலகம் ஏற்பட்டு, தங்கள் மண்டைகள் உடையாமலும், தங்கள் குழந்தை குட்டிகள் தாக்கப் படாமலும் இருக்கவேண்டுமென்பதுதான்.

மந்திரிசபை மாற்றம் காரணமாக, பார்லிமெண்டைக் கலைக்காமல் இருப்பதற்குப் பிரதமர் கூறியுள்ள ஒரு சமாதானத்தில், தொகுதி நிர்ணயம், அரசியல் திட்டத் திருத்தம் முதலிய முக்கிய வேலைகள் இப்போது நடப்பதாயும் அவ் வேலைகள் முடியமுன்பு பொதுத் தேர்தல் நடத்துவது நல்லதல்ல வென்றும் கூறுகின்றார். புதிய அரசியல் அமைப்பு யோசனைகள் எப்படி இருக்குமென்பது தெரியவில்லை. எப்படியும் அவை இப்போதுள்ளதைவிட மோசமாக இருக்க முடியாது. ஆகவே, புதிய அரசியல் நடைமுறைக்கு வந்து, அதன்மீது பொதுத்தேர்தல் நடத்தும் வரை நாட்டில் அரசியற் கொந்தளிப்புகள் ஏற்படாமல் இருப்பதே பொதுமக்களுக்கு நல்லதாகும்.

இச்சமயம் யு. என். பி யைத் தவிர வேறு எந்தக் கட்சியும் மற்றொரு பொதுத் தேர்தலுக்குத் தயாரில்லை. இப்போது பொதுத்தேர்தல் நடைபெற்றால் தாங்கள் மீண்டும் தெரிவு செய்யப்படுவது சந்தேகமென்றபீதி பல எம்.பிக்களுக்கு உண்டு. ஆகவே, பார்லிமெண்டைக் கலைக்காமல், அரசாங்கத்தை எப்படியாவது இன்னும் இரண்டு வருடங்களுக்கு ஓட்டிவிட முயலும் பிரதமருக்கு வேண்டிய ஆதரவு கிடைப்பது கஷ்டமல்ல.

## இராணுவத்தினர் காடைத்தனம்

வெளிநாடுகளிலிருந்து பகைவர்கள் படையெடுத்து இலங்கையைக் கைப்பற்றிவிடக் கூடும் என்பதற்காக இத்தீவின் பல்வேறு பகுதிகளிலும் இராணுவ வீரர்களை அரசினர் நிறுத்தியிருக்கின்றனர் என நாம் எண்ணவில்லை. நாட்டிலே அமைதியை நிலைநாட்டுவதற்கு அவர்கள் பேருதவியாக இருப்பதற்காகவே அரசினர் இவர்களைப் போஷித்து வருகின்றனர். இதற்காக வாரி இறைக்கப்படும் பணத்துக்கோ அளவு கணக்கில்லை. வரிப்பணத்தை விழுங்கிக்கொண்டு வீணாக ஓடித்திரியும் இராணுவ வீரர்கள் பொதுமக்களுக்கு இன்னல் விளைக்க எத்தனிப்பதும் காடைத்தனமான செயல்களில் ஈடுபட்டு மக்களிடையே பீதியை உண்டாக்கி நாட்டின் அமைதிக்குப் பங்கம் விளைப்பதும் அடாத செயல்மாத்திரமன்றி அநாகரிகமானதுங்கூட.

யாழ்ப்பாணத்திலுள்ள இராணுவத்தினர் கொக்குவிற் பகுதியில் நிறுவப்பெற்றுள்ள தொழில்நுட்பக் கல்லூரியிற் கொட்டாவி விட்டுக்கொண்டிருந்தால் எவரும் அதனைப் பொருட்படுத்தமாட்டார்கள். அருமையான கல்வி நிலையத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றார்களேயென எண்ணி அவர்கள் வருந்துவார்கள்.

இதனிலும்பார்க்க வருத்தத்தையும் பீதியையும் கொடுக்கும் வகையில் யாழ்ப்பாணத்தில் உள்ள இராணுவத்தினர் நடந்துகொண்டதைக் கவனிக்கும்போது இந்த மாவீரர்களை உடனடியாகவே இங்கிருந்து குடியெழுப்பிவிட்டுத்தான் அரசினர் மறுகாரியம் பார்க்க வேண்டுமென்று மானமேபெரிதென மதிக்கும் ஒவ்வொருவரும் எண்ணுவர். வேலையற்றுக் கிடக்கும் இவ் வீரர்களில் இருவர் சமீபத்திற் கொக்குவில் கலட்டி ரோட்டிலுள்ள ஒரு வீட்டுக்குள் புகுந்து அங்குள்ள பெண்ணின் கையைப் பற்றி இழுத்த இழி செயலானது பொதுமக்களின் உள்ளங்களைக் குமுறச்செய்துள்ளது. இது சம்பந்தமாகப் பொலிசார் தக்க நடவடிக்கை எடுத்திருப்பதும், இராணுவத்தினர் சமீபத்திற் செய்துவரும் துடியாட்டங்கள் பற்றி இராணுவ அதிகாரி அன்டன் முத்துக்குமாரு தமது சகாக்களை அழைத்து அவர்களுடன் கலந்தாலோசித்து வருவதும் வரவேற்கத் தக்கனவே. இராணுவத்துக்கு இழிவு தேடும் சிலசம்பவங்களை மூடிமறைப்பது தமது நோக்கமல்லவெனவும், குற்றவாளிகள் தகுந்த தண்டனைக்குள்ளாகுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து இராணுவத்தை உடனே அகற்றி விடவேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா பிரதமருக்கு அறிவித்துள்ளார். தமிழரசுக்கட்சியினரும் ஏனைய தமிழ்த் தலைவர்களும் நிலைமையை ஆராய்ந்து வருகின்றார்கள். இராணுவத்தினரின் காடைத்தனம் நாட்டிலே தலைகாட்ட முடியாமற் செய்யவேண்டியது அதிகாரிகளின் தலையாய கடமையாகும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவ வீரர்கள் எதற்காக வேரூன்றிக் கொண்டு தங்கள் தர்பாரை நடாத்த வேண்டுமோ நாம் அறியோம். ஒருவேளை தமிழினத்தை ஆபத்தினின்றும் காப்பாற்றவேண்டுமென்பது பிரதமரின் நோக்கம் போலும்! அப்படியானால் அவர் இந்த இராணுவ வீரர்களைப் பொதுமக்கள் மிகுதியாக வதியும் இடங்களில் இருத்தாமல் மக்கள் நடமாட்டம் குறைந்த புல்வெளிகளிற் கூடாரமடித்து இப்புண்ணியவான்களை இருத்துவதே புத்திசாதுரியமானதென்பதை பிரதமருக்கு எடுத்துக்காட்ட விரும்புகின்றோம்.

## டல்லஸின் மறைவு

அமெரிக்க தேசாபிமானியான பாஸ்டர் டல்லஸின் மறைவு, மேற்கு வல்லரசுகளுக்கு மட்டுமன்றி, அரசியல் உலகுக்கே பெரியதோர் நஷ்டமாகும்.

தமது வாழ்விலே ருஷிய கம்யூனிஸத்தைப் பலமாக எதிர்த்தார் டல்லஸ். அது ஏகாதிபத்திய நோக்கம் கொண்டது என்று அஞ்சி, அதைத் தடுத்து நிறுத்த 'நாட்டோ', 'ஸியாட்டோ', 'பாக்தாத்' முதலிய இராணுவ ஏற்பாடுகளைச் செய்தார். ஆனால் இவைதயெல்லாம் பொருட்படுத்தாமல், ருஷியா தனது வெளிநாட்டு மந்திரியானகுரோமிக்கோவை ஜெனிவாவிலிருந்து வாஷிங்டனுக்கு அனுப்பி டல்லஸுக்கு மரியாதைதெரிவித்தது பெரிய காரியம். தனது அரசியல் எதிரிகளின் மதிப்பையும் மரியாதையையும் டல்லஸ் பெற்றார் என்றால் அதற்குக் காரணம் அவரது தூய்மையான வாழ்க்கையும் ஒழுக்க சீலமுமேயாகும்.

மரணம், பழைய மனஸ்தாபங்களையெல்லாம் நீக்குமென்று கூறுவதுண்டு. டல்லஸின் மறைவு, அமெரிக்க—ருஷிய பழைய வேற்றுமைகளை நீக்கி, புதிய நல்லுறவுக்கு வழிசெய்யுமாயின் அது பெரிதும் வரவேற்கப்படும். அதற்குக் குரோமிக்கோவின் இந்த வாஷிங்டன் விஜயம் பெரிதும் உதவி, நல்லெண்ணத்தைப் பரப்புவதாக இருக்கவேண்டும்.

புதுசீனத்தை அங்கீகரிக்க மறுத்ததுடன் அது ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்க முடியாமல், டல்லஸ் தடுத்துவந்ததால் அவரைத் தனது முதல்நம்பர் விரோதியாகப் புதுசீனம் நினைக்கலாம். அவருக்கு மரியாதை செலுத்த ருஷியாவின் குரோமிக்கோ சென்றதும் பீகிங்குக்குப் பிடிக்காதென்றும் ருஷியாவுக்கும் புதுசீனத்துக்கும் இதனால் மனஸ்தாபம் அதிகரிக்கலாம் என்றும் சில ஹேஷ்யங்கள் கூறுகின்றன. ஆனால் இதற்கு மாறாக அமெரிக்க—ருஷிய உறவுகள் பலப்படுவதின்மூலம், புதுசீன விஷயமாகவும் அமெரிக்காவின் மனம் இனி மாறுவதும் சாத்தியமே.

இது எப்படியாயினும், டல்லஸின் அரசியற்கொள்கையை ஒப்பமுடியாதவர்களும் அவருக்கு இப்போது மரியாதை செலுத்துகின்றார்கள். தமது வாழ்க்கையையே, தமது நாட்டுச் சேவைக்காக அர்ப்பணித்த உண்மைத் தியாகி அவர். அவரது தேசாபிமான ஆர்வமும், ஒழுக்கசீலமும் மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாகும். அவரது மறைவால் அமெரிக்கா ஓர் உண்மைத் தேசாபிமானியையும், மேற்கு வல்லரசுகள் ஓர் உற்ற நண்பரையும், உலகம் ஒரு பெரிய மனிதரையும் இழந்துவிட்டன.

## தமயந்தி பெற்ற முதல் பரிசு

தமயந்தி ஓர் அழகான கண்டிய சிங்களப் பெண். வயது 11 இருக்கும். நெற்றியில் திருநீறும் பூசி, சந்தனத்தின்மீது குகுங்மப்பொட்டு வைத்துக் கொண்டிருந்தாள்!. பார்த்தால் ஒரு சைவப்பெண் மாதியே இருந்தது. சிரித்துச் சிரித்து ஆங்கிலத்தில் பேசுகின்றாள்.

கண்டி தென்னங்கும்பா சச்சிதானந்த தபோவனத்திலே நடைபெற்ற யோகாசனப் போட்டியிலே, சிறு பெண்கள் பகுதியில் கலந்து, முதல் பரிசான ஒரு கடிகாரத்தை ஸ்ரீமதி கமலம் துரைசாமியிடமிருந்து தமயந்தி வணங்கிப் பெற்ற காட்சி என் கண்ணில் அப்படியே நிற்கின்றது.

* * *

சிறுவர் பகுதியிலே ஒரு இஸ்லாமிய மாணவனுக்கு முதல் பரிசு கிடைத்தது! ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்களும், குடும்பப் பெண்களும் போட்டியில் கலந்து பரிசு பெற்றார்கள். பம்பாயிலிருந்து வந்த ஒரு குஜராத்தித் தாய்க்கு இரண்டாவது பரிசு கிடைத்தது.

குருநாக்கல் கச்சேரியில் பெரிய உத்தியோகம் பார்க்கும் சரவணபவனுருக்கு வயது 50 க்கு மேலாகும். சென்ற ஆண்டில் அந்த வகுப்பில் முதல் பரிசு பெற்ற அவரே, இம்முறையும் முதல் வெற்றிபெற்றார். என்றாலும் தமது பரிசை விட்டுக் கொடுத்து அடுத்தவரான ஒரு தோட்ட கங்காணியாருக்குக் கொடுக்கும்படி செய்து பெரிய கரகோஷம் பெற்றார்.

ஒரு சிங்களப் பையன். சில காலமாக உடல் நலம் சரியில்லாமலிருந்ததாம். சிலவாரங்களாக யோகாசனம் செய்ததில் தான் குணமடைந்துவிட்டதாக மகிழ்ச்சியுடன் என்னிடம் ஆங்கிலத்தில் தெரிவித்தான். போட்டியில் அவன் கலந்து கொண்டாலும் பரிசு கிடைக்கவில்லை. என்றாலும் நற்சாட்சி ஆசிப்பத்திரம் பெற்றான்.

* * *

கண்டி நடனத்தில் புகழ் பெற்றவர்கள் இப்போது தங்கள் உடல்கட்டும் உள்ளமும் மேலாக இருக்க, யோகாசனப் பயிற்சியைப் பெறுவதாக அறிந்தேன். யோகிராஜ் ஸ்வாமி சச்சிதானந்தரிடம், யோகாசனம் கற்க பல சிங்களவர்களும் ஆவலுடன் முன்வருகின்றார்கள். மலைநாட்டிலே யோகாசனங்கள் மூலம் தமிழ்—சிங்கள, இலங்கை—இந்திய, இந்து—பௌத்த—கிறிஸ்தவ—இஸ்லாமிய ஒற்றுமை பலப்பட்டுவருவதைக் கண்டேன்.

* * *

இரண்டு வருஷங்களுக்கு முன் ஒரு தோட்ட சொந்தக்காரர்—60 வயதுக்கு மேலிருக்கும்—பலவித நோய்களால் அவதிப்பட்டாராம். சாப்பிடாத மருந்தில்லை. அவர் பின்னர் யோகாசனங்கள் பழகி, குணமடைந்ததுடன், இப்போது வரவர இளமையாகி, முகத்தில் புதுப்பொலிவு ஏற்பட்டு வருவதைக் கண்டேன்.

* * *

கொழும்பிலே ஒரு கத்தோலிக்க அன்பர். வியாபாரி. அவரும் நோயால் அவதிப்பட்டு, பல டாக்டர்களையும் பார்த்தார்—பயனில்லை. முடிவில் தாமாக, புத்தகங்களைப் படித்து, யோகாசனங்கள் பழகி, குணமடைந்து விட்ட தாயும், தம் வீட்டில் சின்னச் சின்ன குழந்தைகளும் இப்போது ஆசனங்களைத் தவறாமல் செய்வதாயும் இதனால் மாதம் ரூபா 150 க்கு மேல் டாக்டர் "பீஸ்" மிச்சமென்றும் பெருமையுடன் தெரிவித்தார்.

* * *

இந்திய பிரதம நேருவும் அவரது மந்திரிகளான,மொரார்ஜீ தேசாய், ஜகஜீவனராம், லால்பகதூர் சாஸ்திரி, குல்ஸா

(9-ம் பக்கம் பார்க்க)

# பண்டாவின் புதிய ஆவல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆவல் இல்லாவிட்டால் அவர் இந்த ஒப்பந்தத்தையே செய்திருக்கமாட்டார்.

அவரது கட்சிக்குள்ளாகவே பலருக்கு அந்த ஒப்பந்தம் பிடிக்கவில்லை. இந்த ஒப்பந்தம் காரணமாகத்தான் நாட்டில் வகுப்புக் கலவரங்கள் கிளம்பியதாக யு. என். பி. கட்சியைச் சேர்ந்த ஸ்ரீ பண்டா ஒரு பொதுக்கூட்டத்தில் சென்ற வாரம் வாய்விட்டுச் சொன்னர். இந்த ஒப்பந்தம் நாட்டைப் பிளக்கச்செய்யுமென்றும், தமிழ்ப் பகுதிகளில் சிங்களவர் குடியேற முடியாது தடுக்குமென்றும் இதைத் தாம் அனுமதிக்க முடியாதென்றும் யு. என். பி. தலைவர் ஸ்ரீ டட்லி சேனநாயக்காவும் பல கூட்டங்களில் கூறி எதிர்த்தார்.

ஒப்பந்தம் முறிந்தது. நாட்டில் கலவரங்கள் ஏற்பட்டு, பல உயிர்களைப் பலி வாங்கியது. பின்னர் அவசர நெருக்கடிப்பிரகடனம் செய்து, அதன் பாதுகாப்பில் "நியாயமான அளவு தமிழ் உபயோக" மசோதாவை, தமிழரைத் திருப்தி செய்வதற்காக அவர் நிறைவேற்றினர். இதன்பயனக, எம். ஈ. பி. கட்சியிலிருந்து சில மொழி வெறியர்கள் வெளியேறினர்.

### தமிழரைத் திருப்தி செய்ய

ஸ்விட்ஸர்லந்திலுள்ளது போல் இங்கு மண்டல சுதந்திரத்துடன் கூடிய அரசியலை ஏற்படுத்தவேண்டுமென்று அவர் கூறிவந்ததுடன், அரசியல் சீர்திருத்த சபையையும் நியமித்தார். இதையும் யு. என். பி. எதிர்த்து வருகிறது. புண்பட்ட தமிழரைத் திருப்திசெய்யவே பிரதமர் இந்த நடவடிக்கையையும் எடுத்துக் கொண்டார்.

சமீபத்தில் 'ஸ்ரீ' பஸ்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதை ஆட்சேபித்ததும், தமிழரைப் புண்படுத்த வேண்டாமென்று மதித்து அப்பஸ்களை திருப்பி எடுத்துக்கொள்ளுமாறு செய்தார்.

நயினதீவில் இராணுவத்தினர் சிலர் விஷமம் செய்தது பற்றி ஆட்சேபித்ததும் அங்கிருந்து இராணுவத்தையே அகற்றச் செய்தார் பிரதமர்.

இதெல்லாம் சின்ன விஷயங்கள்தான் என்ருலும் தமிழரை மேலும் புண்படுத்தக்கூடாதென்பதிலும் அவர்களைத் திருப்திப்படுத்தக் கூடுமானதைச் செய்ய வேண்டுமென்பதிலும் அவருக்குள்ள ஆவலை இவை காட்டுகின்றன.

### மொழித் தவறு

யு. என். பி. யிலிருந்து அவர் விலகி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை ஆரம்பித்த போது சிங்களமும், தமிழும் அரசாங்க மொழிகளாக இருக்குமென்று அக்கட்சியின் அடிப்படைக் கொள்கைகளில் குறிப்பிட்டிருந்தார். இதனல் பல தமிழர் அக்கட்சியில் சேர்ந்திருந்தனர். ஆனல் தேர்தல் காரணமாகவும் சில பாஷை வெறியர்களின் ஆதரவுக்காகவும், இதை மாற்றினர். நியாயமான தமிழ் உபயோகத்துடன் கூடிய சிங்கள மொழி தீர்மானத்தை நிறைவேற்றச் செய்தார். யு. என் பி. யின் தீர்மானத்தில் நியாயமான தமிழ் உபயோகத்துக்கும் இடமில்லை. இதையெல்லாம் பார்க்கும்போது, தமிழரைப் பொறுத்தவரை ஸ்ரீ பண்டாரநாயக்காவின் போக்கு யு. என். பி. யைவிட மேலானதென்பது தெரிகின்றது.

சென்ற பொதுத்தேர்தலில், தனிச் சிங்களம் காரணமாகவே அவர் வெற்றிபெற முடிந்ததா? அப்படி யாரும் கருதுவாராயின் அது சரியல்ல. அது உண்மையாயின், மொழிவிஷயத்தில் அதிக தீவிரமாகஇருந்த யு. என். பி. ஏன் முறியடிக்கப்பட்டிருக்கவேண்டும்? மொழி விஷயத்தில் தமிழுக்கு அந்தஸ்துக் கொள்கையைக் கடைப்பிடித்த சமசமாசக் கட்சியினரில் எப்படி 14 பேர் வெற்றி பெற முடிந்தது? இதையெல்லாம் பிரதமர் நிதானமாகச் சிந்தித்தால், மொழிச் சட்டத்தைத் தாம் அவசரப்பட்டு, சில மொழி வெறியர்களின் தூண்டுதல்மீது நிறைவேற்றி, நாட்டின் சமூக அமைதியைக் கெடுத்த தவறை உணரமுடியும்.

ஆனல் திடீரெனப் பலர் அவரது கட்சியிலிருந்து விலகியதால், பார்லிமெண்டில் அவரது கட்சிக்கு மிகவும் பல வீனமேற்பட்டது. இப்போது 'பூரண மெஜாரிட்டி' தமக்கு இல்லை என்று வாய்விட்டுச் சொல்லுகிருர். சிலர் ஆதரிப்பதாக வாக்களித்துள்ளதால் இன்னும் இரண்டு வருடம் தமது ஆட்சியை நீடிக்கலாமென்பது அவரது நம்பிக்கை.

### தமிழ் எம். பிக்கள்

நெருக்கடியான இந்தப் புதிய நிலையில், அரசாங்கம் தமிழ் எம். பிக்களின் ஆதரவைப்பெறமுயற்சிக்கின்றதாம். தமிழ் எம். பிக்களெல்லாம் ஒன்று சேர்ந்துகட்டுப்பாடாக அரசாங்கத்தை ஆதரித்தால் பல நன்மைகளைப் பெறலாமென்று யோசனை கூறப்பட்டதாயும், ஆனல் இதற்கு சமஷ்டிக்கட்சித் தலைவர் ஒப்பவில்லை என்றும் தெரிகிறது. ஒரு தமிழ் எம். பியே இவ்விதமாக முயற்சி எடுத்ததாயும் அது இதுவரை பலிக்கவில்லை என்றும் அறிகிறேன்.

## தமயந்தி பெற்ற முதல் பரிசு

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ரிவால் நந்தா, ஜே. ஸி. ரெட்டி சத்யநாராயண சின்ஹா, இவர்களும், காங்கிரஸ் தலைவர் திருமதி இந்திராகாந்தியும் 40 நாள் யோகாசனப் பயிற்சி பெற்றதாயும், இன்னும் தினசரி யோகாசனம் செய்து வருவதாயும், சுவாமி திரு மந்திர பிரம்மச்சாரி தெரிவித்ததாக ஒரு புது டில்லி செய்தி கூறுகிறது.

ஜம்முவிலே ரூபா 10 லட்சம் செலவில் ஒரு யோகாசனக் கல்லூரி ஆரம்பிப்பதாயும், அதற்கு இந்திய அரசாங்கம் 5 லட்ச ரூபாய் நன் கொடை அளித்திருப்பதாயும், காஷ்மீரச் செய்தியொன்று தெரிவிக்கிறது.

* * *

இலங்கையிலும் அவ்வித கல்லூரியை மலைநாட்டில் நுவரேலியா, அல்லது அட்டனில் ஆரம்பிக்கலாமென்றும், இதற்கு அரசாங்கம் பண உதவி அளித்தால், பொது மக்களிடம் அதே தொகையை வசூலித்து அக்கல்லூரியைத் தாம் நடத்துவதாகவும் யோகிராஜ் சச்சிதானந்தர் சென்ற ஞாயிறன்று தபோவனத்தில் நடந்த வருடாந்த விழாக் கூட்டத்தில் அறிவித்தார். இங்குள்ள அரசாங்கம் இதற்கு இச்சமயம் முன்வருமா? என்பது நிச்சயமில்லை. நேருஜி இதில் சிரத்தை காட்டுவது தெரிந்தால் அவர் நண்பரான பண்டாவும் இதற்கு ஆதரவு காட்ட முன்வரக்கூடும்.

எப்படியும் உடலையும் உள்ளத்தையும் பலப்படுத்தித் தூய்மையாக்கும் இந்த நல்ல இயக்கம் இலங்கையில் பரவி, இங்கு பல சமூகங்களிடையேயும், சமயங்களிடையேயும் புதிய ஒற்றுமை ஏற்பட வழி பிறக்குமாயின், அதற்கு எவ்வளவு லட்சம் செலவு செய்தாலும் தகுமல்லவா? சிரத்தையுள்ளவர்கள் இதற்கான முயற்சியை எடுப்பது ஒரு மேலான தேசிய கைங்கரியமாகும்.

— ஐயாறன்.

## பூஜ்யம் தபால்

கனம் பண்டாரநாயக்கா,
பிரதம மந்திரி,
கொழும்பு.

பிரதமரே!

மலைவிழுங்கி மகாதேவனுக்குக் கதவு ஒரு அப்பளம். நெருக்கடிகளைச் சிருஷ்டித்து அவற்றிலேயே வளர்ந்துவரும் தங்களுக்கு, எந்த நெருக்கடியும் ஒரு கொசுக்கடிதான்.

தங்களுக்கு எதிராகப் பல அரசியற் கட்சிகளும், இப்போது கிளர்ச்சிகள் செய்ய முற்பட்டுள்ளதாகவும், தங்கள் மந்திரிசபை ஆட்டங்கண்ட பற்கள்போலவென்றும், எல்லாம் விழுந்துவிடுமென்றும் கூறுவதைத் தாங்கள் அறிவீர்கள்.

விசேஷ பாதுகாப்பு அதிகாரங்களும், இராணுவ பலமும், கவர்னர் ஜெனரல் சேர் ஒலிவரின் நட்பும் இருக்கையில் தங்களுக்கு என்ன கவலை? இதற்கெல்லாம் தாங்கள் அஞ்சமாட்டீர்களென்பது எனக்குத் தெரியும்.

இப்படிக்கு
**பூஜ்யம்**

குறிப்பு :

மறந்துவிட்டேன். அவசர காரணமாகவே இக்கடிதத்தை எழுதினேன். யாழ்ப்பாணத்தில் முகாமிட்டிருக்கும் தங்களது இராணுவ சிப்பாய்களில் இருவர் ஒரு வீட்டில் புகுந்து ஒரு பெண்ணை இம்சித்ததாயும், பொலிசார் விசாரணைசெய்து வருவதாயும் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

வேலையில்லாமல் சும்மா சோம்பியிருந்தால், சைத்தான் புகுந்து விஷமம் செய்யுமல்லவா? யாழ்ப்பாணம் மிகவும் அமைதியான இடமென்றும், அங்கு இராணுவக் காவல் வேண்டாமென்றும், தங்கள் மந்திரிகளில் ஒருவரே நேரில் சென்றுபார்த்துத் தெரிவித்தார்.

முன்னர் நயினதீவிலே சில சிப்பாய்கள் விஷமம் செய்ததைக் கேட்டதும், தாங்கள் உடன் அங்கிருந்து இராணுவத்தை வெளியேற்றிவிட்டீர்கள். இப்போது யாழ்ப்பாணத்தில் விஷமம் தலைதூக்குவதால், சற்றும் காலம்தாழ்த்தாமல், அங்கிருந்து இராணுவத்தை வெளியேற்றி விடுவீர்கள் என்று நம்பும்.

"பூ"

**கனம் மரைக்கார்**
தபால் மந்திரி
கொழும்பு.

அமைச்சரே! ஆயுபவன்!

தங்கள் நிர்வாகத்திலுள்ள ரேடியோவிலே, இலங்கை மந்திரிசபை மாறுதல்களைப்பற்றி ஒரு வார்த்தையும் கூருமல் இருந்துவிட்டீர்கள். இது தங்களது மேலான ராஜ தந்திரத்தையே காட்டுகின்றது. மௌனம் கலகம் நாஸ்தி என்பதைத் தாங்கள் நன்கு உணர்ந்திருக்கிறீர்கள்.

இது தெரியாமல், சிலர் தங்களைப் பற்றியும் கொழும்பு ரேடியோ பற்றியும் புகழ் கூறுகிருர்கள். நான் கூட முதலில் சிலநாள் இலங்கை ரேடியோவைத் திருப்பி, ஆவலுடன் செய்தியைக் காத்திருந்தேன். ஜெனிவா மகாநாட்டு விவரங்களெல்லாம் சொன்னீர்கள். ஆனல் நமது இலங்கையைப் பற்றி ஒரு வார்த்தையும் கூருதது ஏமாற்றமாக இருந்தது.

பிறகு இந்திய ஆகாசவாணியைத் திருப்பினேன். இலங்கைச் செய்தியெல்லாம் அறிந்தேன். லண்டன் பி. பி. ஸியும் இதை அறிவித்தது. இனி நமது இலங்கைச் செய்திகளை அறிய எந்த ரேடியோவைத் திருப்பவேண்டுமென்பதைத் தெரிந்து கொண்டேன். பிறர் நமது சமாசாரங்களைத் தெரிவிக்கும்போது, நாம் ரேடியோவிலே ஏன் வீணுக இதையெல்லாம் கூறவேண்டும்?

இப்படிக்கு
**பூஜ்யம்**

குறிப்பு :—

தங்கள் ஜப்பானிய யாத்திரை இம்முறையும் தடைபட்டதை அறிந்து வருந்துகிறேன். இங்குள்ள நெருக்கடியில் எப்படிப் புறப்படுவது என்று தேசாபிமானத்துடன் இருந்துவிட்டீர்கள். இனி எப்போது புறப்பட திகதி வைத்திருக்கிறீர்கள்?

குருநாகலில் யானைமீது தாங்கள் ஏறி பவனி வந்த காட்சியைக் கண்டேன். தங்களுக்குக் கண்திருஷ்டி விழாமல் இருக்க வேண்டும்!

"பூ"

# நம்பிக்கையில்லாத் தீர்மானம்

## பிலிப் குணவர்த்தன சமர்ப்பிப்பார்

கொழும்பு

வருகிற ஜூன் மாதம் முதல் வாரத்தில் பார்லிமெண்ட் கூடியதும் அரசாங்கத்தின்மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தை, முன்னுள் மந்திரி ஸ்ரீ பிலிப் குணவர்த்தன சமர்ப்பிக்கத் தீர்மானித்துள்ளார்.

இப்பிரேரணையை எல்லா முக்கியமான எதிர்க்கட்சிகளும் ஆதரிக்குமென்றும் ஆனலும் இது நிறைவேருதென்றும்அதற்கிடையே அரசாங்கத்துக்குப் போதிய ஆதரவு கிடைக்குமென்றும் அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

சமஷ்டிக்கட்சி இப்பிரேரணையை ஆதரிக்காது என்று சில வட்டாரங்களில் கூறப்பட்டதை அக்கட்சியைச் சேர்ந்த ஸ்ரீ வன்னியசிங்கம் மறுத்ததுடன், சமஷ்டியையும், சம அந்தஸ்து பெறவும் ஒப்புக் கொள்ளும் அரசாங்கத்தையே தங்கள் கட்சி ஆதரிக்குமென்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே, பிரதமர் தமிழ்ப் பிரதிநிதிகளை அழைத்துப் பேசுவாரென்றும், தமிழ்ப் பிரதிநிதிகள், தமது அரசாங்கத்தை எதிர்க்கவேண்டாமென்றும், கூடுமானவரை தமிழரின் அபிலாஷையைத் தாம் நிறைவேற்றி வைப்பதாக உறுதி கூறலாமென்றும் அரசியல் வட்டாரங்களில் பலத்த வதந்திகள் உலாவுகின்றன.

## பெரிய வர்த்தகர்களின் புதிய நம்பிக்கை

கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்துக்கு, உணவுப்பொருள் இறக்குமதி பற்றி ஏகபோக உரிமை அளிக்கப்பட்டுள்ளதை அரசாங்கம் நீக்கிவிடுவதைப்பற்றி இங்கு பெரிய வர்த்தகர்களிடையே மகிழ்ச்சியும் புது நம்பிக்கையும் நிலவுகின்றன.

மைசூர் பருப்பு இறக்குமதி உரிமையை அந்தஸ்து பணத்துக்குக் கொடுத்த பின்புதான் அதற்குப் பஞ்சமேற்பட்டுள்ளதாயும், அந்த ஏகபோக உரிமையை அகற்றினல் 15 நாட்களுக்குள்ளாக தாங்கள் ஏராளமான மைசூர் பருப்பை இறக்குமதி செய்வதாகவும் சில பெரிய வர்த்தகர்கள் உறுதி கூறியுள்ளனர்.

வாழ்க்கைச் செலவுகளைக் குறைக்க அரசாங்கம் வர்த்தகர்களின் உதவியையும் ஆதரவையும் நாடுமென்றும் வர்த்தகக் கட்டுப்பாட்டுகளை தளர்த்துமென்றும் தெரிகிறது.

## சுவாமி நிச்ரேயஸானந்தாஜி இலங்கை சுற்றுப்பிரயாணம்

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த ராஜயோகி சுவாமி நிச்ரேயஸானந்தாஜி மகராஜ் இப்போது இலங்கை விஜயம் செய்து சமய சம்பந்தமான பல அரிய பிரசங்கங்களை கொழும்பில் செய்து வருகின்ருர். சமீப காலம் வரை அவர் "பிரபுத்த பாரதம்" எனும் ஆங்கில மாத வெளியீட்டின் ஆசிரியராக இருந்தவர். பாரிஸ், மோரிஸ் முதலிய இடங்களில் ஸ்ரீ ராமகிருஷ்ண ஆசிரம நிர்வாகியாகவும் சென்னை விவேகானந்தா கல்லூரி 'ரெக்டராக'வும் சேவை செய்தவர். அவர் பிரம்மச்சாரியாக இருக்கையில் யாழ்ப்பாண வைத்தீஸ்வர வித்தியாசாலையில் ஆசிரியராக பணியாற்றியுள்ளார். வெசாக் தினத்தன்று கொழும்பு ஸ்ரீராமகிருஷ்ண மிஷனில் புத்தபெருமானின் வாழ்க்கையும் உபதேசமும் என்பது பற்றி அரியதோர் உபன்யாசம் செய்தார். மே 26 முதல் ஜூன் 4 வரை கொழும்பில் பத்து பிரசங்கங்கள் வரை செய்துள்ளார் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை, கதிர்காமம் முதலிய இடங்களைத் தரிசிப்பார்.

## இந்தியக் குடியரசுத் தலைவர்

### யாழ்ப்பாணத்துக்கு மேயர் அழைப்பு

யாழ்ப்பாணம்

இந்தியக் குடியரசுத் தலைவர் இராஜேந்திர பிரசாத் அவர்கள் அடுத்த மாதம் நடுப்பகுதியில் இலங்கைக்கு விஜயஞ் செய்யும்போது யாழ்ப்பாணத்துக்கும் அவரை அழைப்பதற்கான நடவடிக்கைகளை யாழ்ப்பாணம் மேயர் திரு. அல்பிறெட். துரையப்பா மேற்கொண்டுள்ளார். இது சம்பந்தமாக வெளி விவகார அமைச்சுடனும், குடியரசுத் தலைவருடனும், இந்தியத் தூதுவருடனும் மேயர் கடிதப் போக்குவரத்து நடாத்தி வருகின்ருர்.

## பிரிந்து வாழ்வது தமிழருக்கு உகந்ததல்ல

யாழ்ப்பாணம்

தமிழரசுக் கட்சியினர் கூறுவதுபோன்று நாம் வடக்குக் கிழக்கு மாகாணங்களைத் தமிழர்களுக்காக ஒதுக்கிவைக்க வேண்டுமென்ருல் சிங்கள மக்களும் ஏனைய மாகாணங்களைத் தமக்கென ஒதுக்கிக்கொள்வார்கள். ஆகவே தமிழர்களாகியநாம் இலங்கையிலுள்ள ஒவ்வொரு மாகாணத்திலும் உரிமையுடன் வாழவேண்டின் பிரிந்து வாழ்வது உகந்ததல்ல. இவ்வாறு ஓட்டுமடம் சமசமாச வாலிபர்சங்கத்தின் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் திரு. இ. பானுதேவன் பேசும்போது குறிப்பிட்டார்.

இக் கூட்டம் சென்ற செவ்வாய்க்கிழமை தலைவர் திரு. மா. தியாகராசா தலைமையில் நடைபெற்றது.

திரு. அ. விசுவநாதன் பேசுகையில் இலங்கை முன்னேற வேண்டுமானல், தமிழர்கள் கடைத்தேறவேண்டுமேயானல், சமசமாசக் கட்சி சார்பில் ஒத்துழைத்து முற்போக்கான சிங்களச் சகோதரர்களுடன் ஒத்துழைத்தல் வேண்டுமெனக் கூறினர்.

## சுவாமி நிச்ரேயஸானந்தாஜி யாழ்ப்பாண வருகை

சுவாமி நிச்ரேயஸானந்தாஜி யாழ்ப்பாணத்தில் 5, 6, 7-ஆம் திகதிகளில் தங்கி நிற்பார்கள். அந்நாட்களில், மாலை 6 மணிக்கு வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் விரிவுரைகள் ஆற்றுவார்கள்.

நகைகளுக்கும்

வைரங்களுக்கும்

ஏ.
கே.
எஸ்.
அன்
சன்ஸ்

நகை
மாளிகை

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

மாதர் பகுதி

# தென் சுமத்திராவில் நிலவும் விவாக முறை

— 'ஆர்சீவி' —

தென் சுமத்திரா மக்களின் விவாகச் சடங்குகள் மிக அமைதியாகவும் ஆடம்பரமின்றியும் நடைபெறுகின்றன.

முதல் நாள் மாப்பிள்ளை வீட்டிலே தான் மணச்சடங்குகள் நடைபெறுவது வழக்கம். இந்தச் சடங்குகளை ஓர் இஸ்லாமிய குரு திறம்பட நடாத்தி வைப்பார். இந்த வைபவத்திற்கு பெண்வீட்டார் வருவார்கள். ஆனல் மணப்பெண் கலந்து கொள்ளமாட்டாள்.

### கலியாண ஊர்வலம்

இரண்டாம் நாள் கோலாகலத்துடன் சடங்குகள் ஆரம்பமாகும். இரண்டு மூன்று அடர்த்தியான உடைகளை யணிந்து கொண்டு மாப்பிள்ளை பெண் வீடு செல்லும் காட்சி களிப்பூட்டுவதாய்த்தானிருக்கும். மேலாடையாக தங்க நூலால் இழைக்கப்பட்ட சரிகைச்சேலையை அணிந்து கொண்டு மேளவாத்தியத்துடன் மணமகன், தனது பரிவாரங்களுடன் செல்லும் காட்சி மிகவும் ரம்மியமானது. இந்தக் கல்யாண ஊர்வலம் மிகவும் அமைதியாகவே சென்று கொண்டிருக்கும். ஊர்வலத்தில் செல்லும் மக்களுக்கு உற்சாகமளிப்பதற்காக "அராபிக் பாடல்கள்" பாடப்படுகின்றன. இந்த இசையமுதம் அந்தக் காட்சிக்கு ஓர் தனிச் சோபையையளிக்கிறது.

### விருந்துபசாரம்

பெண்வீட்டை இந்த ஊர்வலம் அடைந்தவுடன் இவர்களுக்கு வரவேற்பு மிக்க பத்தி சிரத்தையுடன் நடைபெறுகிறது. திரு குர்ஆனின் செய்யுட்களைச் சிலர்பாட 'மஞ்சள் நிற அரிசி' இவர்கள் மீது தூவப்படுகின்றது. பின் மணமகன் பெண்ணிருக்கும் அறைக்குள் அழைக்கப்படுகிறுன். இங்கே இவனின் எதிர்கால மனைவி அழகான ஆடை ஆபரணங்களணிந்து திருமணக்கோலத்துடன் காட்சியளிக்கிருள். இவளின் தலையலங்காரங்கள் பார்ப்பதற்குக் கவர்ச்சிகரமாகத்தானிருக்கும். தங்க நூலால் பின்னப்பட்ட தலை ஆடையை இவள் நாகரிக முறையில் அணிந்து கொள்கிருள். மணக்கோலத்தில் காட்சியளிக்கும் போது அழகான பட்டுப்பாவாடை அணிந்து மேற்சட்டையும் போட்டுக் கொள்ளுகிருள். இந்த ஆடை அலங்காரத்துடன் தங்கத்தால் செய்யப்பட்ட காப்புக் கங்கணங்கள், ஆரம், காதணி, 'புருச்' ஆகியவற்றையும் அணிகிருள். இதற்குப் பின் மணமகனும் மணமகளும் விருந்தினர்கள் இருக்குமிடத்திற்கு வருவார்கள். வந்தவுடன் விருந்தினர் மத்தியில் இவர்களுக்கென பிரத்தியேகமான மலர்களாலமைக்கப்பட்ட மணவறையில் அமர்வார்கள். இந்த வைபவம் நடக்கும்போது விருந்தினருக்கு எண்ணெயில் வதக்கிய சோறு பரிமாறுவார்கள். அனேகமாக இந்தச் சடங்குகள் முற்பகலில் நடைபெறுவதால் பிற்பகலில் விருந்தினர் தத்தம் வீடுகள் சென்று விடுகின்றனர். மணமகளின் இல்லத்தில் மூன்று நாட்களுக்கு மணமகன் தங்குகிறுன். இந்த வைதிகச் சடங்குகள் மூன்று பகல்களிலும் மூன்று இரவுகளிலும் நடைபெறுகின்றன.

### தகப்பனர் இல்லத்தில்

இதற்குப்பின் (ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்குப் பின்) மணமகன் தன்னுடைய தகப்பன் வீட்டுக்கு அழைத்துச் செல்லப்படுகின்ருன். இங்கேயும் ஒரு மாபெருஞ் சடங்கு நடைபெறுகிறது. இந்தச் சடங்கு மூன்று பகல்களிலும் மூன்று இரவுகளிலும் நடைபெறும். இதற்குப்பின் மணமகன் மீண்டும் மணமகள் இல்லம் செல்கிருன். இங்கே இவனுக்கு ஓர் வித வரவேற்பு அளிக்கப்படுகிறது. மணமகனும் மணமகளும் பக்கத்திலேயிருக்க வயது முதிர்ந்த பெண்கள் இவர்கள்மீது பாத்திரத்திலுள்ள தண்ணீரை ஊற்றிப் 'பல்லாண்டு வாழ்க' என்று வாழ்த்துவார்கள். இத்துடன் மண வைபவம் முடிவடைந்து விடும். மிகுதி நாட்களில் மணமகள் தன் இல்லத்திலிருந்து அடுக்களை தட்டுமுட்டுகளான 'கேத்தில்' கோப்பைகள் கரண்டிமுள் ஆகியவற்றைத் தனது புதிய இல்லமான பெண்வீட்டுக்குக் கொண்டு செல்கிருள். பின் மணமகனும் மணமகளும் புது வாழ்வு வாழ ஆரம்பிப்பார்கள்.

தென் சுமத்திரீய திருமணச் சடங்கு முறைகள் பல நூற்ருண்டுகளாக ஒரு சில மாற்றங்களுடன் நடை முறையிலிருந்தே வருகின்றன. இந்தத் திருமண முறைகளை ஒதுக்காமல் அவைகளைச் சீர் தூக்கிப் பாதுகாத்து வந்தால் தென் சுமத்திரீய பண்பாடானது என்றுமே புத்தொளி பரப்பும் என்பதிற் சந்தேகமில்லை.

உங்கள் கட்டடங்களுக்கு வேண்டிய சகலவிதமான

இரும்புச் சாமான்களுக்கு

எங்களிடம் விசாரியுங்கள்

★ கேடர் வகைகள் எல்லாச் சைஸ்களும்
★ உருண்டைக் கம்பிகள் ,,
★ கொங்கிறீற் வலைகள் எல்லா வகைகளும்
★ சிமெந்து (காங்கேசன்), (யப்பான்)
★ தீந்தை, வார்னிஸ்வகைகள்
★ டிஸ்ரெம்பர் எல்லா நிறங்களிலும்
★ பித்தளைப் பூட்டு, பிணைச்சல் வகைகளும்

எங்களிடம் மிகவும் குறைந்த விலைக்குப் பெறலாம்.

இலங்கையில் தயார்செய்யப்பட்ட
அஸ்பெஸ்ரஸ் கூரைத்தகடுகள் சீலிங் சீற்களும்
எங்களிடம் விற்பனைக்கு ஏராளமாயிருக்கிறது.

சண்முகம் ஸ்ரோர்ஸ்

உரிமையாளர் : ஆ. சண்முகராசா

222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

போன் : 697

# நமது நூல் நிலையம்

**மகாத்மா காந்தி நூல்கள்** மூன்ரும் தொகுப்பு: **ஆசிரியர்** ரா. வேங்கடராஜுலு; **துணையாசிரியர்:** கு. அழகிரிசாமி; **வெளியீடு**: காந்தி நூல் வெளியீட்டுக் கழகம் சர்க்கார் எஸ்டேட், சென்னை 2; **விலை** ரூ. 7-50. இலங்கையிற் பிரபல புத்தகசாலைகளிற் பெற்றுக்கொள்ளலாம். மேலும் விபரம் அறிய விரும்புவோர், திரு. எம். சிவகுருநாதன், 10, முதலாம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு எழுதுக.

தனி மனிதனிடத்திலுள்ள 'நான்' என்பது விடுதலை பெற்று எல்லோரிடத்திலும் 'தான்' ஆகப் பரிணமிக்கிற போது மகாத்மாவாகிறது. உலகத்திலுள்ள எல்லா ஜீவராசிகளையும் யாரொருவர் 'தாம்' ஆகப் பார்க்கிருரோ அவர் தான் **மகாத்மா** எனப் பரகவி இரவீந்திரநாததாகூர் மகாத்மா என்ற சொல்லுக்கு அருமையான விளக்கந் தந்துள்ளார். இத்தகைய மகாத்மாக்கள் எப்படிப்பட்டவர்களாய் இருப்பார்கள் என்பது மற்றக் கேள்வி. இதற்குத் தகுந்த விளக்கம் தந்துள்ளார் கலாயோகி ஆனந்தா குமாரசுவாமி. அவர் கூறுவதாவது: "பூரண வளர்ச்சியும் சீலமும் சித்தசுத்தியும், வருங்காலமறியும் ஆற்றலும் கட்டுப்பாடற்ற தன்மையும் உடையவர்களே மகாத்மாக்கள்."

காந்தி அடிகளும் ஒரு மகாத்மாவே. அவரின் சத்திய வாழ்க்கையும் சீலமும் அகில உலகுக்கும் ஒளியூட்டி வருகின்றன. 'மகாத்மா காந்தி நூல்கள்' வரிசையில் மூன்ரும் தொகுப்பாக வெளிவந்துள்ள இந்நூல் காந்தி அடிகளின் சுய சரிதத்தைக் கூறும் நூலாக அமைந்துள்ளது. எனவே, இதற்கு முன்னர் வெளியான இரு தொகுப்புகளுக்கும் இல்லாத தனிச் சிறப்புடன் இந்நூல் விளங்குகின்றது. இதன்கண் பொறிக்கப்பட்டுள்ள அடிக்குறிப்புக்கள் படிப்பவர்களுக்கு போதிய விளக்கம்தரும் வகையில் சுருக்கமாக அமைந்துள்ளன. காந்தி அடிகளின் வாழ்க்கைக் குறிப்புக்கள் நூற்றுக்கு மேலான பக்கங்களில் வரிசைக் கிரமமாகத் தரப்பட்டுள்ள முறை பாராட்டுதற்குரியது.

காந்தி அடிகளின் சாத்வீகப் போராட்டத்தைப் பற்றி இத்தொகுப்பில் விபரமாக அறிந்து கொள்ளுகின்ருேம். தென்னுபிரிக்காவில் அவர் நடாத்திய போராட்டம் சத்தியத்தின் நித்தியத்தை உலகுக்கு எடுத்துக்காட்டுவதாகும். இறைவனின்மீது பூரண நம்பிக்கை கொண்டவர்களே சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடாத்துவதற்குத் தகுதிவாய்ந்தவர்கள் என்பதை காந்திஜி அனுஷ்டித்துவந்த உண்ணு விரதங்கள் எமக்கு உணர்த்தி வைக்கின்றன.

தமது வாழ்நாளின் ஒவ்வொரு கணத்திலும் கடவுள் தம்மைச் (காந்திஜியை) சோதித்து வருகிருர் என்பதைத் தாம் உணர்ந்து வருவதாகக் காந்திஜி கூறியுள்ளார். இந்நிலையில் அவருடைய வாழ்க்கை முழுவதும் சத்திய சோதனையாகவே அமைந்துள்ளதெனக் கூறின் அது மிகவும் பொருத்தமானதே. "சத்தியத்தை நாடிச் செல்பவர் தூசிக்கும் தூசியாய் பணிவு கொள்ள வேண்டும். உலகம் தூசியைக் காலின்கீழ் வைத்து நசுக்குகிறது. ஆனல் சத்தியத்தை நாடுகிறவரோ அத்தூசியும் தம்மை நசுக்கும் அளவுக்குத் தம்மைப் பணிவுள்ளவராக்கிக் கொள்ளவேண்டும்," இது காந்தி அடிகளின் மணிவாசகங்களில் ஒன்று. அடிகளாரே இதற்கு இலக்காக வாழ்ந்து உலகிடை அஹிம்சா தர்மத்தின் உயர்வை நிலை நாட்டி வைத்தார்.

காந்திஜியின் சுயசரிதையே இந்நூலுக்குச் சிறப்பளிக்கின்றதென ஆரம்பத்திற் குறிப்பிட்டிருந்தோம்; ஆம், இந்நூலை வாசிக்கும்போது பெயர்ப்பு என்ற எண்ணமேயின்றி காந்தி அடிகளே தமிழில் எழுதினுர் என்ற உணர்ச்சியே மேல்ஓங்குகின்றது. அவ்வளவு அருமையான மொழிபெயர்ப்பு. இதற்காக ஆசிரியர்களைத் தமிழ் உலகம் எவ்வளவு பாராட்டினும் தகும். படங்களுடன் நூல் அழகாக வெளியாகியுள்ளது.

---

**HINDU DHARMA**— 1958 – 59 **Editors:** K. Kanapathipillai; S. Chinnaiah; Hindu Students Union. University of Ceylon, Peradeniya.

இலங்கைப் பல்கலைக் கழகத்து இந்து மாணவர் சங்கத்தின் வெளியீடாகிய **இந்துதர்மம்** ஆங்கிலத்திலும், தமிழிலும் அரிய கட்டுரைகளைத் தாங்கிக் கண்கவர் வனப்புடன் வெளியாகியுள்ளது. சுவாமி சிவானந்தா, திரு. கே. ஆழ்வாப்பிள்ளை, பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை டக்டர் திருமதி சரோஜினி இராமானுஜம், உட்பட வேறும் பல அறிஞர்கள் ஆங்கிலத்தில் இந்துமதம் பற்றிய கட்டுரைகளை வரைந்துள்ளனர்.

தமிழில் வெளியாகியுள்ள கட்டுரைகள் அத்தனையும் தரத்தில் உயர்வாகவே விளங்குகின்றன. குன்றக்குடி அடிகளார், திரு. சு. நடேசபிள்ளை, சுத்தானந்த பாரதியார், திரு. ச. முத்திலிங்கம், கலாநிதி சு. வித்தியானந்தன், டக்டர் மா. இராசமாணிக்கனுர், கலாநிதி ஆ. சதாசிவம், நாமக்கல் கவிஞர் ஆகியோரும் வேறும் பலரும் அருள்நெறி நின்று இந்து மதத்தின் தனிச் சிறப்புகளைப் பல்வேறு கோணங்களினின்றும் ஆராய்ந்துள்ளனர். சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் சிறப்புக்கு இக் கட்டுரைகளிற் பல எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.

'மாண்புறு கலையின் பீடம்
மருவிவாழ் இந்து மன்றம்
காண்பவர் கருத்து மல்கக்
கலைமகள் உவகை கொள்ளப்
பூண்டபேர் இந்து தர்மப்
புகலரும் இதழை ஈந்தார்
மாண்டகு மவர்கள் தொண்டு
மன்னியே வாழ்க மாதோ'

எனப் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை இவ் வெளியீட்டை வரவேற்று வாழ்த்தியிருப்பது மிகப் பொருத்தமானதே. **இந்து தர்மம்** இதழாசிரியர்களான திரு. க. கணபதிப்பிள்ளை, திரு. செ. சின்னையா ஆகியவர்களின் ஆர்வத்தைப் பெரிதும் பாராட்டுகின்ருேம்.

### பின்வந்த நூல்கள்

**உங்கள் கம்பன்** — கட்டுரைக் கொத்து — மயிலைத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் மலரும் கம்பன் மலர் 1959; **வெளியீடு** பி. ஸ்ரீ/நூலகம், சென்னை 28; **விலை** மலிவுப் பதிப்பு ரூ. 1-50; வெளியூரில் ரூ. 1-65; நூலகப் பதிப்பு ரூ. 3, **வேலும் மயிலும் (கந்தபுராணக் கதை) ஆசிரியர்** பி. ஸ்ரீ; **வெளியீடு** அல்லயஸ்ன் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை 4; **விலை** ரூ. 3.

# சிறுவர் பகுதி

## பாரதியும் தெய்வமும்

சு. மகேஸ்வரசர்மா (பதிவு எண் 72)

இறைவன் உளன் என்று நம்பும் எண்ணற்ற உத்தமர்களுள் பாரதியும் ஒருவர். இவர் இறைவனைப் பற்றிப் பல பாடல்கள் இயற்றியுள்ளார். இறைவன் இல்லை என்று வீண் தர்க்கம் புரிபவர்களுக்குப் பல பாட்டுக்களின் மூலம் புத்தி புகட்டியுள்ளார். இறைவனைப் பற்றிய நூல்கள் பலவற்றைச் சேகரித்து கருத்தூன்றிப் படித்தார். இயற்கையின் அற்புதப் படைப்புக்களைக் கண்ணால் கண்டு, "இறைவன் ஒருவன் உளன்; அவனன்றி ஓர் அணுவும் அசையாது." என்ற பேருண்மையை விளக்கிக் காட்டினர்.

"தமிழா! தெய்வத்தை நம்பு! பயப்படாதே! என புத்தி புகட்டினர். துன்பம் நேரிட்ட சமயத்திலே மனம் நொந்து தெய்வத்தையே பழிப்பவர்களைப் பார்த்து,

"துன்பம் நெருங்கி வந்த
போதும்—நாம்
சோர்ந்து விடலாகாது
பாப்பா,
அன்பு மிகுந்த தெய்வ
முண்டு துன்பம்
அத்தனையும்
போக்கிவிடும் பாப்பா!
உயிர்களிடத்தில் அன்பு
வேணும்—தெய்வம்
உண்மை யென்று
தானறிதல் வேணும்;"

என மிக அழகாகப் பாடியிருக்கிறார். தெய்வம் எதில் உண்டென்று தெரியாமல் திண்டாடிநேருக்கும், "யாரும் பணிந்திடும் தெய்வம் பொருள் யாவினும் நின்றிடும் தெய்வம். பாருக்குள்ளே தெய்வம் ஒன்று இதிற் பற்பல சண்டைகள் வேண்டாம்" என்ற பாட்டைச் சந்தேகம் தீர்க்கும் மருந்தாய் ஆறுதல் ஊட்டும் மொழியாய் எமக்குத் தந்துள்ளார்.

## கையிழந்து அலறிய சிறுவன்
### ஆஸ்பத்திரியில் பட்ட அவஸ்தை

பாணந்துறைப்பகுதியைச்சேர்ந்த பதினைந்துவயதுச் சிறுவன், புகைவண்டியிலிருந்து கீழே விழுந்து அவன் கை சில்லுகளுக்கிடையில் அகப்பட்டுச் சிதைவுண்டது. அலறித் துடித்த பையனைப் புகையிரத நிலையத்தில் தூக்கிவைத்தனர், நிலைய அதிகாரியும், வேறுசிலரும். அவனை உடனடியாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லவேண்டியிருந்தது. நிலையத்தடியில் பத்துப் பதினைந்து மோட்டார் கார்கள் நிரையில் நின்றன. நிலைய அதிகாரி சிறுவனின் நிலையை விளக்கி, அக் கார்களின் சொந்தக்காரரிடம் உதவி வேண்டினர். ஆனல், அச் சொந்தக்காரரில் ஒருவரினது மனம்கூட இளகவில்லை, அச் சிறுவனின் பரிதாபநிலை கண்டு! அவனை ஆஸ்பத்திரிக்கு ஏற்றிச் செல்ல ஒருவரும் ஒப்புக் கொள்ளவில்லை. கடைசியில், அரசாங்க பஸ் சேவையைச் சேர்ந்த ஒரு வான்தான் அச் சிறுவனை ஏற்றிக்கொண்டு ஆஸ்பத்திரிக்குச் சென்றது.

ஆஸ்பத்திரியில் நடந்தது என்ன? அங்கு அவனுடைய ஒடிந்த கைக்குத் தகுந்த சிகிச்சை கொடுக்க அங்குள்ளவரால் முடியவில்லை. ஏனெனில் அந்த ஆஸ்பத்திரியிலிருந்த சிகிச்சைக் கருவியொன்று பழுதுபட்டுப் பல மாதங்களாகிவிட்டன! சிறுவனை வேறு ஒரு பெரிய ஆஸ்பத்திரிக்கு அனுப்பலாமோவெனில், ஆஸ்பத்திரியில் அதற்கும் வசதியில்லை. கொண்டுசெல்ல அம்பூலன்ஸ் வான் இருந்தது; ஆனல், அதைக் கொண்டுசெலுத்த டிரைவர் இல்லை! கடைசியில், ஆஸ்பத்திரி டாக்டர் பல இடங்களுக்கும் தொலைபேசி மூலம் பேசியதன் விளைவால், இன்னுமொரு ஆஸ்பத்திரியிலிருந்து அம்பூலன்ஸ் வான் வந்துசேர்ந்தது. அதன் பின்னரே, சிறுவன் பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டான். இதெல்லாம் நடந்து முடிவதற்குள் இரண்டு மணித்தியாலங்கள் கழிந்துவிட்டன. இந்த இரண்டுமணி நேரமும் அச் சிறுவனின் உள்ளமும் உடலும் என்ன பாடு பட்டிருக்குமோ!

## புதிய மருமக்கள்

பெயர்களும் பதிவு இலக்கமும்

231. இ. ரகுநாதன், 64. டீன் பிளேஸ், கொள்ளுப்பிட்டி.

232. மு. கருணகரன், தனியன்துறை, கீழ்ப்பகுதி, பூண்டுலோயா.

233. அ. சொர்ணம்பாள், நாருங்கொல்லைத் தோட்டம், வதுளை.

234. வே. புஷ்பராணி, 178, ஸ்ரீகுணனந்தமாவத்தை, கொட்டாஞ்சேனை, கொழும்பு — 13.

235. கு. அரவிந்தன், மே/பா. அ. குருநாதபிள்ளை. ஆசிரியர், காங்கேசன்துறை.

236. பொ. சிவயோகன், பள்ளியவத்தை, அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

237. மு. கார்த்திகேயன், 20, கொழும்பு வீதி, அப்புத்தளை.

238. பா. சந்திரமோகன், 196/2, பொன்னம்மா ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

239. நீ. யோசவ் அன்ரன், 'Airy Dale', கரம்பன் கிழக்கு, ஊர்காவற்றுறை.

240. க. விமலராணி, மே/பா வே. கந்தப்பு, மாப்பாணவூரி, காரைநகர்.

241. ஆர். மகாதேவன், ஆராய்ச்சி வளவு, கொக்குவில்.

242. அ. சோதிலிங்கம், குளப்பிட்டி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு.

243. வெ. கோவிந்தசாமி, 177, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

244. பொ. த. இலங்கைநாதன், அரசினர் மத்திய கல்லூரி, வசாவிளான் P. O.

245. எம். ஏ. கபூர், மே/பா ஏ. கே. எம்., ஏருவூர் 3-ம் குறிச்சி.

246. அ. மேரி ரூசலின், மே/பா. ச. அந்தோனிப்பிள்ளை, அத்துவாம்புலம், இளவாலை.

247. சு. தனபாலகுமாரன், போயிட்டி, காங்கேசன்துறை.

248. வீ. கந்தசாமி (காண்டீபன்) 'கலைச்சுடர்' காரியாலயம், மெயின் வீதி, கபூதாவளை-4.

249. சி. பாபநாசம்சிவன், செட்டித்தெரு, காங்கேசன் துறை.

250. பி. துரைக்குட்டி, மே/பா ரி. புலேந்திரன், தமிழ் பாடசாலை அருகாமை, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

251. இ. பஞ்சாட்சரம், நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

252. ந. தியாகராசா, மூத்தார் வளவு, நீர்வேலி மத்தி, நீர்வேலி.

செல்வக் குழந்தைகளே!

வணக்கம். இந்நாட்களில் வீதிகளில் விபத்துக்கள் அதிகம் ஏற்படுகின்றன. பள்ளிக்கூடம் போகும்போதும் அங்கிருந்து வீடு திரும்பும் போதும் நீங்கள் வீதிகளின் ஓரமாக நடந்துசெல்ல வேண்டும். சமீபத்தில் புகையிரத நிலையம் ஒன்றில் சிறுவன் ஒருவன் விபத்துக்குள்ளான துயரமான செய்தியொன்றை இங்கு வெளியிட்டிருக்கின்றேன். அதனைப் படித்துவிட்டு உங்கள் கருத்தை எனக்கு எழுதி அனுப்புங்கள் பார்க்கலாம்!

சின்னமாமா

## கரும்பு

— வித்துவான், க. வேந்தனார் —

கரும்பு தின்போம் கரும்பு தின்போம்
கரும்பு தின்போம் நாங்கள்
கடித்துக் கடித்து இனிக்க இனிக்கக்
கரும்பு தின்போம் நாங்கள்.

தின்னத் தின்ன இனிக்கும் நல்ல
செங்க ரும்பைப் பாருங்கள்
தென்னை போலவளர்ந் துயர்ந்த
செங்க ரும்பைப் பாருங்கள்.

அடித்த டித்துக் கொல்லும் போதும்
ஆத ரிக்கும் அன்பர்போல்
இடித்தெ டுத்துத் தின்னும் போதும்
இனிக்கும் கரும்பை ஏத்துவோம்.

கருப்பஞ் சாற்றைப் பிழிந்து வெல்லக்
கட்டி ஆக்கித் தின்னுவோம்
விருப்பம் போல அவலிற் போட்டு
விருந்தி னர்க்கும் நல்குவோம்.

## 'ஈழநாடு' சிறுவர் பகுதி

ஈழநாடு சிறுவர் பகுதியில் ஆறு வயது தொடக்கம் பத்தொன்பது வயது நிரம்பிய அனைவரும் உறுப்பினராகச் சேர்ந்து கொள்ளலாம்.

உறுப்பினராகச் சேர விரும்புவோர் இங்குள்ள உறுப்பினர் அமைவுத்தாளை நிரப்பி அனுப்பவேண்டும். இந்த இதழில் வெளியாகியுள்ள அமைவுத்தாள் 6-6-59க்குப் பின்னர்செல்லுபடியாகாது. ஒவ்வொரு வாரமும் இங்கு வெளியாகும் அமைவுத்தாளை அடுத்துவரும் சனிக்கிழமைக்குள் உபயோகித்துக் கொள்ளவும்வேண்டும். ஒருவர் ஒருமுறை உறுப்பினர் அமைவுத்தாளை நிரப்பி அனுப்பினல் போதுமானது.

ஈழநாடு அலுவலகத்திலிருந்து உறுப்பினர் பதிவு இதழ் கிடைத்த பின்னர்தான் ஈழநாடு சிறுவர் பகுதிக்கு உறுப்பினர் தங்கள் கதைகளையும், கட்டுரைகளையும், கருத்துக்களையும் அனுப்ப வேண்டும். அவற்றுள் நல்ல கதைகளும், கட்டுரைகளும் சிறுவர் பகுதி யில் வெளியிடப்படும்.

சிறுவர் பகுதி சம்பந்தமான சகல கடிதப்போக்குவரத்தும் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்:

சின்ன மாமா,
ஈழநாடு சிறுவர் பகுதி,
தபாற்பெட்டி எண் 49,
யாழ்ப்பாணம், இலங்கை.

இங்கே வெட்டவும்

### ஈழநாடு சிறுவர் பகுதி

உறுப்பினர் அமைவுத்தாள்

(30-5-59)

அன்புள்ள சின்னமாமா அவர்களுக்கு
வணக்கம்,

ஈழநாடு சிறுவர் பகுதியில் என்னை ஓர் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பெயர்..............................

விலாசம்..............................

..............................

..............................
கையொப்பம்


..............................
பெற்றார் அல்லது
ஆசிரியரின் கையொப்பம்.

வயது............

இங்கே வெட்டவும்

## அறிஞர்கள் வரலாறு : IV அணுச்சக்தியின் சிற்பி







போர்: 1939ஆம் ஆண்டில், ஹிட்லர் உலகத்தைத் திரும்பவும் போர்க் குழியில் தள்ளிவிட்டார். அத்தருணம், பேராசிரியர் அல்பேர்ற் அயின்ஸ்டீன் ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தை, அணுசக்தியைப் பிளவுபடுத்தும் பரீட்சார்த்தத்தைச் செய்யும்படி வேண்டினர். அமெரிக்க அரசாங்கம் இப் பரீட்சைகளுக்குத் தலைமை வகிக்க டக்டர் பேர்மியையே தெரிவுசெய்தனர். அவர் உடனடியாகவே தம் தொழிலில் ஈடுபட்டார். அணுச்சக்திக்கு எதிர்த்துச் செயலாற்றும் இயந்திரத்தை ஆக்கினர்.

சிக்காகோ பல்கலைக் கழகம்: 1941ஆம் ஆண்டில், அமெரிக்காவும் போரில் இறங்கவே, டக்டர் பேர்மி கொலம்பியாவிலிருந்து சிக்காகோ பல்கலைக் கழகத்திற்கு மாறினர். இங்கு அவர் U235 எனப்படும் உரேனியத்தை U238 என்பதிலிருந்து பிரிக்கப்பாடுபட்டு முயற்சி செய்தார். U235 இல்லாமல், பிளவுபட்ட அணுச்சக்தியின் எதிர்மாற்றம் சங்கிலிக் கோப்பில் உண்டாக்க முடியாது.

வெற்றி: கடைசியில், 1942ஆ ஆண்டில், டிசெம்பர் 2ஆம் திகதியன்று, டக்டர் பேர்மியின் தலைமையில் இயங்கிய விஞ்ஞானிகள் குழு சரித்திரத்திலேயே முதன்முதலாக, அணுச்சக்திக்கு எதிர்மாற்றாகிய ஒரு சங்கிலிக் கோவையைக் கட்டுப்படுத்த முற்பட்டனர். உரேனியம் நிறைந்த குவியல்களிலிருந்து, இயந்திரத்தை இயக்கும் கோல்கள் தளர்த்தப்பட்ட நேரத்தில், தம் பரீட்சை எங்கே கட்டு மீறிவிடுமோ என விஞ்ஞானிகள் பயந்தனர். ஆனல், அப் பரீட்சை ஒரு பெரிய வெற்றியாகவே முடிந்தது.

சிறு கதை

# சங்கமம்

— கே. வி. நடராஜா —

இந்த உலகில் நான் பிறந்து, வளர்ந்து, உலவியதன் பயனாக எதையேனும் விட்டுச் சாக வேண்டும். இதுதான் என்னுள் கிளர்ந்து நிற்கும் பெரும் சிக்கல். ஆனால்...... எதைத்தான் விட்டுச் சாவது?

உடலினுள்ளே உணர்ச்சிகளில் கலந்து செறிந்த அனைத்தும் என்னைக் கைவிட்டுத் தனித்து இருந்து விடுமா? அவை என்னுடன் கூடித்தானே வரவேண்டும். அப்படியானால் எனக்குப் புறம்பாக, என்னை நிர்ணயிக்க நினைவை வெளியுலகம் என்று வது சொல்வதற்கு எதுஉளது? கவிஞனாக இருந்திருந்தால்அமர காவியம் ஏதேனும் மிஞ்சியிருக்கும். இலக்கிய மேதையாக விருந்தால் காலம் பெயரை நினைவில் வைத்திருக்கும். அரசனாகவிருந்தால் வரலாறு என்றைக்கேனும் என்னைக் கூறி விடுமே! ஆனால்,

நான்......

நானாகவே — என்னைப்பற்றி எதையும் வைத்துவிட்டுச் சாக வில்லையே. பின் எதிலேதான் சாகாமல் வாழ்வேன் ஐயோ! இன்னும் சில-நேரங்களில் என் ஆவி உடலை விட்டுப் பிரியப் போகிறதே. இக்குறுகிய கால எல்லையில் எதைத்தான் என் ஞாபகார்த்தமாக விட்டுச் செல்வேன். உலகமே இனி உன்னைப் பார்க்கவே முடியாது. உன்னிடத்திலிருந்து பிரிந்து செல்கிறேன். திரும்ப முடியாத ஓர் உலகத்துக்குப் போய்க்கொண்டிருக்கிறேன். எப்படி நான் அவ்வளவு சுலபத்தில் உன்னை மறக்க முடியும்? நானும் நீயும் சில நாட்கள் பழகிக் கொண்டவர்களா? ஐம்பது ஆண்டுகளல்லவா பழகியிருந்தோம். இந்த பிரிவு நேரத்தில் கூட எமது நட்பின் அடையாளமாய்எதைச் செய்வேன், எவ்விடத்தில் என்ன இருக்கிறது,உன்னை அறியாமல் என்னதான் வைத்திருக்கிறேன்!

ஐயோ! என்னைச் சுற்றி வளைத்த இந்த உலகபந்தத்தை எப்படி மறப்பேன், நடமாடிய போது எதைக் கண்டேன், சுகம் என்ன? இன்பம் எப்படி என்பதைக் காணமலே சாகிறேன். ஆசைகளும் என்னோடு ஒன்றுகூடிச் சாகின்றன.

என் ஆசைகளை எல்லாம் ஒன்று திரட்டி எங்காவது ஓர் இடத்தில் சாகாத சின்னமாக வைத்தால் இந்த உலகம் நினைக்குமா? பரந்த உலகமே அதை அந்த உருவமில்லாத எண்ண அலைகளை ஏற்றுக் கொள்வாயா?

இல்லை! இல்லை! நானே-உருவமுள்ள உயிருள்ளதசையுள்ள எல்லாமே சாகும்போது என் ஏக்கங்கள் மாத்திரம் நிலைத்திருக்கவேண்டாம். ஐயோ! உலகமே! நான் எங்கே சாகாமல் வாழ்வேன்! எந்தக் கல்வெட்டில் பொறிப்பார்கள்.

நான் எதுவுமே செய்ய வில்லை. நன்மையும் செய்ய வில்லை.தீமையும் செய்யவில்லை. என்னை எதிற்றான் பொறிப்பார்கள்.

என்னை அணைத்துக் கொண்டிருக்கும் என் சாவு நண்பனே இந்த நீடித்த இடைவெளிக்குப் பின் நாம் இன்று சந்திக்கிறோம், உன்னை இன்று பார்க்கும்போதும், உன்னுடன் வருவதை நினைக்கும்போதும் என் உள்ளமெல்லாம் பூரிக்கிறது. இந்தப் பரந்த நிலப்பரப்பிலே எங்கெல்லாம் என்னைத் தேடித் தேடி அலைந்தாய்? நாம் பிரிந்து எவ்வளவு காலங்கள் மறைந்து விட்டன. நானும் உன்னைத் தேடித் தேடி அலைந்தேன்.

நண்பா, எப்படி என்னைக் கண்டுபிடித்தாய்? விஞ்ஞான மேதையின் செயற்கைச் சந்திரன் மூலமா? அல்லது உன்னோடு கலந்துள்ள சூக்கும ஒளியின் உதவியினலா?

அன்பு நண்பனே! நீயும், நானும் சேர்ந்துதானே இவ் வுலகத்தில் உற்பவித்தோம். நீ என்னை விட்டுப் பிரிந்த போதே என்னையும் உடன் அழைத்திருக்கக் கூடாதா? இங்கே எத்தனை பயங்கரங்கள். இந்த வஞ்சக உலகிலே எத்தனை கொடுமைகள்.

நண்பனே, இருவரும் சேர்ந்துதானே செல்லப்போகிறோம். அதற்குமுன் நாமிருவரும் பிரிந்து, நான் தனியே இவ்வுலகில்அனுபவித்த சிலவற்றைச் சொல்லிவிடுகிறேன், கேள்!

அவன்தான் என் தந்தை. யாரோ அவன் மட்டும் என்னை விட உசத்தியா? நான் பிறந்த போதே தந்தை இறந்துவிட்டான். தன்னைப் போன்ற ஒரு பாவப் பிண்டத்தைப் பெற்று விட்டோமே என்ற வேதனை போலும்.

காலம் கனவேகமாகச் சுழன்றது. தாயில்லாக் குழந்தையாக வளர்ந்து உருவாகிய என்னைப்பற்றி எப்படிநினைக்கிறாய்? அனாதையானஎனக்கு அண்டை வீட்டார் அடைக்கலம் தந்தார். பெற்றோரில்லாத குழந்தைகளின் அழகைத்தான் உனக்குத் தெரியுமே. "தாய் செத்தால் தகப்பன் சித்தப்பன்" என்ற பழம் வாக்கியங்கூட உண்டு. ஆனால்...... எனக்கு ஒருவருமே யில்லை.

எண்ணெயே கண்டறியாமல் ஏகப் பெருவெளியில் வளர்ந்த என் தலைமுடி ஒன்றோடொன்று பின்னுப்பட்டு புளியிலே தொங்கும் காய்களைப் போன்று தலையின் நாலா பக்கங்களிலும் தொங்கி வழிந்து கொண்டிருந்தன. ஈரும் பேனும் உலகின் பலபாகங்களுக்கும் என்னிடத்திலிருந்துதான் வினியோகிக்கப்பட்டனவோ! உடலில் பல பாகங்களிலும் "பிண்ணக்கு"ப் போன்று திட்டுத் திட்டாக அழுக்கின் அடையாளச் சின்னங்கள். "மூக்கு" பம்பாய் மிட்டாய்க்காரனை மறக்கச் செய்யாது. பற்கள் அசிங்கமாய் நெருக்கியடைத்த முள் வேலி போலிருக்கும். இவைகளைக் கொண்ட முகம் எப்படி என்று கேட்கிறாயா? சகிக்காது போ! உடல் மெலிந்து வயிறு மாத்திரம் பூசனிக்காய் மாதிரி இந்த உருவமே இளமையில் நான்.

சோற்றுக்காக எத்தனை பேர் சாகிறார்கள்எத்தனையோகோடி சித்திரவதைக்கெல்லாம் ஆளாக்கப்படுகிறார்கள். ஆனால்...... என்னை என்ன நினைக்கிறாய்? என் பதினைந்து வயது வரை எனக்குச் சோற்றுக் கவலையே கிடையாது. என்ன, ஆச்சரியப் படுகிறாயா? ஆமாம் நண்பனே உனக்கு மாத்திரம் ஆச்சரிய மல்ல இவ்வுலக மக்களே ஆச்சரியப்படுவார்கள்!

அப்படியென்றால் உண்ணமல் உருவாகிய ஒரு சத்தியாக்கிரகி என்று நினைக்கிறாயா? இல்லை! உண்டேன் எதை? மண்ணும், கரியும், விபூதியும் தான். உருவானேன்.

நான் ஒழுங்காய்ச் சோறு சாப்பிட்டு வாழ்ந்த நாட்கள் இல்லை. எனக்குப் பிரீதியான உணவு சாம்பல் முன் சோறு எம்மாத்திரம்?

சாப்பாடு வகை உருவ மாற்றங்களை உற்பத்தி செய்தன.

கனகதாசர், அடைக்கலம் குறிச்சியில் அதாவது எங்கள் கிராமத்தின் தலைவர் அவர் சொன்னால் சொன்னதுதான். அத்தனை செல்வாக்கு. அங்கே வாழக்கூடிய இருபத்தைந்து குடும்பங்களைத் தரித்திர நாராயணனாக்கிய பெருமை அவரைச் சார்ந்ததே.

என் பரம்பரையினர் கனகதாசர் வீட்டில் மண்டியிட்டுத் தொண்டுபுரிந்தவர்கள். அந்தப் பாரம்பரியத்தின் தோன்றல் தான் நான். கனகதாசர் வீட்டு வேலையை எனக்குக் கொடுத்தார். அந்த வேலைக்குக்கூட விண்ணப்பங்கள் கிராமத்திலுள்ள அத்தனைபேர்கள், அனைவரிலும் நான் அவருக்குத் தகுந்த வேலையாள் அல்லன். ஆனால் பாட்டன், பூட்டன், முப்பாட்டன் காலத்து நம்பிக்கை தான் என்னை அவர் அமர்த்திக் கொள்ளும் நிலையை ஏற்படுத்தியது.

கனகதாசர் வீட்டில் மந்தைகள் அநேகம். அவைகளை மேய்ப்பதுதான் என் வேலை. அதுவே என்னைக் கவர்ந்த தொழில். அவைகளைத் திரிய விட்டு மர மறைவிலே தூங்கி விடுவேன். அந்தியைக் கண்ட அவை என்னை எழுப்பி விடும்.

அந்தக் கால் நடைகளில் சில வயது சென்று ஒட்டி உலர்ந்து முட்டிதட்டிக் கொண்டிருந்தன. அவைகள் வயது போய் வறண்டு கிடந்தன. நானோ...... வாலிபத்திலேயே வெம்பிய மாங்காய்தானே!

கனகதாசர் வீட்டில் வேலையை ஒப்புக் கொண்டதும் என் உருவ அமைப்பில் சில மாற்றங்களும் செய்து விட்டார்கள். தலையிலுள்ள புளியங்காய்கள் மறைந்து, புத்த பிக்குகளின் தலையாகியது.

கால வெள்ளம் தன்பாட்டுக்கு ஓடிக்கொண்டிருந்தது. வாழ்க்கையின் பெரும் பகுதியைக் கனகதாசர் வீட்டு மாடுகளுடன் கழித்துவிட்டேன்.

பூலோக சுவர்க்கமென்று சொல்கிறார்களே அதை நான் என்றுமே அடைந்ததில்லை. இனிமேல் அது சாத்தியமானது மல்ல.

நண்பனே இல்லற வாழ்வில் அமிழ்ந்து பின் அகற்றியவர்களுக்குத்தான் துறவறத்தின் மோட்ச உலகம் திறக்குமென்று சொல்லுகிறார்களே!

உலக இன்பங்களை அனுபவியாது மாண்டவர் பேயாய், பஞ்சமியாய் உருவெடுப்பார்களென்று சொல்லுகிறார்களே; அப்படியானல் செத்த பின்புமா சித்திரவதைகள்! ஐயோ!

இன்று நான் என்னை, எனக்கென எதுவுமற்ற அனாதையாகச் செத்துக் கொண்டிருக்கிறேன். என் நாக்கை நனைப்பதற்குக்கூட ஒரு சொட்டுத் தண்ணீர்கூட ஊற்றுவாரில்லாமல் துடித்துக் கொண்டிருக்கிறேன்.

என் சாவு நண்பனே இந்தக் கடைசி வரையாவது என் போன்றவர்களது மறைவின் மர்மத்தைப் பார்த்துக் கொள்கிறாயல்லவா?

இந்த நிலையில் நான் எதைத்தான் எனதென்று சாகாமல் வைத்துச் சாவேன்.

பிறந்தேன்; இறக்கிறேன். என் சாவு நண்பனே நீ என்னை உணருகிறாய்; நான் உன்னை உணருகிறேன்.

என் ஆசையின் ஏக்கங்களைத் தான் விட்டுச் செல்கிறேன். என் போன்றவர்களின் இதயத்தில் ஊற்றெடுக்கும் உணர்ச்சிகள் உள்ளேயே சங்கமிக்க வேண்டும். அப்படித்தானே.

என்னுள்ளே உண்டாகி என்னுடன் ஐக்கியமாகப் போகின்ற உணர்ச்சிகள் அனைத்தும் வெளியுலகத்துக்கு ஏன் கேட்கவேண்டும்?

சதா பொருமிக் கொண்டிருக்கும் அனைத்தும் ஸ்தம்பித்து ஒன்றாக ஆக்கி வைக்க வந்த சாவே, என்னை அணைத்துக் கொள்.

நீயும் நானும் ஒன்று. எட்ட நின்றாலும் உன்னை நோக்கிச் சிறுகச் சிறுக வந்த என்னை நீ பூரணமாக ஆட்கொள்ள வந்தாயல்லவா?

எல்லோருக்கும் உரிய ஒருவன் தானே நீ. இன்று இல்லாவிடில் நாளை அவர்கள் வருவர்! உன்னுடன்தானே சங்கமித்தாக வேண்டும்!

## தெய்வ மணங்கமழும் திருப்பதி

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

வில் அந்த இனிய பாடலோடு நிறுத்தாமல் மேலும் எம் கல் மனங்களையும் எம்பெருமான் சந்நிதியில் உருக்க அமைந்த முறையிலே அவ்வடியார் பாடிய பாடலை ஈங்கே குறிப்பிடாதுவிட முடியவில்லை.

"வில்லார் வரையாக மாநாகம் நாணாக வேடங்கொண்டு, புல்லார் புரமூன் றெரித்தார்க் கிடம்போலும் புலியுமானும், அல்லாத சாதிகளும் அங்கழல் மேற் கைகூப்ப அடியார் கூடிச் செல்லா வருநெறிக்கே செல்ல அருள்புரியுந் திருநணாவே". சைவம் போற்றும் சிவபிரான் திருக்கருணைதான் என்னே! மானிடரும் தேவரும் கந்தருவருமோ அவனைக் கும்பிடுகின்றனர்? அற்ப விலங்குகளும்— எல்லாவற்றிலும் தாழ்ந்தனவாக மதிக்கப்படும் குளிர்ந்த இரத்தமும் முதுகெலும்புமற்ற பாம்புகளுமல்லவா — அவனை வழிபட்டு உய்கின்றன.

### சைவ நன்மக்கள் தலையாய கடன்

சைவ நன்மக்களே தூய தெய்வ மணங்கமழும் இத் திருப்பதிக்கு யாத்திரை செய்து தூய பாலாவியிலே நீராடிக் கௌரி சமேத கேதீச்சரப் பிரபுவைக் கும்பிடுவதோடு கோயிற்றிருப்பணிக்கு இயன்ற பொருளுதவி செய்தல் நாவலர்பெருமான் வாழ்ந்த நம் நாட்டவர் கடனன்றோ? தேவையற்ற முறையிலே கோவிலுக்கு விழா எனச் சாட்டி வீண்வேடிக்கைகளிலும் ஏனைய கேளிக்கைகளிலும் பொருட்செலவுசெய்யும் நம்மவர் அப்பொருளின் ஒரு பகுதியையாவது நல்வழியிலே தாமும் தம் சந்ததியும் உய்வெய்தக் கேதீச்சரநாதன் திருப்பணிக்கு உதவுதல் அரும் பெருங் கடனன்றோ?

"கேடிலாத கேதீச்சரந் தொழுதெழக் கெடுமிடர் வினை தானே."


யாழ்ப்பாணம்

ஐக்கிய இலாப நிதி

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை
மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்
க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்
கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்
நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

எஸ். கனகசபை
சிருப்பர்

Std. 14.



தூய வெண்மைக்கு

வீனஸ் சோப்

சிறந்தது

வீனஸ் சோப் தொழிற்சாலை

269, கே. கே. எஸ். வீதி, :: யாழ்ப்பாணம்.

அருள்வழி

# "சாமியாக ஓடிப்போவேன்"

ஒரு கிராமம், அங்கே ஓர் அந்தணர். அடிக்கடி அவர் மனைவியுடன் சண்டையிடுவார். "நான் சொல்லுகிறபடி நடக்காவிடில், உன்னைத்துறந்து **பவர் சுவாமியிடம்** சென்றுவிடுவேன் நீ பிறகு அவஸ்தைப்படுவாய்" என்று தினசரி பயமுறுத்தி வந்தார். பாவம், இப்படி எச்சரிக்கும்போது அவர் மனைவி மிகவும் துக்கமடைவாள்.

ஒரு நாள் பவர் சுவாமி, பிட்சைக்காக அந்த வீட்டுக்கு வந்தார். அந்தணர் வீட்டிலில்லை. மனைவி வந்து தன் துக்கக் கதையை அவரிடம் சொல்லி அவரது யோசனையைக் கேட்டாள். "உங்கள் புருஷன் வெளியேறிவிடுவேன் என்று பயமுறுத்தினல், 'இப்போதே செல்லுங்கள்' என்று கூறி என்னிடம் அனுப்புங்கள். அவர் காதிலே ஒரு மந்திரம் உபதேசிப்பேன். அவர் சரியாகிவிடுவார்" என்ருர்.

சுவாமி சென்றுவிட்டார். வெளியில் சென்றிருந்த புருஷன் வந்தார். சமையலுக்கு நேரமாயிற்று. புருஷனுக்குக் கோபம் வந்தது. "இந்த மாதிரி தவக்கம் செய்தால், நான் ஓடிப்போய் சாமியாராகி விடுவேன்" என்ருர். உடனே மனைவி, "சரி சரி, தவங்கவேண்டாம். இப்போதே சாமியாராகலாம்" என்ருள்.

அந்தப் பிராமணர் திகைத்துவிட்டார். சில துணிமணிகளை எடுத்துக் கொண்டு வீட்டை விட்டுச் சென்ருர். பவர் சுவாமியிடம்நேரே சென்ருர். தமக்கு வைராக்கியம் வந்துவிட்டதாயும் தன்னை ஒரு சீடஞக அங்கீகரிக்க வேண்டுமென்றும் வேண்டினர். சுவாமியும் அவரை மகிழ்ச்சியுடன் சீடராக்கிக் கொண்டார்.

புதிய சீடனை ஆற்றுக்குச் சென்று தண்ணீர் கொண்டு வரச்சொன்னர் குரு. சீடன் ஆற்றுக்குச் சென்றிருக்கையில் அவரது தாலி கூறை எல்லாம் துண்டுதுண்டாகக்குரு கிழித்து மரத்தின்மீது வீசிவிட்டார். பசியுடன் பிராமணர் திரும்பிய போது, கோவணம் மட்டும் கட்டிக் கொள்ளும்படி குரு கேட்டார். குருவும் பத்தினியும் கிழங்குகளையே சாப்பிட்டனர். அதையே உண்ணும்படி அந்தண சீடனுக்கும் கொடுத்தனர். ருசிக்கவில்லை, இனிப்பு வேண்டுமென் ருன்சீடன். வேப்பிலையைப் பறித்துக் குரு கொடுத்தார். வேப்பிலையைச் சீடன் சாப்பிடமுடியவில்லை. "வீட்டிலிருந்தால் பழைய ரொட்டியாவது கிடைக்குமே, ஏன் இந்த கஷ்டத்தை வரவழைத்துக் கொண்டோம்" என்று கூறி, அழுதுவிட்டான்.

குரு சொல்லுவார். "உனக்கு நான் புலனடக்கம் பற்றிய முதல் பாடம் கற்பித்தேன். நீ அழ ஆரம்பித்துவிட்டாய். நீ உலக வாழ்க்கையிலே மனத்தை அடக்கி வாழப்படாது? ஏன் மனைவியைப் பயமுறுத்தி வந்தாய்? துறவியாகுவது சுலபமென்று நினைத்தாயா?" என்று கேட்டார்.

பிராமணன் மன்னிப்புக் கேட்டு இனி மனைவியுடன் சண்டை போடுவதில்லை என்று உறுதி கூறினர். கோவணத்துடனேயே அவரைக் குரு வீட்டுக்கு அனுப்பினர். முதலிலேயே குரு, சீடனின் வீட்டுக்குச் செய்தி அனுப்பியிருந்தார். மனைவி, வீடுதிரும்பிய தன் புருஷனுக்கு துணியும், நல்ல உணவும் அளித்தார். அது முதல் புருஷன் தன் மனைவியுடன் சச்சரவில்லாமல் சந்தோஷமாக வாழ்ந்துவந்தான்.

# யேசுநாதரின் கட்டளை

உலகின் பெரியார்களில் ஒருவராக ஸ்கொவெயிஸ்றெர் விளங்குகின்ருர். இசை, தர்க்க சாஸ்திரம், வைத்தியம் முதலிய துறைகளிற் பாண்டித்தியம் பெற்றுத் திகழ்ந்தபோதிலும், ஆபிரிக்காவிலே உள்ள மக்களுக்குத் தொண்டுபுரிவதற்காக இவர் இத்துறைகளில் கிடைக்கக்கூடிய உயர்ந்த பதவிகளையும் துறந்தார். யூசுப் கார்ஷ் என்னும் பிரபல படப்பிடிப்பாளர் அவருடன் நடாத்திய ஒரு பேட்டியின் விபரம் இங்கு வெளியிடப்பட்டுள்ளது.

* * *

அல்பேர்ட் ஸ்கொவெயிஸ்றெரைப்பற்றி உலகம் பல கதைகளைக்கேட்டறிந்துள்ளது. அவர் ஒரு பெரிய மகான். அவரிடம் நான் சென்றபொழுது, அவரைக்காண நான் தகுதியுள்ளவனே என்ற ஐயமே எனக்கு உண்டாயிற்று. பல துறைகளிலும் வித்துவத்தன்மை பெற்றும், ஆபிரிக்காக் காடுகளிலுள்ள மக்களுக்கு அரும்பணிபுரியச்சென்ற அப்பெரியாரை நான் எப்படிக் கணிக்க முடியும்?

நீண்ட காலத்திற்குப் பின்னரே, டக்டர் ஸ்கொவெயிஸ்றெரைக் காணும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அவர் ஸ்வீடனுக்கு நோபல் பரிசு பெறப்போவதற்குமுன் பிரான்ஸிலுள்ள அவருடைய பிறந்த இடமாகிய கன்ஸ்பாக் என்னும் இடத்திற்கு வந்திருந்தார். அவரைச் சந்திக்க முடிந்தது எனது நல்ல காலந்தான்! ஸ்கொவெயிஸ்றெரின் நூல்களைப் படித்து அவரைத் தூரத்தில் இருந்தபடியே போற்றிய ஒருவரின் மனத்தில், அவரை நேரிற்காணின் அவருடைய சிறப்புக் குறைந்து காணப்படுமோ என்னும் எண்ணம் தோன்றலாம். ஆனல், ஸ்கொவெயிஸ்றெர் விஷயத்தில் அப்படி எதுவும் இல்லை.

அவரின் அருகில் நான் இருந்தபொழுது, அவருடைய பரந்த ஞானத்தின் ஒளி நிலவுவதை உணர்ந்தேன். எளிய தன்மையுள்ள ஞானமாதலால், சக்தி மிகுந்து காணப்பட்டது. தன் கையிலிருக்கும் தொழிலில் முற்றுமுழுதாகக் கவனம் செலுத்தும் இம்மனிதரின் அபார ஆற்றலே என்னைக் கவர்ந்தது. நான் என்னுடைய 'கமெரா'வைச் சரிப்படுத்தும் நேரங்களில், அவர் தமது எழுத்து வேலையில் இறங்கிவிடுவார். பின், நான் ஆயத்தம் என்றதும், எனக்குத் தன் முழுக்கவனத்தையும் அளித்துவிடுவார்.

நான் ஸ்கொவெயிஸ்றெரை மிகவும் கூர்மையாகக் கவனித்தேன். அவர் முகத்தைவிட, அவர் கைகளையே நான் கூர்ந்து கவனித்தேன். ஏனெனில், முகத்திலும் பார்க்கக் கைகளே ஒருவரின் உளப்பாங்கை வெளிக்காட்டும். அவருடைய கைகள் ஒரு கலைஞனுடையதும், தீர்க்கதரிசியினுடையதாகவும் தோன்றின.

யேசுநாதரின் உபதேசங்கள் போன்று, அவரும் ஆபிரிக்க மக்களுக்குப் பல உபதேசங்களைக் கூறியது ஞாபகத்திற்கு வரவே, யேசுநாதர் இன்று இவ்வுலகில் தோன்றில், இவ்வுலக மக்கள் அவரை எந்த முறையில் வரவேற்பார்கள் எனக்கேட்டேன்.

அதற்கு அவர் ஆறுதலாகப் பதிலளித்தார்: "மக்கள் அவரை விளங்கவே மாட்டார்கள்."

பத்துக் கட்டளைகளுள் எதை அவர் முக்கியமானதெனக் கருதினர் என்று நான் அவரைக் கேட்டேன்.

இதைக்கேட்டதும் சிலை போன்று செதுக்கப்பெற்ற அவருடைய முகம் ஒளி வீசியது.

"யேசுநாதர் ஒரேயொரு கட்டளையைத்தான் உலகிற்கு அளித்தார். அதுதான் "**அன்பு**" என்ருர் அம்மகான்.

(ரீடேர்ஸ் டைஜஸ்ற்)

# இவ்வாரம் எப்படி?

—எம். எஸ். மகேஸ்வரன்—

| | | | |
|---|---|---|---|
| கே. | | சூ. பு. | வெ. |
| | இவ்வாரக் கிரகநிலை | | செ. |
| | | | |
| சனி | வியா | | ராகு |

**இங்கு தரப்பட்டுள்ள இராசிகளின் பலன்கள் யாவும் பொதுப் பலன்களாதலால் இவற்றின் தன்மைகள் ஒவ்வொருவரின் தசா புத்திகளின் தன்மைக்கேற்றவாறு மாற்றம் அடைவனவாகும்.**

(30-5-59 — 5-6-59)

**மேடம்**: (அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்) சுகவீனமும் குடும்பக் குழப்பங்களும் ஏற்பட இடமுண்டு. நீர் முயன்றுழைப்பதோடு புதிய பொறுப்புக்களையும் மேற்கொள்ள வேண்டிவரும். பணம் சம்பந்தமாக நல்ல வாரம், நண்பர்கள் அதிக உதவியாயிருப்பர். பெரியோர் மதிப்பு அதிகரிக்கும்.

**இடபம்**: (கார்த்திகை 2, 3, 4-ம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்) வியாபாரத்துறையில் முன்னேற்றங்களை எதிர் பார்க்கலாம். அனேக நாட்களாகமனத்திற் குடி கொண்டிருந்த எண்ணம் இவ்வாரத்தில் நிறைவேறும். திருடர் பயம் உண்டாகலாம். எதிர்பாராத முறையில் சில கருமங்கள் நிறைவேறும்.

**மிதுனம்**: (மிருகசீரிடம் 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3-ம் பாதம்) உத்தியோகத்துறையில் நல்ல வாரம். பழைய முதலீடுகள் மூலம் அதிக இலாபம் அடைவீர். தனலாபங்களும் போட்டி இடுவோரை வெல்லுவதும் நிச்சயம். தேகசுகம் பற்றி இவ்வாரம் கவனமாயிருக்கவும். சுற்றத்தவர் தொந்தரவு தருவார்கள்.

**கடகம்**: (புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்) புது முயற்சிகளிற் சிக்கியும் எதிரிகள் அழிவும் ஏற்படும். இகழ்ந்து பேசுபவர்களைப் பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டும். களியாட்டங்களில் அதிக விருப்பு உண்டாகும். நண்பர்களும் உறவினரும் உதவியாயிருப்பர்.

**சிங்கம்**: (மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம்) இன பந்துக்களின் கொண்டாட்டங்கள் இவ்வாரம் அதிகரிக்கும்; உத்தியோக உயர்வினல் பெரு மக்களின் நட்பு அதிகரிக்கும். வியாபாரத்துறையில் அதிக வருமானமுண்டு. வாகனங்கள் மூலம் விருத்தி உண்டாகும். தடைபட்டிருந்த சில கருமங்கள் சடுதியாய் நிறைவேறும்.

**கன்னி**: உத்தரம் 2, 3, 4ம் பாதம், அத்தம், சித்திரை 1, 2-ம் பாதம்) அரச சேவைகளில் மாற்றங்கள் ஏற்படும். எக்கருமத்திலும் மனமானது ஒரே வழியிற் செல்லாதிருக்கும். இனபந்துக்களின் கொண்டாட்டங்களால் மனக்கவலை யுண்டாகும். அன்னியர் நட்புக் கிடைக்கும். திருடர்கள் தொல்லை யுண்டாகும்.

**துலாம்**: (சித்திரை 3, 4-ம் பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதம்) வியாபாரத்துறைகளில் அதிக பிரயாசை ஏற்படும், உத்தியோக உயர்வினல் பெரு மக்களின் நட்பு அதிகரிக்கும், தடைபட்டிருந்த சில கருமங்கள் சடுதியாக நிறைவேறும், புதுச் சினேகித விருத்திகள் வார இறுதியில் உண்டாகும்.

**விருச்சிகம்**: (விசாகம் 4-ம் பாதம், அனுஷம். கேட்டை) புது முயற்சிகளிற் சித்தியும் எதிரிகள் அழிவும் ஏற்படும். நண்பர்கள் அல்லது இனத்தவருடன், சில சச்சரவுகளுக்கு இடமுண்டு. குடும்பக் கருமங்கள் அதிக மகிழ்ச்சியைக் கொடுக்கும், செலவும் அதிகரிக்கும்.

**தனுசு**: (மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் பாதம்) சினேகிதர்களால் நன்மைகள் வந்தடையும், சில கஷ்ட நஷ்டங்கள் தோன்றி மறையும், அன்னியர் நட்பு அதிகரிக்கும், உத்தியோக மாற்றம் ஏற்படலாகும். பெண்களின் உறவுகளால் தொல்லைகள் தோன்றி மறையும்.

**மகரம்**: (உத்தராடம் 2, 3, 4-ம் பாதம் திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்) இவ்வாரத்தில் பல முக்கிய கருமங்களில் தலையிட வேண்டி நேரிடும். பிரயாசத்திற் கேற்ற வருமானம் கிடைப்பது அரிதாகும். புதுச் சினேகித விருத்திகள் வார இறுதியில் உண்டாகும், பெண்களினல் சில தொல்லைகள் விளையும்.

**கும்பம்**: (அவிட்டம் 3, 4-ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் பாதம்) குடும்பக் கருமங்கள் இவ்வாரம் குழப்பமாயிருக்கும், சமயக் கோட்பாடுகளில் விருப்புக் குறையும். நினைத்த கருமங்கள் மிகுந்த பிரயாசையின் பேரில் நிறைவேறும், கொடுக்கல் வாங்கல் மூலம் பகைமை அதிகரிக்கும். நடந்த கருமங்களில் வியாச்சியத் தொல்லைகள் ஏற்படக்கூடும்.

**மீனம்**: (பூரட்டாதி 4-ம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி) தேக சுகம் அவ்வளவு திருப்திகரமாய் இருக்கமாட்டாது. உம்முடைய சிக்கல்களைத் தீர்ப்பதில் வருத்தப்படுவீர். நண்பருடன் பிழை எண்ணங்களுக்கும் இடமுண்டு. ஆனல் பணத்துறையில் இது ஒரு நல்லவாரம்.

உங்கள் கார் பற்றறிகளைத் திறமான முறையில் "சார்ச்" செய்வதற்கும் யந்திரங்களைப் பழுது பார்ப்பதற்கும் ஸ்பிறே பெயின்றிங் வேலைகட்கும் உகந்த இடம்.




சுந்தரம்ஸ் பற்றறி சேவிஸ்

402 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

சினிமா உலகம்

# தென் இந்தியச் சினிமா வர்த்தகக் கூட்டுறவுச் சங்கம்

ஏப்ரல் 26-ஆம் திகதியன்று நடைபெற்ற தென் இந்தியச் சினிமா வர்த்தகக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் 1959—60-ஆம்ஆண்டுகளுக்குப் பின்வரும் உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்; திரு. பி. நாகிரெட்டி; உபதலைவர்: திரு. ஏ. ராமையா; கௌரவ செயலாளர்கள்; திரு. பி. எஸ். ராமகிருஷ்ண ராவ், திரு. வி. ஸி. சுப்புராமன்; கௌரவ பொருளாளர்: திரு. பி. எஸ். ராமகிருஷ்ண ராவ்.

### "முட்டாள்" ஜுலை மாதம் முடிவடையும்

இந்திய—இத்தாலிய கூட்டுறவின் முதல் தயாரிப்பான "முட்டாள்" என்ற படம் ஜுலை மாத முடிவில் வெளியிடப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது. பிரபல வட இந்திய ஹாஸ்ய நடிகரான ஐ. எஸ். ஜோகர் என்பவர், தான் இப்படத்தில் நடிப்பதுடன், டைரக்ஷனையும் தன் கையிலேயே பொறுப்பேற்றுள்ளார். படத்தின் தயாரிப்பாளரும் அவரே.

### 'நாரதர்' வருகை

சென்னையிலிருந்து வெளியாகிவந்த "நாரதர்" எனும் சினிமாப்பத்திரிகை மீண்டும்நாரதர் ஸ்ரீநிவாசராவ்அவர்களின்சொந்தமுயற்சியால்,பத்திரிகை உலகில் தோன்றியுள்ளது.

மாதம் இருமுறை வெளியாகி வரும் இப்பத்திரிகையிற் சினிமாசம்பந்தமான கட்டுரைகளும் கலை விமர்சனங்களும், கதைகளும், புகைப்படங்களும் முக்கிய அம்சங்களாகத் திகழ்கின்றன.

மேகத்திடை மறைந்திருந்து வெளியே வருவதுபோல,'நாரதர்' இப்பொழுது முன்தோன்றியிருக்கிறார். இப்போதைக்கு அடக்கமாக 1 திங்கள் இருமுறை வெளிவருகிறார். வாசகர்களின் ஆதரவு பெருகினால் இன்னும் அடுத்தடுத்து மலரலாம் என ஆசிரியர் வாசகர்களைப்பார்த்துக் கூறுகின்றார். கலைப்பணியாற்றும் இப்பத்திரிகையை அறிஞர்களும், கலைஞர்களும் வரவேற்று வாழ்த்துகின்றனர். நாமும் வாழ்த்துகின்றோம். தனிப்பிரதி விலை 20 காசு; விலாசம்: 77, ஜெனறல் பற்றேஸ் ரோடு, சென்னை-2.

### சினிமாஸ்கோப்

யாழ்ப்பாணம் ரீகல் படமாளிகையில் சினிமாஸ்கோப் படங்கள் சிறந்த முறையில் காண்பிக்கப்பட்டு வருகின்றன. "பிரிட்ஜ் ஒன் திரிவர் குவாய்" என்னும் சினிமாஸ்கோப் படம் சனிக்கிழமையன்று ஆரம்பமாகியிருக்கிறது. இப்படத்தில் பெரும்பகுதி இலங்கையிலேயே படமாக்கப்பட்டது.

## "நான் வாழ விரும்புகிறேன்"

ஹாலிவூடில் நடைபெறும் வருடாந்த சினிமாப் பரிசளிப்பு விழா வெகு விமரிசையாக நடைபெறுவது வழக்கம். அங்குள்ள நடிகர்கள், நடிகைகள், டைரக்டர்கள், மற்றும் தொழிலாளர் எல்லோரும் இவ்விழாவிற்குச் சமுகமளித்து வெற்றி பெறும் நடிக, நடிகைகளுக்குத் தங்கள் பாராட்டல்களைத் தெரிவிப்பர். இவ்வருஷப் பரிசளிப்பு விழாவிற் சிறந்த நடிகையாகச் சூஸான் ஹேவார்ட் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் சிறப்பாக நடித்துள்ள படத்தின் பெயர் "நான் வாழ விரும்புகிறேன்" என்பதே. அவர் இப்பொழுது என்ன சொல்கிறார் தெரியுமா? இனி, தான் நடிப்புத் தொழிலை அறவே விட்டு விடப் போகிறாராம். காரணம்? "நான் எனது கணவனை மிகவும் நேசிக்கிறேன். நான் எப்பொழுதுமே அவருடன் இருக்க விரும்புகிறேன்." அவர் "வாழ விரும்புகிறார்", அவ்வளவுதான்!

விளையாட்டுப் பகுதி

# இலங்கையில் முதல் முதலாகத் தூர ஓட்டப் பந்தயம்

## எல். ஸி. டயாஸின் மாபெரும் வெற்றி

இலங்கையின் முதல் முதல் தூர ஓட்டப் பந்தயம் சென்ற ஞாயிற்றுக்கிழமை நடந்தது. ஓட்டத்தில் பங்குபற்றியவர்கள் 26 மைல் 385 யார் தூரத்தை ஓடி முடிக்கவேண்டியிருந்தது. கொழும்பிலுள்ள றெயிட் அவென்யூவிலிருந்து தொடங்கிய இந்த ஓட்டம், பேராதனைப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் முடிவடைந்தது. இந்த ஓட்டப் பந்தயத்தில் திரு. எல். ஸி. டயாஸ் மிகத் திறமையுடன் ஓடி மாபெரும் வெற்றி ஈட்டினார். அவருடைய ஓட்டம் உலகரகத்தைச் சார்ந்ததாகும். அவர் தமது ஓட்டத்திற்கு எடுத்துள்ள நேரமான 2 மணித்தியாலம் 40 நிமிஷம், 53.5 விநாடிகள், சென்ற ஒலிம்பிக் விளையாட்டுகளின்போது வெற்றி பெற்ற வீரரான அலேயின் மிமூன் என்பவருடைய நேரத்திலும்பார்க்க 15 நிமிஷங்கள் தாம் அதிகப்படியானவை. இன்னும் சிறிது முயற்சி எடுத்தால், டயாஸ், உலகவீரர்களுள் முதன்மை ஸ்தானத்தை எடுப்பதில் கஷ்டம் இருக்காதென நம்ப இடமிருக்கிறது.

## ஒலிம்பிக் விளையாட்டுக் குழுவுக்குச் சவால்

21 சர்வதேச விளையாட்டுச் சங்கங்கள், ஒலிம்பிக் விளையாட்டுக்குழுவிற்குச் சவால் விடுத்துள்ளன. ஒலிம்பிக் விளையாட்டுகள் நடைபெறும் நாட்களில், அவற்றைப் பார்க்கவரும் ஏராளமான மக்களின் மூலம் கிடைக்கும் பணத்தொகையில் ஒருபங்கைத் தமக்கும் தருமாறும், அப்படித் தருவதற்குச் சர்வதேச ஒலிம்பிக்குழு மறுத்தால் தாம் இவ் விளையாட்டுகளில் பங்குபற்றாது விலகிவிடுவதாயும் இச் சங்கங்கள் கூறியுள்ளன. அத்துடன், இவ்வித நிலை ஒன்று ஏற்படின், சம்பந்தப்பட்ட தேசங்கள் ஒலிம்பிக் விளையாட்டுக்களுக்கு எதிராக வேறு உலகப்போட்டி விளையாட்டுக்களை நடத்தத் திட்டமிட்டிருக்கின்றனர் எனவும் அறியப்படுகிறது. இப்படி அவர்கள் ஒரு நடவடிக்கையை மேற்கொண்டால், சர்வதேச ஒலிம்பிக் விளையாட்டுகளுக்கு முடிவுகட்டும் முறையில் அமைந்தாலும் அமைந்துவிடலாம்.

### ஆசிய உடற்கட்டு வீரர்

ஜுன் மாதம் 7ஆம் திகதியன்று கொழும்பில் '1959ஆம் வருட ஆசிய உடற்கட்டு வீரர்' போட்டிக்கு ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இப் போட்டியில் இலங்கை உட்பட, தாய்லாந்து, பாகிஸ்தான், மலாயா, இந்தியா முதலிய ஆசிய நாடுகளும் பங்குபற்றும். இலங்கையில் முதன் முதலாக நடாத்தப்படும் இத்தகைய போட்டியை ஏற்படுத்தியவர்கள் இலங்கை உடல் வளர்ச்சிக் கலைச் சங்கத்தவரே. இப் போட்டி விகாரைமாதேவிப் பூங்காவில் நடைபெறும். கவர்னர்-ஜெனரல் சேர் ஒலிவர் குணதிலக்கா போட்டிக்குத் தலைமைதாங்குவார்.

### உதைபந்தாட்ட வீரர்களுக்குப் பாராட்டு

சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அனுராதபுரம், யாழ்ப்பாணம், திருக்கோணமலை, மட்டக்களப்பு மாவட்டப் பிரிவுகளுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வெற்றிவாகை சூடித் திரும்பிய மட்டக்களப்பு தெரிவுக் கோஷ்டியினரைப் பாராட்டும் முகமாக மட்டக்களப்பு நகரசபை சென்ற 17-5-59 இல் ஒரு பாராட்டு விழாவை நடாத்தியது.

மட்டக்களப்பு வெற்றிக் கோஷ்டியில் அங்கம்வகித்த 15 ஆட்டக்காரர்களுக்கும், பொது மக்கள் சார்பில், நகரசபைத் தலைவரான திரு. ஏ. எஸ். டி கனகசபை வெற்றிக் கிண்ணங்களை வழங்கினார்.

மட்டக்களப்பு மைதானத்தில் நடைபெற்ற இப்பாராட்டு விழாவைத் தொடர்ந்து, வாடி வீட்டில் தோட்ட விருந்தொன்றும் நடைபெற்றது.

வெற்றிபெற்ற கோஷ்டியொன்றை மட்டக்களப்பு நகரசபை பொதுமக்கள் சார்பில் பாராட்டுவது இதுதான் முதற் தடவையென்பது குறிப்பிடத்தக்கது.

## கல்லடி உப்போடையில் "மோகன்" விளையாட்டுக் கழகம்

"கைப்பந்தாட்டத்தின் தாயும், தந்தையுமான திரு. வில்லியம். ஜீ.மோகன் அவர்களின் பெயர் உங்கள் விளையாட்டுக் கழகத்துக்குச் சூட்டியுள்ளது குறித்து நான் பெருமைப் படுகின்றேன். திரு. மோகன் ஆரம்பித்து வைத்த கைப்பந்தாட்டம் அகில உலகெலாம் பரவியுள்ளது. அதுபோல் உங்கள் கழகப் புகழும் பரவ நீங்கள் ஐக்கிய உணர்ச்சியும் விளையாட்டுத் திறமையும் உள்ளவர்களாகத் திகழவேண்டும்".

இவ்வாறு கல்லடி உப்போடை இ. கி. ச. பெண்கள் பாடசாலைமண்டபத்தில் நடைபெற்ற "மோகன்" விளையாட்டுக் கழக அங்குரார்ப்பணக் கூட்டத்தின் போது தலைமை வகித்துப் பேசிய திரு. வே. கணபதிப்பிள்ளை ஆசிரியர் குறிப்பிட்டார்.

பின்வருவோர் புதுவருடஉத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு.கே. சிவகுரு. தலைவர்: திரு. எஸ். கனகரெத்தினம். உபதலைவர்கள்: திரு. வாளர்கள்: வ். கணபதிப்பிள்ளை, எல். சோமசுந்தரம், எஸ். கணேசபூபதி. இணைச் செயலாளர்: திரு. வி. நகாலிங்கசிவம், கே.எஸ். ஞானசூரியம். தனாதிகாரி: திரு. கே. சிவநேசன். விளையாட்டுத் தலைவர். திரு. கே. ஜே. சவுந்தரராசா: வி.உபதலைவர்: கே. பாஸ்கரன். மைதானச்செயலாளர்கள்:திரு வி.சின்னத்தம்பி, மெ. ஈ. தம்பி ஐயா. கணக்குப் பரிசோதகர்: திருக தங்கத்துரை.


மில்க்கோஸ்

குழந்தைகளை திடகாத்திரமாக வளர்க்கிறது




உங்கள் குழந்தையின் தேகாரோக்கியமே அதிமுக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம். உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால் ஊட்டமுடியாது போனால் அவனின் மெல்லிய ஜீரண உறுப்புகளுக்கு உகந்த போஷாக்களிக்கும் சிசு-உணவை அவனுக்கு ஊட்டுவதற்கு நிச்சயப்படுத்துங்கள்.

டாக்டர்கள், மில்க்கோஸ்தான் குழந்தைகளுக்கு இன்றிமையாத சிசு உணவு என்று கூறுவார்கள். மில்க்கோஸில் சரியான விகிதாசாரப்படி பிசிதம், கரிநீரகைகள், கொழுப்புச் சத்துகள், சேர்க்கப்பட்டிருக்கின்றன. மில்க்கோஸில் தேகவளரச்சியையும் நல்ல தேகாரோக்கியத்தையும் தரும் மேலதிக விட்டமின் சத்துகளும், இரும்பு சத்துகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

முழு ஆடை நிரம்பிய பசுப்பாலிலிருந்து விஞ்ஞானரீதிப்படி தயாரிக்கப்படும் இந்த மில்க்கோஸ் இலங்கையின் சீதோஷ்ண நிலைமைக்கேற்றவாறு விசேஷமாகப் பொதியப்பட்டு—உங்களுக்கு சுத்தமாகவும் பத்திரமாகவும் கிடைக்கிறது.

உங்கள் குழந்தைகளை ஆரோக்கிய குழந்தைகளாக வளர்க்க அவர்களுக்கு இன்றே மில்க்கோஸ் கொடுக்க ஆரம்பியுங்கள்.



மில்க்கோஸ்

இன்றியமையாத சிசு-உணவு

ஹார்லிக்ஸ் தயாரிப்பாளரால் தயாரிக்கப்படுகிறது.

HLM 3487

# தத்தளிக்கும் உலகுக்கு வள்ளுவன் காட்டும்வழி

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாகும். கம்பன் கற்பனையும் அவ்வாறே அமைந்துள்ளது. கவிஞன் ஒருவனின் கற்பனை, சொந்தநாடு,சூழ்நிலை இவற்றை அடிப்படையாகக் கொண்டே எழுகின்றது. ஒரு நாட்டுக்கு வீழ்ச்சி ஏற்படுவது உட்பகையினால் என்பதை வள்ளுவன் நன்ருகஅறிவுறுத்தியுள்ளான்.விளைவோ, செல்வமோ இல்லாவிடினும் பாதகமில்லை. ஆனல், நாட்டில் உட்பகை இருக்கவே கூடாது. வள்ளுவன் வழிநின்று அவன்கண்ட கற்பனை நாட்டின் ஒருபகுதியையாவது சிருஷ்டித்தோமானல், அன்றே நாம் உண்மையான தமிழராவோம்.

### ஞானசம்பந்தர் வருகை

இம்மூன்றுநாளைய விழாவிலும் கலந்துகொள்வதற்காகச் சென்னையிலிருந்து வந்திருந்த திரு. அ. ச. ஞானசம்பந்தன் சென்ற ஆண்டில் நடைபெறவிருந்த திருவள்ளுவர் விழாவிற் கலந்துகொள்ளுவதற்குச் சகல ஆயத்தங்களையும் செய்திருந்தார். ஆனல் இந்நாட்டில் நடைபெற்ற வகுப்புக் கலவரத்தின் காரணமாகப் பிரயாணத்தை நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. முதனள் தலைமையுரை நிகழ்த்திய கா. பொ. இரத்தினம் அவர்கள் திரு. அ. ச. ஞானசம்பந்தன் அவர்கள் ஏனைய தாய்நாட்டு அறிஞர்கள் போலன்றி யாழ்ப்பாணத்தில் உள்ளாருக்குப் பலவழிகளிலும் உதவுவதற்கு முன்வருபவர் என்றும் அந்தவகையில் அவர் இதுவரை உழைத்து வந்துள்ளார் எனவும் தெரிவித்தார்.

விழாவின் முடிவுரையாக ச. சுப்பிரமணியம் பேசியபின் திரு. பொன். முத்துக்குமாரன் அனைவருக்கும் நன்றி கூறினர்.

மூன்று நாட்களும் நடந்த இசைநிகழ்ச்சிகள் நல்விருந்தாக அமைந்திருந்தன.

### ஓவியக்காட்சி

இவ்விழாவின்போது, யாழ் கவின்கலைக் கழகத்தினர் அமைத்திருந்த திருக்குறள் ஓவியக் கண்காட்சி அனைவரையும் கவர்ந்தது. திருக்குறட் கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டு, அவர்கள் புனைந்த ஓவியங்கள் கருத்தைத் தூண்டும் முறையில் அமைந்திருந்தன எனப் பேராசிரியர் ஞானசம்பந்தன் நமது நிருபரிடம் தெரிவித்தார். மற்றும் பல அறிஞர்கள் யாழ் கவின் கலைக் கழகத்தினர் இயல், இசை; நாடகம் ஆகிய துறைகளிற் செய்துவரும் பணிகளைப் பாராட்டியதுமன்றி, அக்காட்சி மூலம்காட்சிப்புலனுக்கு விருந்தளித்த ஓவியங்களின்சிறப்பையும் பாராட்டினர்.

## ஜெனிவா மாநாடு

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்லூரிகள் அமைக்கப்பட்டு கல்வி போதிக்கப்படும். இச்சட்டம் தென்னபிரிக்காவின் இனத் துவேஷ சட்டங்களைவிட மிகவும் கொடியதாயிருக்கின்றது. மொத்த சனத் தொகையில் ஏறக்குறைய 70 வீதத்தவர் சுதேசிவாசிகள். அவர்களை 10 வீத அளவு நிலப் பிரதேசத்தில் அடைத்துவைத்து அடிமைக் கல்வி போதிக்க வகை செய்யும் இச்சட்டத்தை அநியாயம், அநீதி, அக்கிரமம் போன்றபதங்களினலேயே வர்ணிக்கவேண்டியிருக்கிறது.

### திரு. டல்லஸ் மறைவு

சென்ற பிப்ரவரி மாதந்தொடக்கம் நோய்வாய்ப்பட்டு சிகிச்சைபெறவந்த முன்னள் அமெரிக்க இராசாங்க மந்திரியாகிய திரு.ஜோன் வோஸ்டர் டல்லஸ் 24-5-59-ல் காலமானர். இறக்கும்போது அவருக்கு வயது 71. அவருடைய மரணக் கிரியைகள் தேசிய முறையில் 27-5-59-ல் நடைபெறும்.

# நம்பிக்கையூட்டும் சூழ்நிலை

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் ஏற்படும் எனக் கூறக் கூடியதாக இருக்கிறது.

### பிரிவினைகால நிதித் தகராறு

இந்தியா—பாகிஸ்தான் பிரிவினைகால நிதித் தகராறு குறித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு இந்திய நிதி அமைச்சர் திரு. மொரார்ஜி தேசாய் பாகிஸ்தான் நிதி அமைச்சர் ஜனப் முகம்மது ஷொயீபுக்கு விடுத்த அழைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஜனப் ஷொயீப் புதுடில்லிக்கு ஜுலை மத்தியில் வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

### ஒரிசாவின் புதிய அரசாங்கம்

மூன்று மத்திரிகள அடங்கிய காங்கிரஸ்—கனதந்திர பரிஷாத் கூட்டு அரசாங்கம் ஒரிசா இராச்சியத்தில் 22-5-59 இல் பதவியேற்றிருக்கிறது. முன்பு ஒரிசாவின் முதலமைச்சராக இருந்த டாக்டர் ஹரி கிருஷ்ண மேதாப் தொடர்ந்து முதலமைச்சராக இருந்துவருகிருர். திரு. இராதாநாத் இராத் (காங்கிரஸ்) திரு. ஆர். என். சிங்தேவ் (கனதந்திர பரிஷாத்) ஆகியோர் ஏனைய அமைச்சர்களாவர். இந்தியாவில் கடமையாற்றியவரும் இராச்சிய மந்திரிசபைகளுள் ஒரிசாவின் புதிய மந்திரிசபையே மிகச்சிறியது.

### நேபாளத்தில்

இந்தியாவின் வடக்கு மலைப் பிராந்திய அயல் நாடாகிய நேபாளத்தில் புதிய அரசியல் திட்டப்படி நடைபெற்ற பொதுத்தேர்தலில் நேபாள காங்கிரஸ் அதிக ஸ்தானங்களைப் பெற்று வெற்றியீட்டியிருக்கின்றது. நேபாள காங்கிரஸ் தலைவரான திரு. பி. பி. கோயிராளா அமைக்கும் புதிய மந்திரிசபை 27-5-59 இல் பதவியேற்கின்றது. இம் மந்திரிசபையில் 8 மந்திரிகளும், ஒரு பெண்மணி உட்பட 11 உதவி மந்திரிகளும் இருப்பார்கள் எனத் தெரிகின்றது.

### புதிய காரீயப் படிவுகள்

காஷ்மீர் இராச்சியத்தில் புதிய காரீயப் படிவுகளும் கிப்ஸம் (Gypsum) படிவுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.


## புத்தகம் இலவசம்!



எவ்வித பலஹீனமாக இருந்தாலும் சரி, நீர் உமது ஆரோக்கியத்தைத் திரும்பவும் பெறலாம். இதுபற்றி எங்கள் புத்தகமான

'மூலிகளின் மூலம் திட ஆரோக்கியம்'

விளக்கங்கூறும். இன்றே இலவச புத்தகத்திற்கு எழுதவும்:

ஏக விநியோகஸ்தர்கள்:

ஏ. எம். பீ. எஸ். மருந்துச்சாலை
23/2, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

ஆண்கள், பெண்கள், மாணவர் முதலியோர்க்கும், பல்வேறு வயதினர்க்கும் நாங்கள் பலரக மருந்துகள் வைத்திருப்பதால் உங்கள் வயது முதலிய விபரங்கள் அனுப்பவும்.

இன்றே புத்தகத்துக்கு எழுதவும்.

**A. M. P. S. Medical Laboratory**
23/2, Stanley Road, : : Jaffna.




## மங்களகரமான 7-வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

மற்றும் 12 திரைகளில்

நட்சத்திரங்கள்:

- ★ எம். ஜி. ராமச்சந்திரன்
- ★ பி. பானுமதி
- ★ எம். என். நம்பியார்
- ★ பி. எஸ். வீரப்பா
- ★ எம். என். ராஜம்
- ★ பி. சரோஜாதேவி
- ★ எம். ஜி. சக்கரபாணி
- ★ டி. கே. பாலச்சந்திரன்
- ★ ஜே. பி. சந்திரபாபு
- ★ ஜி. சகுந்தலா
- ★ டி. பி. முத்துலெட்சுமி



டைரக்ஷன்: எம். ஜி. ராமச்சந்திரன்

சங்கீதம்: எஸ். எம். சுப்பையா

வசனம்: கண்ணதாசன்

ஸ்ருடியோ: வாகினி & விஜயா

பின்னணி: டி. எம். சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன், ஜிக்கி, பி. லீலா, பி. சுசீலா, டி. ராஜரத்தினம், ஜமுனராணி.

அற்புதக்கலையின் அழகுப் படைப்பு அனைத்தும் நிறைந்த கருத்துக் குவியல்

எம். ஜீ. ஆர். பிக்சர்ஸ்

# நாடோடி மன்னன்

சிலோன் தியேட்டேர்ஸ் ஸ்தாபனத்தார்

விரைவில் வெளியிடவிருக்கும் படம்!

சிவாஜி கணேசன்

பத்மினி


டி. ஆர். ராஜகுமாரி

எம். என். நம்பியார்

வி. ஆர். ராஜகோபால்

ஈ. வி. சரோஜா

முதலிய சிறந்த நட்சத்திரங்கள் நடிக்கும்



இப்படம் 1958ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட சிறந்த தமிழ்ப்படம் என இந்திய அரசாங்கத்தினரால் பரிசளிக்கப்பட்டது

# தங்கப் பதுமை

மகத்தான 5-வது வாரம்!. இன்னும் சில தினங்கள் மட்டும்

## சென்ட்ரல் (கொழும்பு) - சென்ட்ரல் (பருத்தித்துறை)

தினசரி மாலை 6-00, 9-30 மணி. சனி, ஞாயிறு பிற்பகல் 2-00 மணி. ஞாயிறு காலை 10-00 மணி

பிரிவுண்டு நிற்கும் சமூகங்களுக்கும், குடும்பங்களுக்கும் அறிவுரை கூறும் அருமையான சித்திரம்!

அனைவரும் பார்க்க வேண்டிய படம்!




- ★ எஸ். எஸ். ராஜேந்திரன்
- ★ பிரேம் நஸீர்
- ★ டி. பாலசுப்பிரமணியம்
- ★ வி. கே. ராமசாமி
- ★ எஸ். வி. சுப்பையா
- ★ பி. சரோஜாதேவி
- ★ கிரிஜா
- ★ சி. கே. சரஸ்வதி

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் 'ஈழநாடு' பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு மே மாதம் 30ம் திகதி வெளியிடப்பெற்றது.